REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜுலை 13 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 91 இல. 164 | Thursday 13, July, 2023 | 16 பக்கங்கள் | 50/-




## நல்லிணக்கத்தை உருவாக்கும் பணிகள் அடுத்த தலைமுறைக்கு செல்லக் கூடாது

### ஜனாதிபதியின் பிரதான நோக்கம் அதுவே என்கிறார் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க



இலங்கையில் நல்லிணக்கத்தை உருவாக்கும் பணிகளை அடுத்த தலைமுறைக்கு கையளிக்காமல், தற்காலத்திலேயே அதனைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாகும் என ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கம் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டு வருவதாகவும், அந்த பிரச்சினைகள் 06

## அரசின் நலன்புரி கொடுப்பனவுகளை பெறும் உயர் வருமானம் பெறுவோர்

### நலன்புரி திட்டத்தை அமுல்படுத்தி நீக்கப்படுவர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் உயர் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் 12 வீதமானோர் அரசாங்கம் வழங்கும் நலன்புரிக் கொடுப்பனவுகளை பெற்று வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். இது தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளதால், நலன்புரி கொடுப்பனவு சட்டத்தை 06

## சுவீடனில் புனித குர்ஆன் எரிப்பு சம்பவத்துக்கு ஜனாதிபதி கண்டனம்

### கருத்துச் சுதந்திரம் அமைதியின்மையை ஏற்படுத்தக் கூடாது



சுவீடனில் புனித குர்ஆன் எரிக்கப்பட்டதை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையில் அமைதியின்மைக்கு இடமளிக்க வேண்டாம் என்றும், தெற்கின் பூகோள விழுமியங்களுக்கு மதிப்பளிக்குமாறும் மேற்கத்தேய நாடுகளைக் கேட்டுக் கொண்டார்.

இரத்தினபுரி புதிய நீதிமன்ற 06

## UN மனித உரிமை பேரவையின் மீளாய்வு அறிக்கை

# இலங்கை பல விடயங்களை நிராகரிப்பதாக அறிவிப்பு

### ஹிமாலி அருணதிலக மனித உரிமை பேரவையில் தெரிவிப்பு



**எந்தவொரு பிரஜையும் கருத்துக்களை வெளியிடல், அமைதியான கூட்டங்களை நடத்துதல் என்பவற்றுக்கு உரிமை இலங்கையின் அரசியலமைப்பில் பாதுகாக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவிப்பு**

இலங்கை தொடர்பில் சர்வதேச மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள சமகால மீளாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பெருமளவிலான விடயங்களை நிராகரிப்பதாக மனித உரிமை பேரவையில் இலங்கை தெரிவித்துள்ளது.

எந்தவொரு பிரஜைக்கும் கருத்துக்களை வெளியிடுதல் மற்றும் அமைதியான கூட்டங்களை நடத்துவதற்கான உரிமை இலங்கையில் நடைமுறையிலுள்ள அரசியலமைப்பில் பாதுகாக்கப்பட்டுள்ளதென்பதை ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனீவாவிலுள்ள இலங்கையின் வதிவிடத் தூதுவர் ஹிமாலி அருணதிலக தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமை கவுன்ஸிலின் 53 ஆவது கூட்டத் தொடரின் 29 ஆவது அமர்வு நடைபெற்றுள்ள சந்தர்ப்பத்திலேயே இலங்கை தொடர்பிலான சமகால மீளாய்வு அறிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலேயே இலங்கை தூதுவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை, 2023 ஆம் ஆண்டு நாட்டின் 75 வருட சுதந்திரத்தை கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் நாட்டில் பொருளாதார நிலையான தன்மை தொடர்பில் சாதகமான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் வருடமாக இந்த வருடத்தை குறிப்பிட முடியும் அத்துடன் தேசிய ஒருமைப்பாடு மற்றும் 06

## இரத்தினபுரி நீதிமன்ற புதிய கட்டடம் திறப்பு



இரத்தினபுரி புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதி நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் நேற்று முன்தினம் (11) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம்.



02 **ஆட்டோக்களில் மாற்றம் செய்தால் கட்டணம்**
RMV ஆணையாளர் அறிவிப்பு

## டிஜிட்டல் மயமாகும் ரூபவாஹினி ஒளிபரப்பு



இலங்கையின் இறைமையுடனான ரூபவாஹினி ஒளிபரப்பை டிஜிட்டல் மயப்படுத்துவது தொடர்பான திட்டம் சம்பந்தமாக ஜப்பானினால் தயாரிக்கப்பட்ட தொழில்நுட்ப தர அறிக்கை நேற்று ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் கையளிக்கப்பட்டது. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட, மேலதிக செயலாளர் ஈ.எம். எஸ்.பி. ஜயசுந்தர, திட்டப் பணிப்பாளர் பிரசங்க ராஜபக்ஷ, ஜப்பானியத் தூதுவர் மிஷுகோசி ஹிடீகி மற்றும் ஜப்பானிய தூதுக்குழுவின் பிரதித் தலைவர் கட்சுகி கொட்டாரோ தலைமையிலான குழுவினரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர்.

## மாணவர்களுக்கான 'சுரக்ஷா' காப்புறுதி அடுத்த வருடம் முதல்

### கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் உறுதி



பாடசாலை மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட 'சுரக்ஷா' காப்புறுதி முறையை 2024ஆம் ஆண்டு மீண்டும் ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் உறுதியளித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் போது தற்போதைய ஜனாதிபதியின் 06

## யாழ். கொழும்பு நேரடி ரயில் சேவை 15 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பம்

### ஆசன முன் பதிவுகள் 15 ஆம் திகதிக்கு பின் ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாதை புனரமைப்புக்காக இடைநிறுத்தப்பட்டிருந்த அநுராதபுரம் ஓமந்தை வரையிலான ரயில் சேவைகள் எதிர்வரும் (15) முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து காங்கேசன்துறை வரையான நேரடி ரயில் சேவைகள் மீண்டும் வழமைக்குத் 06

### இரு நாடுகளது உறவில் சாதகமான மாற்றம்

## ஜனாதிபதி ரணிலுக்கு இந்தியாவில் பெரு வரவேற்பு காத்திருக்கிறது

### இலங்கை வந்த இந்திய வெளியுறவு செயலர் தெரிவிப்பு



இந்தியாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகத்தான வரவேற்பு காத்திருக்கிறது. ஜனாதிபதியின் விஜயம் இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் சாதகமான மாற்றத்துக்கான ஒரு புள்ளியாக அமையுமென, இந்திய வெளியுறவுச் செயலாளர் வினய் மோகன் குவத்ரா (Vinay Mohan Kwatra) 06

### ஹெரோயின் கடத்திய குடும்பஸ்தருக்கு

## 06 வருடங்களின் பின்னர் மரணதண்டனை விதிப்பு

### வவுனியா மேல்நீதிமன்றில் நேற்று தீர்ப்பு



யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ஹெரோயின் போதைப்பொருளைக் கொண்டு சென்ற குடும்பஸ்தர் ஒருவருக்கு ஆறு வருடங்களின் பின்னர் மரணதண்டனை வழங்கி 06

## யானை தாக்கி ஒரே நாளில் மூவர் பலி

### யுவதி உட்பட மூவர் பரிதாப மரணம்



வெவ்வேறு இடங்களில் காட்டு யானைகள் தாக்கி யுவதி ஒருவர் உட்பட மூவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். இம்மூன்று மரணங்களும் (11) பதிவாகியுள்ளதாக 06



02 எதிர்வரும் பெரும் போகத்தில்
**உரக் கொள்வனவுக்கு விவசாயிகளுக்கு பணம்**

## இரு மயக்க மருந்துகள் பாவனையிலிருந்து நீக்கம்

### புதிய மயக்க மருந்து இன்று நாட்டுக்கு

பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்திய இரு மயக்க மருந்துகள் பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அவற்றுக்குப் பதிலாக வேறு மயக்க மருந்தொன்றை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர், வைத்தியர் சமன் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். புதிய மயக்க மருந்து இன்று (13) நாட்டுக்கு வருமெனவும் அவர் கூறினார்.

கடந்த காலங்களில் சில வகையான மயக்க மருந்தைப் பயன்படுத்தி சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட பெண்கள் சிலர், உயிரிழந்தனர். இதையடுத்து, மயக்க மருந்து தொடர்பில் சுகாதார தரப்பினர் தமது கவனத்தை செலுத்தியிருந்தனர்.

02 இலங்கை கடற்படையினருக்கு எதிரான கருத்து
**நான் முதலமைச்சரானால் மீனவர் கைகளில் வெடிகுண்டு**

## கண்டியில் ஏழு மரணங்களுக்கு பூஞ்சை தொற்று காரணமா?

### விரிவான விசாரணைகள் ஆரம்பம்



கண்டி வைத்தியசாலையில் பூஞ்சை தொற்றுக் காரணமாக ஏற்பட்டதாக கூறப்படும் ஏழு மரணங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சு விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பூஞ்சை தொற்றால் பாதிக்கப்பட்ட இந்த நோயாளிகளுக்கு 06

## காணி சுவீகரிப்புக்கு எதிராக நேற்று மக்கள் போராட்டம்

### மண்டைத் தீவில் மக்களுடன் எம்.பிமாரும் பங்கேற்பு



**யாழ். விசேட நிருபர்**

யாழ்.மண்டைதீவு பகுதியில் கடற்படையினருக்கு காணி சுவீகரிப்பதற்கான நடவடிக்கைக்கு எதிராக பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவின், மண்டைதீவு கிழக்கில் ஜே/07 கிராம சேவகர் பிரிவிலுள்ள, 29 பேருக்குச் சொந்தமான 18 06

### மண்டைத் தீவு போராட்டக்காரர்களுக்கு

## பிஸ்கட், குளிர்பானம் வழங்கிய கடற்படையினரின் செயற்பாடு



**யாழ். விசேட நிருபர்**

மண்டைத் தீவில் கடற்படை முகாமுக்கு முன்பாக போராடிய மக்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் கடற்படையினர் பிஸ்கட் மற்றும் குளிர்பானம் வழங்கினர்.

மண்டைதீவில் காணி அளவீடு செய்ய நில அளவை 06

## அமெரிக்க அரசாங்கம் இலங்கைக்கு

# 53.03 மில்.டொ பெறுமதியான மருந்து வகைகள் கையளிப்பு

### தூதுவர் ஜூலி சங் அமைச்சர் கெஹெலியவிடம் ஒப்படைத்தார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அமெரிக்க அரசாங்கம் இலங்கைக்கு மேலும் ஒரு தொகை மருந்துப் பொருட்களை நேற்று நன்கொடையாக வழங்கியுள்ளது.

புற்று நோய்க்கான மருந்து மற்றும் சிறுவர்களுக்கான மருந்து உட்பட 53. 3 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள் அதில் உள்ளடங்குகின்றன.

சுகாதார அமைச்சில் வைத்து அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் மேற்படி

மருந்துப் பொருட்களை உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

அமெரிக்காவினால் வழங்கப்பட்டுள்ள மேற்படி மருந்துகளில் சிறுவர்களுக்கான மருந்துகள், ஆத்தரைடிஸ் மருந்துகள் உள்ளிட்ட 16 வகை மருந்துகள் உள்ளடங்குவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



## 2022 O/L பரீட்சைக்கான செயன்முறை பரீட்சை ஆகஸ்ட் 02 இல்

### மதிப்பீட்டு முறையில் மாற்றமில்லை
### பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர

**(லோரன்ஸ் செல்வநாயகம்0**

இவ்வருடம் இடம்பெற்ற 2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தர பரீட்சையில், செயன்முறை பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் (02) ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

அதற்கிணங்க சங்கீதம், நடனம், நாட்டியம், அரங்கக்கலை ஆகிய பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சை ஓகஸ்ட் (02) ஆரம்பிக்கப்பட்டு ஓகஸ்ட் (12) இல், நிறைவடையுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்த தெரிவித்துள்ளார்.

அதேவேளை மேற்கத்தேய சங்கீத பாடம் தொடர்பான அரங்க பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் (06) ஞாயிற்றுக்கிழமை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அந்த வகையில் கடந்த வருடங்களில் நடத்தப்பட்ட செயன்முறைப் பரீட்சைகளுக்காக உபயோகப்படுத்திய மதிப்பீட்டு முறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட மாட்டாது. அவ்முறைமையைப் பின்பற்றியே இம்முறையும் பரீட்சை நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்காக பாடசாலைகள் மற்றும் வெளிவாரி பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதிப் பத்திரம் விரைவில் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இச்செயன்முறை பரீட்சை தொடர்பில் சிக்கல்கள் காணப்படுமாயின் பரீட்சை திணைக்களத்தின் அவசர தொலைபேசி இலக்கங்களான 1911 அல்லது 0112 784208, 0112784537 மற்றும் 0112 786016 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அதனை நிவர்த்தி செய்துகொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### மேலும் 300 அத்தியாவசியப் பொருட்களுக்கான

## இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்த அரசாங்கம் முடிவு

### அடுத்த வாரம் முதல் நடைமுறைக்கு வருகிறது

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

முன்னூறு அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதி தடையை மேலும் தளர்த்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க அடுத்த வாரம் முதல் இதை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கமானது கடந்த ஜூன் (09) முதல் இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் சில உணவுப் பொருட்கள் உள்ளிட்ட முன்னூறு பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்தியது.

இதையடுத்து ஒரு மாதத்திற்கு பின்னர் மீண்டும் 300 அத்தியாவசிய பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் வாகனங்கள் இறக்குமதிக்கான அனுமதியையும் அரசாங்கத்திடம் கோரியுள்ளனர். ஆனால், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகளை கருத்திற்கொண்டு இதற்கான அனுமதியை இப்போதைக்கு வழங்க முடியாது என நிதியமைச்சு அவர்களுக்குப் பதிலளித்தது.

நாட்டின் பொருளாதாரம் இயல்பு நிலைக்கு திரும்பியதும் வாகன இறக்குமதியாளர்களின் கோரிக்கை தொடர்பில், கவனம் செலுத்தப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் தொழுநோயாளிகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவு

### காசநோயாளிகளும் அதிகம் கொழும்பிலேயே

நாட்டில் 2023 ஆரம்பம் முதல் தற்போதுவரை கொழும்பு மாவட்டத்தில் 100 தொழுநோயாளிகள் பதிவாகியுள்ளதாக கொழும்பிலுள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாட்டிலேயே, அதிக தொழுநோயாளிகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாக கொழும்பு மாவட்ட செயலகத்தில் (11) நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப் புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் அதிக காசநோயாளிகள் கொழும்பு நகர எல்லையில் பதிவாகியுள்ளதாகவும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொழுநோயாளிகள் மற்றும் காசநோயாளிகளை அடையாளம் காணாவிட்டால், அது வேறு ஒருவருக்கு பரவும் அபாயம் உள்ளதாகவும் சுகாதாரத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

தொழுநோயை 18 மாதங்களில் குணப்படுத்த முடியும். என்றாலும், பாதுகாக்கப்படாவிட்டால் சிக்கல்கள் ஏற்படும் அபாயம் இருப்பதாக சுகாதார அதிகாரிகள் கூறுகின்றனர்.

## ஆழ்கடலிலிருந்து எரிகாயங்களுடன் நீர்கொழும்பு மீனவர் மீட்பு

### காலியிலிருந்து 798 Km தொலைவில் ஆழ்கடலில் தாக்குதல்

எரிகாயங்களுடன் இலங்கை மீனவர் ஒருவர் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளார். காலி கடற்கரையிலிருந்து சுமார் 431 கடல் மைல் (சுமார் 798 கிலோமீற்றர்) தொலைவான ஆழ்கடலிலிருந்து இவர் மீட்கப்பட்டார்.

நீர்கொழும்பு மீன்பிடி துறைமுகத்திலிருந்து ஜூன் (22) ஐந்து பேருடன் புறப்பட்ட 'சசிந்த புத்தா' என்ற ஆழ்கடல் வள்ளத்திலிருந்த மீனவரே, இவ்வாறு எரிகாயங்களுடன் அழைத்துவரப்பட்டார்.

நாட்டின் தென்மேற்கே ஆழ்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஆழ்கடல் வள்ளம், வெளிநாட்டுக் கப்பலுடன் மோதியதால்,இவர் தீக்காயங்களுக்கு உள்ளானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் எரிகாயங்களுக்குள்ளான மீனவரின் நிலை தொடர்பாக, கடற்றொழில் திணைக்களம், கடற்படைத் தலைமையகத்தின் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்திற்கு (MRCC) அவசர அழைப்பு விடுத்துள்ளது.

காயமடைந்த மீனவர்களை அவசர அழைப்புக்கிணங்க கடற்படையினர் கரைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டனர். இதன்படி, காயமடைந்த மீனவரை மீட்டு, கப்பலில் ஏற்றிச் சென்றனர்.

சிங்கப்பூர் நோக்கி பயணித்த கப்பல், பாதையை மாற்றி இலங்கைக்கு அண்மித்த சுமார் 400 கடல் மைல் தொலைவில் இலங்கையின் தெற்கு கடல் பகுதிக்கு நேற்று மாலை சென்றுள்ளது.

தென் கடற்படைக் கட்டளைக்கு இணைக்கப்பட்ட அதிவிரைவுத் தாக்குதல் படகு SPAR MIRA' கப்பலிலிருந்த இலங்கை மீனவரை மீட்டு காலி துறைமுகத்துக்கு அழைத்து வந்து சிகிச்சையளித்துள்ளது.

காயமடைந்த மீனவர் மேலதிக மருத்துவ சிகிச்சைக்காக காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக கடற்படை மேலும் தெரிவித்துள்ளது. தாக்குதலுக்குள்ளான ஆழ்கடல் வள்ளம் கரையை வந்தடைய இன்னும் இரண்டு அல்லது 03 தினங்கள் ஆகலாம். அவர்கள் கரை திரும்பிய பின்னரே தாக்குதல் நடத்திய வெ ளிநாட்டு கப்பல் தொடர்பாக மேலதிக விபரங்களை பெற முடியுமென்றும் கடற்படை தெரிவித்துள்ளது.

### எதிர்வரும் பெரும் போகத்தில்

## உரக் கொள்வனவுக்கு விவசாயிகளுக்கு பணம்



பெரும்போகத்தில் நெற்செய்கையாளர்களுக்கு உர மானிய கொடுப்பனவுகள் நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு வைப்பிலிடப்படுமென, விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

உரக் கொள்வனவு செய்வதற்கு ஒரு ஹெக்டெயார் நெற்செய்கைக்காக விவசாயிகளுக்கு 20,000 ரூபாவும், இரண்டு ஹெக்டெயாருக்கு 40,000 ரூபாவும் வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சர் என்ற வகையில் தீர்மானித்துள்ளார். அமைச்சரவையும் இந்த முன்மொழிவுக்கு அனுமதி அளித்துள்ளது. இதன்படி, விவசாயிகளுக்கு சிறு போகத்துக்கான உரக்கொள்வனவு செய்வதற்கு வவுச்சர்கள் வழங்கப்படுகின்றன.

இதற்கிடையில், சிறு போகத்துக்குத் தேவையான உர இருப்புகளை கொள்வனவு செய்வதற்காக விவசாயிகளுக்கு 11 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்தது.

நாடு முழுவதுமுள்ள 5,50,000 விவசாயிகளுக்கு இந்த மானியத்தை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக, விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜூலை (04) வரை மொத்தம் 5,34,433 விவசாயிகள் வவுச்சர்களைப் பெற்றுள்ளனர்.

## ஆட்டோக்களில் மாற்றம் செய்தால் கட்டணம்

### RMV ஆணையாளர் அறிவிப்பு



முச்சக்கர வண்டிகளில் மேலதிக உபகரணங்கள் மற்றும் அலங்காரங்களை பொருத்துவதற்கு அனுமதி வழங்கப்படுவதாக, மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்தார்.

அவ்வாறு மாற்றப்படும் உபகரணங்கள் மற்றும் அலங்காரங்களுக்கு கட்டணம் அறவிடப்படுமெனவும் அதற்கேற்ப, முப்பது வகைகளின் கீழ் மூன்று சக்கர வாகனங்களை மாற்றியமைப்பதற்கான அறவீடாக அதிகபட்சக் கட்டணமாக ரூ. 2,500 மற்றும் குறைந்தபட்சம் 500 ரூபா அறவிடப்படுவதுடன் அவற்றில் சில கட்டணம் செலுத்த தேவையற்றதாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலதிக தகவல்களை இணையத்தளத்தில் அல்லது 0113484520 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியுமெனவும் வீரசிங்க மேலும் குறிப்பிட்டார்.

https://shorturl.at/uCTVZ என்ற போக்குவரத்து திணைக்களத்தின் வலைத்தளத்தினூடாக மேலதிக தகவல்களை அறிய முடியும்.

### இலங்கை கடற்படையினருக்கு எதிரான கருத்து

## நான் முதலமைச்சரானால் மீனவர் கைகளில் வெடிகுண்டு

### சீமானின் பரபரப்பான உரையில் சர்ச்சை

நான் முதலமைச்சரானால் இலங்கை கடற்படையை எதிர்க்க மீனவர்களின் கையில் வெடிகுண்டை கொடுத்தனுப்புவேனென, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் ரகுநாதபுரத்தில் நாம் தமிழர் கட்சியின் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய சீமான்,

தி.மு.க அரசை கடுமையாக சாடியதுடன் நிரந்தர முதல்வரென எழுதி வைத்தவர்கள் எங்கே இருக்கிறார்களென அனைவருக்கும் தெரியும் என்றார். அதோடு தமிழக மீனவர்கள் விவகாரத்தில் மத்திய அரசு பாராமுகமாக இருப்பதாகவும் குற்றஞ்சாட்டினார்.

இலங்கை கடற்படையால் தமிழர்கள் சுட்டுக் கொல்லப்படுவதை எவரும் கண்டு கொள்வதில்லை. இதுவரை 800க்கும் மேற்பட்டோர் இலங்கை கடற்படையால் பலியாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நான், ஆட்சிக்கு வந்தால், நெய்தல் படையை உருவாக்கி மீனவர்கள் கடலுக்கு செல்லும் போது, ஆயுதங்களை கொடுத்து அனுப்புவதாகவும் சீமான் காட்டமாக தெரிவித்துள்ளார். இந்த பேச்சு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

### கிழக்கு மாகாண ஆளுநரினால்

## நிந்தவூரில் பாலர் பாடசாலை திறப்பு





நிந்தவூரில் 9.4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட அல் ஹிக்மா முன்பள்ளியின் இரண்டாம்மாடி கட்டடத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்தார்.

நிந்தவூர் பிரதேச சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் முன்பள்ளியை நிர்மாணிப்பதில் முக்கிய பங்காற்றியிருந்தனர்.

பெற்றோர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பிரதேச சபை செயலாளர் ஆகியோரால் வரவேற்பு நிகழ்வும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

## கலென்பிந்துனுவெவ நிதி நிறுவனம் ஊடாக 200 கோடி ரூபா மோசடி

### நிறுவன உரிமையாளர் தலைமறைவு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

கலென்பிந்துனுவெவ நகரிலுள்ள நிதி நிறுவனமொன்றில் அதிக வட்டியைப் பெற்றுத்தருவதாக கூறி மக்களின் 200 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடிசெய்த அந்த நிறுவனத்தின் உரிமையாளர் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தநிலையில் அந்நிதி நிறுவனத்தில் தமது பணத்தை வைப்பிலிட்டுள்ள சுமார் 100 பேர் கலென்பிந்துனுவெவ பொலிஸில் தனித்தனி முறைப்பாடுகளை செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த முறைப்பாட்டில் குறித்த நிறுவனம் சுமார் 200 கோடி ரூபாவை மோசடி செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக கலென்பிந்துனுவெவ பொலிஸ் நிலைய உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

மத்திய வங்கியில் பதிவுசெய்யப்படாத மேற்படி நிதி நிறுவனத்தை நடத்திச்சென்றவர் கலென்பிந்துனுவெவ பிரதேசத்தை வதிவிடமாகக் கொண்டவரென்றும் மாதத்திற்கு 5% வட்டியை பெற்றுத்தருவதாகக் கூறியே அவர் மக்களின் பணத்தை பொறுப்பேற்றுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நிதி நிறுவனம் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக கலென்பிந்துனுவெவ நகரிலுள்ள கட்டடமொன்றில் நடத்திச்செல்வதாகவும் அதிக வட்டியைப் பெற்றுத்தருவதாகக் கூறி மக்களிடம் அந்த நிதி நிறுவனத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதேவேளை, அவர்கள் வைப்பிலிட்ட பணத்திற்கான வட்டியை மாதாந்தம் அவர்களுக்கு வழங்கியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸில் முறைப்பாடுகளை செய்துள்ள மக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதுடன் அந்த நிதி நிறுவனத்தின் உரிமையாளருக்கு எதிராக சிவில் வழக்கொன்றை நீதிமன்றத்தில் பெற முடியுமென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மத்திய வங்கியில் பதிவுசெய்யப்படாமல் இவ்வாறு எந்தவொரு நிதி நிறுவனத்தையும் நடத்திச்செல்ல முடியாதென்றும் குறித்த நிதி நிறுவனம் தொடர்பில் மத்திய வங்கி விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு தமது பணத்தை வைப்பிலிட்ட 150க்கும் மேற்பட்டவர்கள் நேற்று முன்தினம் கலென்பிந்துனுவெவ நகரில் அந்நிதி நிறுவனத்திற்கெதிராக ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டுள்ளனர்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 ஜூலை 13 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN


தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் | 04.39 |
| ளுஹர் | 12.17 |
| அஸர் | 03.44 |
| மஃரிப் | 06.32 |
| இஷா | 07.48 |

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் ஆணி 29

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



# இரு நாடுகளுக்கிடையே நல்லுறவை வலுப்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம்

## ஜனாதிபதிக்கு சிறப்பான வரவேற்பளிக்க ஆர்வத்துடன் காத்திருக்கின்றது புதுடில்லி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்மாத பிற்பகுதியில் இந்தியாவுக்கான உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவிருக்கின்றார். ஜனாதிபதியின் இவ் விஜயமானது சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் மிகுந்ததாக நோக்கப்படுகின்றது. இவ்விஜயத்தின் மூலம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாரம்பரிய நல்லுறவு எதிர்காலத்தில் மேலும் பலமடையுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு மேற்கொள்ளவிருக்கின்ற இவ்விஜயத்துக்கு முன்னோடியாக இந்திய வெளியுறவுச் செயலாளர் வினய் மோகன் குவத்ரா நேற்றுமுன்தினம் இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயம் தொடர்பாக கொழும்பில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்த இந்திய வெளியுறவுச் செயலாளர் வினய் மோகன் குவத்ரா, "இந்தியாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அன்பான வரவேற்பு காத்திருக்கிறது. ஜனாதிபதியின் இந்த விஜயமானது இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் சாதகமான மாற்றத்துக்கான ஒரு புள்ளியாக அமையும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வெளியுறவுச் செயலாளர் வினய் மோகன் குவத்ரா, தனது இலங்கை விஜயத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடல் நடத்தியிருந்தார். அத்துடன் அரசியல் முக்கிய தரப்பினர் பலருடனும் சந்திப்புகளை நடத்தியிருந்தார்.

அச்சந்திப்புகள் தொடர்பாக கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் ஊடகவியலாளர்கள் சிலருடன் இந்திய வெளியுறவுச் செயலாளர் நேற்றுமுன்தினம் கலந்துரையாடலொன்றை நடத்தியிருந்தார்.

அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், "என்னுடைய இந்தக் குறுகிய கால பயணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர், வெளியுறவுச் செயலாளர் மற்றும் சில முக்கிய அமைச்சர்களை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதே எனது இலங்கை விஜயத்தின் நோக்கமாகும். அதற்கமைய பல சந்திப்புக்களில் பங்கேற்றேன். இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயமானது உண்மையில் இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் சாதகமான மாற்றத்திற்கான ஒரு புள்ளியாக இருப்பதை உறுதிப்படுத்தும் முயற்சி குறித்து கவனம் செலுத்தப்பட்டது" என்று கூறினார்.

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்திற்கு முன்னதாக நாம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்புகள் குறித்து கவனம் செலுத்தியுள்ளோம்.





## இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளியுறவுச் செயலாளர் வினய் மோகன் குவத்ரா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரசாங்க முக்கியஸ்தர்களுடன் முக்கியத்துவம் மிகுந்த சந்திப்பு



## இந்தியா வழங்கிய ஒத்துழைப்புகளுக்கு ஜனாதிபதி ரணில் நன்றி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தை வெற்றியடையச் செய்வதும், மிகுந்த பயனுள்ளதாக்குவதுமே எமது இலக்காகும். அவர் சர்வதேச ரீதியில் நன்கு அறியப்பட்ட தலைவர் என்பதோடு, இந்திய_ இலங்கை உறவின் மிகவும் வலுவான ஆதரவாளருமாவார்" என்று இந்திய வெளியுறவு செயலாளர் ஊடகவியலாளர்களிடம் அங்கு விபரித்தார்.

"இலங்கையானது கடந்த 14_16 மாதங்களில் பல்வேறு சவால்களைக் கடந்து வந்துள்ளது. அவ்வேளையில் இலங்கையும் இந்தியாவும் சிறப்பாக இணைந்து பணியாற்றியுள்ளன. இலங்கைக்கு நாம் ஒத்துழைப்புக்களையும் வழங்கியுள்ளோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தியாவில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அன்பான வரவேற்பு காத்திருக்கிறது என்பதை நான் இங்கு உறுதியளிக்கிறேன்.

ஜனாதிபதியின் இந்திய விஜயத்தை நாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளோம். அதேவேளை, அவரது விஜயத்தை வெற்றிகரமானதாகவும் ஆக்குவோம். இலங்கை_ இந்திய உறவின் வெற்றியையும் உறுதிப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்" என வினய் மோகன் குவத்ரா மேலும் தெரிவித்துள்ளார்.

இதுஇவ்விதமிருக்க, இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்காக அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற மறுசீரமைப்புத் திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய வெளியுறவு செயலாளருடனான சந்திப்பின் போது விபரமாகத் தெளிவுபடுத்தியுள்ளார்.

அதுமாத்திரமன்றி, இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த வேளையில் இந்தியா வழங்கிய ஒத்துழைப்புகளுக்கும் உதவிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதிக்கும் இந்திய வெளியுறவுச் செயலாளருக்கும் இடையிலான சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை மேலும் பலமடையச் செய்வதற்கான ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதேசமயம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்மாத இறுதிப் பகுதியில் இந்தியாவுக்கு மேற்கொள்ளவிருக்கின்ற விஜயம் தொடர்பாகவும் அங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. ஜனாதிபதியுடனான கலந்துரையாடலின் போது இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் இந்திய வெளியுறவுச் செயலாளர் வினய் மோகன் குவத்ரா தனது இலங்கை விஜயத்தின் போது தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்த்தன ஆகியோரையும் இந்திய வெளிவிவகார செயலாளர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்புகள் அனைத்தின் போதும் இருநாடுகளுக்கிடையிலான நல்லுறவைப் பலப்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இருநாடுகளுக்குமிடையில் நல்லுறவைப் பலப்படுத்தியவாறு, இருநாட்டு மக்களுக்கும் பயனளிக்கும் விதத்தில் சமூக பொருளாதார இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பில் இச்சந்திப்புகளின் போது ஆராயப்பட்டுள்ளது.

---

கல்முனை பிராந்தியத்தில்

## தொழுநோயாளர்கள் 19 பேர் இனங்காணல்

பொதுச்சுகாதார பரிசோதகர் சுகந்தன்

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் இதுவரை 19 தொழுநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக பிரிவுக்குப் பொறுப்பான பொது ச்சுகாதாரப் பரிசோதகர் சுகந்தன் தெரிவித்தார்.

இதுவோர் தொற்று நோயாகத் திகழ்வதோடு நோயெதிர்ப்பு சக்தி குறைவானோரை அதிகமாகத் தாக்குவதாகவும் குறிப்பிட்டார்.

அக்கரைப்பற்று ஆதாரவைத்தியசாலை, கல்முனை வடக்கு ஆதாரவைத்தியசாலை, அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை, சம்மாந்துறை வைத்தியசாலை போன்றவற்றில் இதற்கான சிகிச்சைகள் இடம்பெறுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தொழுநோய் தொடர்பான விழிப்பூட்டல்கள் கருத்தரங்குகள் தற்போது அதிகளவு இடம்பெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்.

## சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசலின் படத்தினை தனிநபர்கள் பயன்படுத்த முற்றாகத் தடை

சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் முகப்புத் தோற்றத்தினை (பள்ளிவாசலின் படம்) எக்காரணம் கொண்டும் தனிநபர் யாரும் பயன்படுத்துவது பள்ளிவாசல் நிர்வாகத்தினால் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மைக்காலத்தில் பள்ளிவாசலின் படத்தைப் போட்டு சட்டத்திற்கு முரணான முறையில் தனிநபர் ஒருவரால் முகப்புத்தகத்தில் (Facebook) பயன்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் படத்தினை பெரிய பள்ளிவாசலின் அனுமதி இல்லாமல் தனிநபர் யாரும் பயன்படுத்தக் கூடாது என்றும் அவ்வாறு மீறி பயன்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா அதிபர் க.செல்வராசா தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக வலயக் கல்வி பணிப்பாளர் எஸ்.சிறீதரன் கலந்து கொண்டார். (படம்: பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

சிலோன் மீடியா போரத்தின்

## 'வர்ண இரவு ஒன்றுகூடலும், ஊடகவியலாளர் கௌரவிப்பும்'



**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

சிலோன் மீடியா போரத்தின் நான்காவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற வர்ண இரவு ஒன்றுகூடலும், ஊடகவியலாளர் கௌரவிப்பும் மீடியா போரத்தின் தலைவர் ரியாத் ஏ மஜீத் தலைமையில் சனிக்கிழமை இரவு மாளிகைக்காடு வாபா றோயலி மண்டபத்தில் நடைபெற்றது.

ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் கொழும்பில் நடைபெறவுள்ள பிரமாண்ட ஆண்டு விழாவின் ஆரம்ப நிகழ்வாக நடைபெற்ற இந் நிகழ்வில் இந்திய இலங்கை ஊடகத்துறைக்கு பாலமாக அமைந்திருந்த ஊடகவியலாளர் திருச்சி ஷாஹுல் ஹமீட் சிலோன் மீடியா போரத்தினரால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்த வர்ண இரவு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ், கிழக்கு மாகாண காணியமைச்சின் பதில் செயலாளரும், மாகாண நிர்வாக பிரதிப் பிரதம செயலாளருமான ஏ. மன்சூர்,ஊடகவியலாளர்கள், பிரபல கலைஞர்கள், சிலோன் மீடியா போரத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், சிலோன் மீடியா போரத்தின் அங்கத்தவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

---

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 201.42 | 214.02 |
| கனடியன் டொலர் | 226.74 | 240.83 |
| யூரோ | 331.60 | 350.03 |
| ஜப்பான் யென் | 2.1241 | 2.2376 |
| சிங்கப்பூர் டொலர் | 224.04 | 237.14 |
| ஸ்ட்ரேலிங் பவுன் | 388.30 | 408.92 |
| சுவிஸ் பிராங்க் | 338.21 | 360.12 |
| அமெரிக்க டொலர் | 304.02 | 318.23 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 826.29 | கட்டார் ரியால் | 85.48 |
| குவைத் டினார் | 1015.01 | சவூதி ரியால் | 83.03 |
| ஓமான் ரியால் | 809.14 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 84.81 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆனி மாதம் 29ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்ஹிஜ்ஜா பிறை 24

## குறள் தரும் சிந்தனை



நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும். (உடல் நோய்க்கு மட்டுமின்றிச் சமுதாய நோய்க்கும் இது பொருந்தும்)

# இலங்கை-இந்திய நட்புறவில் புதியதொரு அத்தியாயம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்மாதம் பிற்குதியில் இந்தியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்ள உள்ளார். ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அவர் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதலாவது இராஜதந்திர விஜயம் இதுவாகும்.

இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியாவுக்கான விஜயத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கில் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் விநய் மொஹன் குவட்ரா கொழும்புக்கு கடந்த திங்கள் இரவு வருகை தந்திருந்தார். அவர் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் வெளிவிவகாரச் செயலாளரையும் சந்தித்து கலந்துரையாடியதோடு ஜனாதிபதியை நேற்றுமுன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இச்சந்திப்புக்களைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் சில ஊடகவியலாளர்களுடனும் இந்திய வெளிவிவகார செயலாளர் சந்திப்பு நடத்தின்ளார். அச்சமயம் அவர் குறிப்பிடுகையில், 'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தியாவில் அன்பான வரவேற்பு காத்திருக்கின்றது. அவரது இந்திய விஜயத்தை நாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளதோடு அவரது விஜயத்தை வெற்றிகரமானதாக்குவோம். எமது உறவின் வெற்றியையும் உறுதிப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்' என்று சுட்டிக்காட்டியுள்ளதோடு 'இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயமானது, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் சாதகமான மாற்றத்திற்கான ஒரு புள்ளியாக அமையும்' என்றும் கூறியுள்ளார்.

உண்மையில் ஜனாதிபதியின் இந்திய விஜயம் இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவில் நிச்சயம் ஒரு மைல்கல்லாக அமையும். அதுவே நாட்டின் நலன்களை நேசிப்போரின் அபிப்பிராயமாகும். இந்தப் பின்புலத்தில்தான் ஜனாதிபதியின் இந்திய விஜயம் பாரிய முக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கப்படுகின்றது.

இலங்கையும் இந்தியாவும் அயல்நாடுகளாகும். இரு நாடுகளுக்கும் இடையில் தொப்புள்கொடி உறவு நிலவி வருகின்றது. இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவானது சமூகம், சமயம், கலாசாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளுடனும் சம்பந்தப்பட்டதாக உள்ளது.

அதேநேரம் இரு நாடுகளுக்கும் இடையில் மாத்திரமல்லாமல் பிராந்திய மட்டத்திலும் சர்வதேச ரீதியிலும் இந்தியாவும் இலங்கையும் மிக நெருக்கமான உறவுடனேயே செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறு முக்கியத்துவம் மிக்க நட்புறவை இரு நாடுகளும் பேணி வருகின்ற சூழலில், இலங்கை முகம்கொடுக்கின்ற நெருக்கடியான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முதலில் உதவி, ஒத்துழைப்புக்காக வரக்கூடிய தேசமாக இந்தியா இருந்து வருகிறது.

அந்த வகையில் கடந்த வருடத்தின் (2022) ஆரம்பம் முதல் இந்நாடு அந்நிய செலாவணி பற்றாக்குறையுடனான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது. அந்நெருக்கடியின் தாக்கங்களையும் பாதிப்புக்களையும் குறைப்பதற்கு இந்தியா பல வகையிலும் உதவி ஒத்துழைப்புக்களை நல்கியது. அவற்றில் கடந்த வருடத்தின் முதல் நான்கு மாத காலப்பகுதிக்குள் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் மேற்பட்ட நிதியுதவியை வழங்கிய இந்தியா, அத்தியாவசிய உலர் உணவுப்பொருட்கள், மருந்துப்பொருட்கள், பசளை உள்ளிட்ட பல்வேறு உதவிகளையும் வழங்கவும் தவறவில்லை.

அத்தோடு சர்தேச நாணய நிதித்துடன் எட்டப்பட்டுள்ள கடன் நீடிப்புக்கான இணக்கப்பாட்டுக்கும் இந்தியா பாரிய ஒத்துழைப்புக்களை இலங்கைக்கு அளித்துள்ளது.

இவ்வாறான சூழலில் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் முன்னெக்கப்பட்டுவரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இந்தியாவின் உதவி, ஒத்துழைப்புக்கள் பக்கத்துணையாக அமைந்துள்ளன. கடந்த 1416 மாதங்களில் இலங்கை கடந்து வந்த பல்வேறு சவால்களின் போது இந்தியா இணைந்து பணியாற்றியதோடு சிறப்பான ஒத்துழைப்புக்களையும் நல்கியுள்ளது. அதன் பயனாக பொருளாதார நெருக்கடியில் இருந்து கட்டம் கட்டமாக மீட்சி பெற்று வந்த இலங்கை தற்போது பொருளாதார மறுமலர்ச்சி பாதையில் பிரவேசித்திருக்கின்றது. இந்த நிலையில் பொருளாதார நெருக்கடி நிலவிய போது மக்கள் எதிர்கொண்ட அசௌகரியங்களும் அழுத்தங்களும் பெரும்பாலும் நீங்கியுள்ளன.

இவ்வாறான சூழலில் நேற்றுமுன்தினம் தம்மைச் சந்தித்து கலந்துரையாடிய வெளிவிவகார செயலாளர் விநய் மொஹன் குவட்ராவிடம் இலங்கைக்கு இந்தியா அளித்துவரும் தொடரான உதவி ஒத்துழைப்புகளுக்காக ஜனாதிபதி நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியாவுக்கான விஜயம் இரு நாடுகளுக்கான நட்புறவை மேலும் வலுப்படுத்தி உறுதிப்படுத்துவதோடு புதிய அத்தியாயத்தையும் தொடக்கி வைக்கும். இவ் விஜயம் நிச்சயம் இலங்கைக்கு வெற்றிகரமானதாக அமையும். அதற்கான சமிக்ஞையாகவே அந்நாட்டு வெளிவிவகார செயலாளரின் விஜயமும் அவரது கூற்றுகளும் அமைந்துள்ளன.

editor.tkn@lakehouse.lk

# புகலிட இலக்கிய வாழ்வியல் சாதனையாளர் முருகபூபதி

எழுத்தாளன் என்ற அடையாளம்தான் எனது முகவரியென்றால், அதனை தக்க வைத்துக் கொள்ள வேண்டியதும் எனது பொறுப்பாகும். ஆயினும் என்னை நேசிக்கின்ற இலக்கியவாதிகள் இலங்கையில் மட்டுமன்றி உலகெங்கும் பரந்து வாழ்ந்து,'மனிதன்' என்ற முகவரியை எனக்கு தந்திருக்கிறார்கள். அதனை தக்கவைத்துக் கொள்வதுதான் எனது வாழ்வும் பணியுமாகும் என மெல்பேர்னில் இருந்து தமிழ் முழங்கும் லெட்சுமணன் முருகபூபதி, தன் வாழ்வையே எழுத்துலகுக்கு அர்ப்பணித்துள்ளார்.




"எழுத்து எனது தொழில். இலங்கையில் எனக்கு சோறுதந்த தொழில். அதனால் அதனைவிட்டு நான் அகலமாட்டேன். புகலிடத்தில் வேறு தொழில்களில் ஈடுபட்டு குடும்பத்திற்காக உழைத்த போதிலும் நான் ஊதியம் எதுவும் பெறாமலேயே எழுத்துத்துறையில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளேன்" எனக்கூறும் முருகபூபதிக்கு தற்போது கனடாவில் எழுத்தாளர் இயல் விருது கிடைத்திருப்பது பெருமைக்கு உரியதாகும்.

"எனது வாழ்நாளில் கலை, இலக்கியவாதிகளை மாத்திரமின்றி அரசியல் தலைவர்கள், தொழிற்சங்கவாதிகள், சமூக சேவையாளர்கள், பிரமுகர்கள், தொழிலாளர்கள் உட்பட பலதரப்பட்டவர்களையும் பத்திரிகை, சஞ்சிகைகளுக்காக நேரில் சந்தித்திருக்கின்றேன். பொதுவாழ்க்கை எனக்குப் புதியதல்ல. தாயகத்திலும் பல்வேறு பொதுப்பணிகளில் ஈடுபட்டேன். இன்றும் அவுஸ்திரேலியாவிலும் இலங்கையிலும் பொதுவேலைகளில் ஈடுபடுகின்றேன். இலக்கியம், எழுத்து பொதுவாழ்க்கை என்பனதான் எனது வாழ்க்கை என முருகபூபதி எடுத்துரைக்கின்றார்.

லெ.முருகபூபதி சமூக கலை இலக்கிய செயற்பாட்டாளராக தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றார். நீர்கொழும்பு இலக்கிய வட்டத்தின் செயலாளராகவும், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தேசியசபை உறுப்பினராகவும், அதனது கொழும்புக் கிளையின் செயலாளராகவும் இருந்தவர். அதன் பின்னர் 1987ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்து, இங்கு தமிழ் எழுத்தாளர் விழாக்களை நடாத்துவதில் முன்னின்று உழைப்பது கவனத்துக்குரியது. 2011 ஆம் ஆண்டில் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் பிரதம இணைப்பாளராகச் செயற்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

**அவுஸ்திரேலியாவில் தமிழ் எழுத்தாளன் எனும் அடையாளத்தின் முகவரியாளராக மிளிர்பவர் லெ.முருகபூபதி. அவரின் பிறந்ததினமான இன்று இச்சிறப்புக் கட்டுரை பிரசுரமாகிறது**

### லெ.முருகபூபதி படைப்புக்கள்:

முருகபூபதி 1972 இல் 'கனவுகள் ஆயிரம்' சிறுகதை மூலமாக மல்லிகையில் அறிமுகமானார். 1975 இல் வெளியான 'சுமையின் பங்காளிகள்' என்ற இவரின் முதலாவது சிறுகதைத் தொகுதிக்கு இலங்கை சாகித்திய மண்டல விருது கிடைத்தது. வீரகேசரி நாளிதழில் துணை ஆசிரியராக பணியாற்றியவர். ரஸஞானி, ரிஷ்யசிங்கர் என்ற புனைபெயர்களிலும் எழுதி வருகிறார்.

1975 இல் வெளியான லெ.முருகபூபதியின் சிறுகதைத் தொகுதியான 'சுமையின் பங்காளிகள்' இலங்கை தேசிய சாகித்திய விருது பெற்றது. அத்துடன் சமாந்தரங்கள் (1989),வெளிச்சம் (1998),எங்கள் தேசம் (2000), கங்கை மகள் (2005), நினைவுக்கோலங்கள் (2006), மதக செவனெலி (Shadows Of Memories) மொழிபெயர்ப்பு (2012), கதைத் தொகுப்பின் கதை (2021), பறவைகள் (2001) ஆகிய சிறுகதைத் தொகுதிகளையும் அவர் படைத்துள்ளார்.

சிறுவர் இலக்கியமான 'பாட்டி சொன்ன கதைகள்' (1997) என்று பல நூல்களை அவர் படைத்துள்ளார். நூறுக்கும் மேற்பட்ட கலை, இலக்கிய ஆளுமைகளின் வாழ்வையும் பணிகளையும் சித்திரிக்கும் பத்தி எழுத்துக்களை தொடர்ந்து எழுதிவருகின்றார். இவருடைய சிறுகதைகள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் வெளியாகியுள்ளன.

### அவுஸ்திரேலியாவில் தமிழ்ப் பணி :

அவுஸ்திரேலியாவில் தமிழ் எழுத்தாளர் விழாக்களை நடத்துவதில் முன்னின்று உழைத்துவரும் இவர் அவுஸ்திரேலியா தமிழ் அகதிகள் கழகம், அவுஸ்திரேலியா தமிழர் ஒன்றியம், அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கம் என்பவற்றை உருவாக்குவதிலும் முன்னின்று உழைத்து வருகின்றார்.

1987ல் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்த பின்னரும், தொடர்ந்து சிறுகதை, கட்டுரை, பேட்டி, பயண இலக்கியம் என தொடர்ந்து எழுதியும் வெளியிட்டும் வருகிறார்.

கடித இலக்கியமான 'கடிதங்கள்'(2001), நேர்காணல் சந்திப்பு (1998) இலக்கிய மற்றும் ஊடக வாழ்வில் சந்தித்த ஆளுமைகளின் கருத்துக்களை தொகுத்து எழுதிய நூல், மற்றும் கட்டுரை நூல்களான நெஞ்சில் நிலைத்த நெஞ்சங்கள் (1995) தமிழ், சிங்கள, முசுலிம், சோவியத் உக்ரைன் இலக்கிய நண்பர்கள் 12 பேரைப்பற்றிய நினைவுத்தகவல்கள், இலக்கிய மடல் (2000), மல்லிகை ஜீவா நினைவுகள் (2001), எம்மவர் (2003), அவுத்திரேலியத் தமிழ் எழுத்தாளர்கள் பற்றிய விபரத் திரட்டு நூல்களையும் எழுதியுள்ளார்.

கவிஞர் அம்பி வாழ்வும் பணியும் (2004), ராஜஸ்ரீகாந்தன் நினைவுகள் (2005), உள்ளும் புறமும் (2011, சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் பயன்பாடும், சொல்ல மறந்த கதைகள் (2014), சொல்ல வேண்டிய கதைகள் (2017), சொல்லத்தவறிய கதைகள் (2019), இலங்கையில் பாரதி ஆய்வு நூல் (2019), நடந்தாய் வாழி களனி கங்கை (2021), யாதுமாகி (2022), வாழும் வரலாறு மல்லிகை ஜீவா (2022) என இதுவரையில் பல நூல்களை முருகபூபதி படைத்துள்ளமை வரலாற்றுச் சாதனையாகும்.

"எனது சில கதைகள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவற்றை மொழிபெயர்த்தவர்கள் பார்வையில் அவை உச்சமாக இருந்திருக்கலாம் எனக் கூறும் முருகபூபதி பெற்ற விருதுகள் பல. சுமையின் பங்காளிகள் நூலுக்கு 1975 ஆம் ஆண்டு சிறந்த சிறுகதைத் தொகுதிக்கான இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது கிடைத்தது.

'பறவைகள்' நூலுக்கு 2002 ஆம் ஆண்டு சிறந்த நாவலுக்கான இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது கிடைத்தது. அத்துடன் 2002 அவுஸ்திரேலியா தினத்தில் சிறந்த பிரஜைக்கான விருதும் கிடைத்தது.



முருகபூபதிக்கு அவுஸ்ரேலிய பல்தேசிய கலாசார ஆணையத்தின் விருது 2012இல் கிடைத்தது. பின்னர் அக்கினிக் குஞ்சு இணைய இதழ் 2018 இல் வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருதையும் முருகபூபதி பெற்றார்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா...

# அமரர் அமிர்தலிங்கம் மறைந்து இன்றுடன் 24 வருடங்கள்

இலங்கையின் மூத்த தமிழ் அரசியல் தலைவர்களில் ஒருவரான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின் நினைவு தினம் இன்றாகும். அவர் 1989 ஆம் ஆண்டு ஜூலை 13 ஆம் திகதி புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அமரர் அமிர்தலிங்கம் அவர்கள் தமிழினத்தின் அரசியல் விடுதலைக்காக இறுதி வரை குரல் கொடுத்தார். அவரது மறைவு தமிழர்களுக்கு அன்று பேரிழப்பாக இருந்தது.

தமிழ் பேசும் மக்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்துவந்த வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் போதியளவு சுயாட்சியுடன் அரசியல் தீர்வுத் திட்டம் கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அமரர் அமிர்தலிங்கம் பாடுபட்டு வந்தார்.

ஆரம்பத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் 1956 ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான அமிர்தலிங்கம், 1972 ஆம் ஆண்டில் தமிழ்க் கட்சிகளுடன் கூட்டணி அமைத்து, 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் வெற்றிபெற்று எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்றிருந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, முன்னாள் தலைவர் அமிர்தலிங்கம் மறைந்த 24 ஆண்டு நினைவு தினம் இன்று உலகின் பல இடங்களில் தமிழ் மக்களால் நினைவு கூரப்படுகின்றது.



# சுற்றுலாத்துறையை மேம்படுத்த ரூபா 41 பில்லியன் உறுதியளிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட் பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி என்பன 2022 ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதாரத்தை நேரடியாக பாதித்தன. இதனால் நாட்டின் சுற்றுலாத்துறையும் பாரியளவில் பாதிக்கப்பட்டது.

இந்த பொருளாதாரப் பேரழிவானது, குறித்த துறையில் கால்பதித்துள்ள 80 வீதமான சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழிற் முயற்சியாளர்களை கடுமையாகப் பாதித்தது.

சுற்றுலாத்துறையும் பொருளாதார சவால்களுக்கு முகம்கொடுத்தது. நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் காப்புறுதி திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் சுற்றுலா அமைச்சு பிரேரணையொன்றை முன்வைத்தது. இந்த திட்டமானது 41 பில்லியன் ரூபா (135,000,000 அமெரிக்க டொலர்) பெறுமதியான கலப்பு மானிய திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. உள்வரும் சுற்றுலாப் பயணிகள் காப்புறுதி திட்ட முன்மொழிவுக்கமைய, குறித்த இணைப்பின் ஊடாக மீள செலுத்தப்படுமென உறுதியளிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கலப்பு மானிய திட்டமானது மத்திய வங்கியின் கீழ் இடர் கணக்கில் நிர்வகிக்கப்படுவதுடன் அதன் தற்போதைய தரத்தை உயர்த்தும் வகையில் அதனை சுற்றுலாத்துறைக்கென மாத்திரமே பயன்படுத்தக்கூடிய வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இது இலங்கையர் அல்லாத இலங்கைக்கு பயணிப்பவர்களால் செலுத்தப்படும் சுயநிதி திட்டமாகும். எவ்வாறாயினும் 41 பில்லியன் ரூபா பெறுமதிகொண்ட இந்த கலப்பு மானிய திட்டமானது இலங்கையின் சுற்றுலாத்துறைக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரியளவில் நன்மைகளைப் பெற்றுத்தரும்.

துரதிர்ஷ்டவசமாக, இலங்கைக்கு பயணிக்கும் பெரும்பான்மையான பயணிகள் காப்புறுதி செய்யப்படாதவர்களாக உள்ளனர். இவர்களுக்கு மருத்துவ தேவைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் தனியார் வைத்தியசாலைகளில் நியாயமற்ற கட்டணங்கள் அவ்வாறான வெளிநாட்டவர்களிடமிருந்து அறவிடப்படுவதால், அவர்கள் பொதுசுகாதார சேவைகளில் தங்கியிருக்க வேண்டியுள்ளது. அதாவது, உள்நாட்டு நோயாளி ஒருவரிடமிருந்து பெறப்படும் கட்டணத்தின் 3 மடங்கு பணத்தை வெளிநாட்டு சுற்றுலாப் பயணியொருவர் மருத்துவ கட்டணமான செலுத்த வேண்டியுள்ளது.



இந்த முயற்சியில் கட்டியெழுப்பப்பட்ட 41 பில்லியன் ரூபா நிதி வசதி மற்றும் காப்புறுதித் திட்டமானது நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான சந்தர்ப்பத்தில் முன்மொழியப்பட்ட ஒரு திட்டமாகும். குறிப்பாக, சுற்றுலாத்துறையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு இந்த திட்டம் நன்மையளிக்கும். இந்த வசதி கிடைக்கப்பெறுமாயின், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பின்னர் இருந்து உருவான பொருளாதார நெருக்கடியை தீர்க்க முடியும். உறுதியளிக்கப்பட்ட 41 பில்லியன் ரூபா கலப்பு மானியத்தின் ஊடாக சுற்றுலாத்துறையில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு சலுகை கடன்களை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சிறிய மற்றும் நடுத்தரளவிலான ஹோட்டல்கள், விலாக்கள், விடுதிகள், சுற்றுலா செயற்பாட்டாளர்கள், சுற்றுலா முகவர்கள், உணவு சார்ந்த சேவை வழங்குனர்கள் மற்றும் அவர்களின் செயற்பாடுகளின் நோக்கங்களுக்கமைய குறித்த சிறிய மற்றும் நடுத்தரளவிலான வகைகளுக்குள் உள்வருபவர்களும் இந்த திட்டத்தின் கீழ் சலுகை கடன்களுக்கு விண்ணப்பிக்க தகுதி பெறுவார்கள்.

இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு இந்த விரிவான காப்புறுதி திட்டம் ஈடு இணையில்லா நன்மைகளை வழங்கவுள்ளது. சுற்றுலாப் பயணிகள் தமக்கான தனியார் மருத்துவ மற்றும் பயண ஒத்துழைப்புகளை சர்வதேசத்தின் தரத்திற்கமைய பெற்றுக்கொள்ள முடியும். எந்தவொரு தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும் 7 நாட்களும் 24 மணித்தியாலங்கள் செயற்படும் அழைப்பு உதவி சேவையை நாட முடியும். அத்துடன் சுற்றுலாப் பயணிகள் தமது கையடக்க தொலைபேசியில் முன்கூட்டிய விண்ணப்பத்தை பயன்படுத்தி ஒன்லைன் மருத்துவ மற்றும் அது சார்ந்த சேவைகளைப் பெற முடியும்.

# ஆறு தசாப்தகால சிறப்புகள் கொண்ட இலங்கை மருந்து உற்பத்தியாளர் சங்கம்

இலங்கை மருந்து உற்பத்தியாளர்கள் சங்கம் மேற்கத்தேய மருந்துத் துறையில் ஆறு தசாப்த கால சிறப்பைக் கொண்டது. 1956 ஆம் ஆண்டில் பைசர் டியுமிக்ஸ் லிமிட்டெட் மருந்து உற்பத்தித்துறையில் நுழைந்தபோது மேற்கத்தேய மருந்துத்துறையில் இலங்கை ஒரு முக்கியமான முன்னகர்வை எடுத்தது. இந்த முக்கிய நடவடிக்கையானது மருந்துத் துறையில் ஸ்ரீலங்காவின் சிறந்ததொறு பயணத்திற்கான ஆரம்பப் படிக்கலாக அமைந்தது.

ஸ்ரீலங்கா மருந்து உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் தலைமையில் ஊடக சந்திப்பொன்று கொழும்பில் அண்மையில் நடைபெற்றது. இச்சந்திப்பின்போது இந்த அமைப்பின் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில் "தற்போது எங்களது மருந்து உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்கள் 150 இற்கும் மேற்பட்ட மருந்து மூலக் கூறுகளை உற்பத்தி செய்கின்றனர்.



நாடு முழுவதும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மேற்கத்தேய மருந்துகளுடன் 3,000 இற்கு மேற்பட்ட மருந்துக் கடைகளுடனான வலையமைப்பினைக் கொண்டு நாங்கள் எங்கள் சேவையை விரிவுபடுத்துகின்றோம். இலங்கை மருந்து உற்பத்தியாளர்கள் சங்கம் ஆறு தசாப்தங்களுக்கு மேலாக தேசிய மருந்து பாதுகாப்புக்கான சக்தியாக உருவெடுத்துள்ளது. மேற்கத்தேய மருந்து உற்பத்தித் துறையில் மிக உயர்ந்த தரத்தைப் பேணுவதற்கு உறுதிபூண்டுள்ள உற்பத்தியாளர்கள் சங்கத்தின் 23 உள்ளூர் தனியார் மருந்து உற்பத்தியாளர்கள் வெவ்வேறு அளவு வடிவங்களில் மருந்துகளை உற்பத்தி செய்கிறார்கள். அதாவது மாத்திரைகள், காப்ஸ்யுல்கள், திரவங்கள், கிரீம்கள், களிம்புகள், ஊசிமருந்துகள், இன்ஹேலர்கள், உலர்ந்ததுாள் மற்றும் ஸ்ப்ரே உட்பட பல்வேறு சிகிச்சை வகைகளுக்கு தேவையான உபகரணங்களையும் உள்ளடக்கியுள்ளது" என்றார்.

உயர்தர மேற்கத்தேய மருந்துகளை உற்பத்தி செய்வதன் மூலம் வெளிநாட்டு நாணயத்தை சேமிக்கும் வகையில் தன்னிறைவு பெற்ற இலங்கையை உருவாக்குவதற்கு நாங்கள் தீவிரமாக பங்களிக்கின்றோம். எங்களது 60 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வேளையில் இந்திய மருந்து உற்பத்தியாளர்கள் சங்கத்துடன் வரலாற்றுச் சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்பதை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கின்றோம்" எனவும் அவர் தெரிவித்தார்.

அஷ்ரப் ஏ சமத்...




# இரத்தினபுரி புதிய நீதிமன்ற கட்டடத்தொகுதி ஜனாதிபதியால் திறந்துவைப்பு!

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

அரசாங்கத்தின் மூலம் 1600 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இரத்தினபுரி புதிய நீதிமன்ற கட்டடத்தொகுதியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் (11) திறந்து வைத்தார்.

நான்கு மாடிகளைக் கொண்ட நீதிமன்ற கட்டடத்தொகுதியில் இரண்டு உயர் நீதிமன்றங்கள், ஒரு சிவில் மேல் முறையீட்டு நீதிமன்றம், இரண்டு மாவட்ட நீதிமன்றங்கள், இரண்டு மாஜிஸ்திரேட் நீதிமன்றங்கள், ஒரு தொழில் நீதிமன்றம் மற்றும் நீதிமன்றத்திற்கு தேவையான சகல அலுவலகங்கள் உட்பட சகல வசதிகளையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.



மேற்படி நிகழ்வில் பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய, நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன் செனவிரத்ன, வாசுதேவ நாணயக்கார, தலதா அத்துக்கோரல, அகில எல்லாவல, காமினி வலேபொட, சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய உட்பட நீதிபதிகள், சட்டத்தரணிகள், அரச உயர் அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# அடிப்படை வசதிகளின்றி வாழும் பம்பரகலை தோட்ட மக்கள்

## கண்டு கொள்ளாத அதிகாரிகள்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**



நுவரெலியா பம்பரகலை தோட்டத்தில் சுமார் 25 குடும்பங்கள் தற்காலிக வீடுகளில் எவ்வித வசதிகளும் இன்றி வாழ்ந்து வருகின்றன.

நுவரெலியா பம்பரகலை பிரிவுக்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர் இதுதொடர்பில் மத்திய மாகாண ஆளுநர், நுவரெலியா மாவட்ட செயலாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லவில்லை என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எங்களின் பிரச்சினைகளை அரசியல் தலைவர்கள் கண்டுகொள்வதில்லையென அங்குள்ள மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே தங்களுக்குரிய அடிப்படை வசதிகளை செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மகாவலி கங்கையிலிருந்து உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு

**அக்குறணை குறூப் நிருபர்**

பேராதனை பிரதேசத்தில் மகாவலி கங்கையிலிருந்து மனித சடலமொன்று நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது. பேராதனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீவத்துர என்ற இடத்திலேயே இவ்வாறு சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலம் அடையாளம் காணமுடியாதவாறு சிதைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விலங்குகளால் கடித்துக் குதறப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சடலம், சுமார் 30-40 வயதுக்கு இடைப்பட்ட ஒருவருடையதாக இருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது. உயரம் 5 அடி 6 அங்குலமாகும். மரண விசாரணைக்காக சடலம் பேராதனை போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஐவர் கைது

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**



பொகவந்தலாவையில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இளைஞர்கள் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொகவந்தலாவ பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களையடுத்து பொகவந்தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் பணிப்புரையின் படி பெற்றசோ தோட்டத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் அதே தோட்டத்தைச் சேர்ந்த 25, 35 வயதுகளையுடையவர்கள் என தெரியவருகின்றது.

மாணிக்கக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களுடன் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# சக்தி மிக்கதொரு பொருளாதாரக் கோட்பாடு 2027 வரை நீடிக்கும்

**3 சதவீத பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தத் திட்டம்**

**நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க உறுதி**

**அக்குறணை குறூப் நிருபர்**

இன்றைய சக்தி மிக்கதொரு பொருளாதாரக் கோட்பாடு 2027 வரை நீடிக்கும், அதன்படி 2027இல் 3 சதவீத பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளதாக நிதித்துறை இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கண்டி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாடு பொருளாதாரத்துறையில் ஒரு ஸ்தீரத்தன்மையை நோக்கி முன்னேறுகிறது. இதுதொடர்பாக சர்வதேச நாணய நிதியம் பலவந்தமாக எதனையும் திணிக்கவில்லை. 190 நாடுகளின் பிரதிநிதிகள் கொண்ட அமைப்பே சர்வதேச நாணய நிதியமாகும். அதன் ஒத்துழைப்பை பெறாது நாம் மட்டும் தனித்து நின்றால் எந்த நாட்டின் உதவியும் எமக்குக் கிடைக்காது. ஏதேனும் ஒரு நாடு அவர்களின் உதவியை நாடினால் மட்டுமே அவர்கள் கொள்கை விதிப்புக்களை மேற்கொள்வர். அதே நேரம் கட்டம் கட்டமாகவே அவர்களது நிதியுதவிகள் கிடைக்கின்றன. முதலாவது தவணைக்கான கடன் தற்போது கிடைத்துள்ளது. அதன் முன்னேற்றம் பற்றிய அறிக்கை சமர்பிக்கப்பட்ட பின்னரே இரண்டாம் கட்ட உதவிகள் கிடைக்கும்.



நாம் 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியில் சிக்கிய போது இந்தியா, பாரிஸ் ஒத்துழைப்பு நாடுகள் மற்றும் சீனா என்பன உதவி செய்ய முன்வந்தன. முதலாவது தவணைக்கான முன்னேற்றம் பற்றி நாம் அறிக்கையிட எமது உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு மிகவும் அவசியமாகும். எனவே தான் நாம் அதனை அவசரமாகக் கொண்டுவந்தோம்.

பணவீக்கம் 70-80 சதவீதங்களிலிருந்து 10 சதவீதத்துக்கு கீழ் குறைந்த போதும் ஏன் பொருட்களின் விலை குறையவில்லை என்று கேட்கின்றனர். பணவீக்கம் என்பது கடந்த வருட விலையுடன் தற்போதைய விலையை ஒப்பிடுவதாகும். எனவே கடந்த ஆண்டை விட அது குறைந்துள்ளதையே காட்டுகிறது. பொதுமக்கள் எதிர்பார்க்கும் அளவு பொருட்களின் விலை குறைய வேண்டுமாயின் அது எதிர்கணியமாக மாற வேண்டும். தற்போதைய பொருளாதார கொள்கை இதே அடிப்படையில் 2027 ஆம் ஆண்டு வரை முன்னெடுக்கப்பட்டு 2027இல் 3 சதவீத பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த நாம் திட்டமிட்டுள்ளோம்.

'அஸ்வெசும' என்ற பொதுமக்கள் உதவித்திட்டத்திற்கு 9 இலட்சத்தி 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மேன் முறையீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் 6 இலட்சத்திற்கும் மேற்பட்டவை ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளவர்களாகும். அவர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள பிரிவை மாற்றியமைக்கவே மேன் முறையீடு செய்துள்ளனர். அதாவது 4500 ரூபா மாதாந்தக் கொடுப்பனவை 15000 ரூபாவாக வழங்கும் பிரிவில் தம்மை இணைக்கும் படியான மேன் முறையீடுகளே அவையாகும் என்றார்.

# கஞ்சா விற்பனையில் ஈடுபட்டவர் கைது

**ஊவா சுழற்சி நிருபர்**

மிகவும் சூட்சுமமான முறையில் கஞ்சா பொதியிட்டு விற்பனையில் ஈடுபட்ட நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து வாகனமொன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். வெலிமடை, கெப்பெட்டிபொல, கவரம்மாண பிரதேசங்களில் மிக நீண்ட காலமாக கஞ்சா பொதி செய்து விற்பனையில் ஈடுபட்டு வந்ததாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இது தொடர்பில் நபரொருவர் வழங்கிய இரகசிய தகவலின் அடிப்படையில் இக்கைது இடம்பெற்றுள்ளது. சந்தேகநபர் 28 வயதுடைய ஒருவர் என தெரியவந்துள்ளது. சந்தேகநபரை வெலிமடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தி மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அக்குறணையில் சர்வதேச ஐக்கிய கலாம் அறக்கட்டளை புதிய கிளை திறப்பு



கண்டி அக்குறணையில் சர்வதேச ஐக்கிய கலாம் அறக்கட்டளையின் புதிய கிளை திறப்பு விழாவும், இரண்டாம் ஆண்டு வெற்றி விழாவும் காஷ்டல் பார்க் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வணிக உலக சர்வதேச அமைப்பின் இயக்குனர் ரகு இந்திரகுமார் ஒருங்கிணைப்பில் தமிழக மதுரை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பன் MLA, சர்வதேச ஐக்கிய கலாமின் இந்திய உயர்மட்ட நிர்வாக குழு, பாராளுமன்ற உறுப்பினர் ஹலீம் MP, மனித உரிமைகள் அமைப்பின் கண்டி மாவட்ட இயக்குனர் ரிஸ்வான், இன்னும் பல அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் சில அபிவிருத்தி திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் பல சிவில் அமைப்புகளின் கோரிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டு பல்வேறு தீர்மானங்களும் மக்களின் எழுச்சிக்காக நிறைவேற்றப்பட்டது.

# சிவனொளிபாதமலைக்கு செல்லும் பிரதான வீதியில் குளவிகள் அச்சுறுத்தல்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**



நல்லதண்ணி நகரிலிருந்து சிவனொளிபாதமலைக்கு செல்லும் பிரதான வீதியிலுள்ள நாகதீப பௌத்த விகாரையில் குளவிக்கூடுகளால் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். நாகதீப பௌத்த விகாரையிலுள்ள சுமார் ஐம்பது அடி உயரமுள்ள புத்தர் சிலையில் 10 ற்கும் மேற்பட்ட குளவிக் கூடுகள் இருப்பதாக மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.தற்போது இப்பகுதியில் கடும் காற்று வீசுவதால் அங்குள்ள குளவிக் கூடுகள் எந்தநேரமும் கலைந்து தாக்கலாம் என மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். அத்தோடு வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் மாலை வேளையில் சென்று காலை வேளையில் திரும்பி வரும் வழியில் எந்நேரத்திலும் குளவிக்கொட்டுக்கு இலக்காகலாம் என அப்பகுதியில் உள்ள விடுதி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி அங்குள்ள குளவிக் கூடுகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தனியார் பஸ் வண்டிகள் அனுமதிப்பத்திரமின்றி சேவையில் ஈடுபட்டால் சட்டநடவடிக்கை

**உக்குவளை விசேட நிருபர்**

மாத்தளை மாவட்டத்தில் வீதி போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல தனியார் பஸ் வண்டி உரிமையாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாக மாத்தளை போக்குவரத்து பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மாத்தளை மாவட்டத்தில் அநேகமாக மாத்தளை கந்தேநுவர, இரத்தோட்டை, தம்புள்ளை, கலேவல, மாத்தளை ஹல்கொல்லபோன்றபகுதிகளுக்குசேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அநேகமான தனியார் போக்குவரத்து பஸ் வண்டிகளுக்கு வீதி போக்குவரத்து அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை எனவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.




மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை பகுதியில் மாநெலி, கவரவில்லை, ஓல்ட்டன், பெயர்லோன் ஆகிய நான்கு தோட்டத்திலுள்ள பார்வைக் குறைபாடுடையோருக்கு காலி லயன்ஸ் கழகத்தின் ஊடாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை கவரவில்லை தோட்ட நிர்வாக இயக்குனர் வசந்த் குணவர்தன மேற்கொண்டார். இதனால் வயது முதிர்ந்த தொழிலாளர்கள் நூறுக்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்துள்ளனர். *(படம்: மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)*

# நூல் வெளியீட்டு விழா

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

சட்டத்தரணி நேரு கருணாகரனின் 'களவாடப்பட்ட தலைமுறைகளின் கதை' எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 9:30 மணிக்கு ஹற்றன் நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தினக்குரல் பத்திரிகையில் 2012 2015 வரையான காலப்பகுதிக்குள் எழுதிய 'வாரம் ஒரு சினிமா' பகுதியில் வெளிவந்த உலக சினிமா திரைப்படங்களை பற்றிய கட்டுரைகளில் 32 கட்டுரைகள் 'களவாடப்பட்ட தலைமுறைகளின் கதை' எனும் நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரை, தலைமையுரையையடுத்து நூல் அறிமுகவுரை தனராஜ் கஜேந்திரகுமார் (ஆணையாளர், பண்டாரவளை மாநகர சபை) வழங்கவுள்ளார்.

பேராதனைப் பல்கலை

# மாணவன் தற்கொலை முயற்சிக்கு பாதுகாப்பு தரப்பினரின் கெடுபிடிகளே காரணம்

## மாணவர் சங்கம் குற்றச்சாட்டு

**அக்குறணை குறூப் நிருபர்**

பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் தற்கொலை முயற்சிக்கு பாதுகாப்பு தரப்பினரின் கெடுபிடிகள் காரணமாகவிருக்கலாம் என மேற்படி பீடத்தின் மாணவர் சங்க செயலாளர் டில்சான் சோமரத்ன குற்றம்சாட்டியுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழக இணைந்த சுகாதார வைத்திய பீடத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் தற்கொலைக்கு முயற்சித்து காப்பாற்றப்பட்டிருந்தார். இச்சம்பவத்தின் பின்னணியில் பாதுகாப்பு கெடுபிடிகள் இருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக அவர் தெரிவித்தார்.

மேற்படி பீடத்தின், இரண்டாம் வருட மாணவன் ஒருவர் கடந்த வாரம் பல்கலைக்கழக விடுதியில் வைத்து தற்கொலை முயற்சியில் ஈடுபடும் போது காப்பாற்றப்பட்டுள்ளார். மாணவனிடம் பகிடிவதை தொடர்பாக வாக்குமூலம் பெற்றுக் கொள்வதற்கு வந்த பாதுகாப்புத் தரப்பினர் கடுமையாக நடந்து கொண்டதுடன் மாணவனை துப்பாக்கி முனையில் பயமுறுத்தியுள்ளதாக தெரியவருகின்றது. இச்சம்பவம் பல்லைக்கழக வளவில் இடம்பெற்றுள்ளது. இதன் காரணமாக மாணவன் மன உளைச்சலுக்குள்ளாகி இருந்துள்ளார். இதுதொடர்பாக தமது அமைப்பு நிர்வாகத்திற்கும் பாதுகாப்புத் தரப்பிற்கும் முறைப்பாடு செய்துள்ளதாக மாணவர் சங்க செயலாளர் டில்சான் சோமரத்ன தெரிவித்தார்.

எனவே இதுதொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு எதிர்காலத்தில் மாணவர்களின் மனநிலையை பாதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருக்க நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் தெரிவித்தார்.

# இந்திய கலாசார நிலையத்தில் ஜெகநாதன் சஞ்ஜீவனின் பரதநாட்டியம்



இந்திய உயர் ஸ்தானிகராலயம், கொழும்பு, இந்திய கலாசார நிலையத்துடன் இணைந்து வழங்கும் " கச்சேரி மேளா என்னும் பரதநாட்டிய நிகழ்வு இன்று 13 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு கொழும்பு 7 சுவாமி விவேகானந்த கலாசார நிலையம் மற்றும் இந்திய கலாசார நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அரும்பெரும் ஆற்றுகைக் கலையைப் பயின்று அரங்கேறிய ஆடல் ஆர்வலர்களுக்கு ஆற்றுகைத் தளத்தினை அமைத்துத் தரும் ஆவலினால் அபிநயஷேத்ராவால் வழங்கப்படும் " கச்சேரி மேளா " அரங்கின் இரண்டாவது நிகழ்வினை அலங்கரிக்கிறார் ஜெகநாதன் சஞ்ஜீவன். இந்நிகழ்விற்கு உலக பரத நாட்டியக் கலைஞர்கள் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களான திருமதி . சுமித்ரா சுகேந்ரா ( இயக்குனர் கலா கேந்ரா நடனப்பள்ளி , டென்மார்க் ) , திருமதி மைதிலி ரவீந்திரா ( இயக்குனர், பரத நர்த்தனாலயம் , நோர்வே ) ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

*Global Association of Sri lankan Bharathanatyam Artistes* ஜெகநாதன் சஞ்ஜீவன் , திருமதி திலகா மகேஸ்வரனிடம் நடனம் பயின்றதோடு , பரதநாட்டிய பட்டயக் கற்கைநெறியையும் , அபிநயஷேத்ராவின் நட்டுவாங்கப் பட்டயக் கற்கைநெறியையும் பயின்று , கைலேஸ்வரம் நடனப்பள்ளியினை ஆரம்பித்து நடாத்தி வருகிறார். அருஶ்ரீ கலையகத்தினூடாக சுவாசம், ஆபூர்வம், லயம் , *Chains* , மனிதம் போன்ற நாட்டியத் தயாரிப்புகளிலும் இந்தியக் கலைஞர்களோடும் நடனமாடியுள்ளார். அபிநயஷேத்ராவினூடாக நர்த்தகா உற்சவம் ஆண் நடனக் கலைஞர்கள் திருவிழா , திகட சக்ர நிகழ்வுகள் உட்பட முக்கிய மேடைகளில் பங்கேற்றுள்ளார். கைலேஷ்வரம் நாட்டியாஞ்சலி ஒருங்கிணைப்புக் குழுவில் பங்களிப்பு வழங்கியதோடு, ஆலயங்கள் பலவற்றிலும் நாட்டிய சமர்ப்பணம் வழங்கிவருகிறார். தேசிய இளைஞர் நடனப் போட்டிகளில் பங்கேற்று பரிசில்கள் வென்றதோடு ஜெயாஞ்சலி சர்வதேச அமைப்பினூடாக நாட்டிய கலாபூஷன் விருதும் , அபேகமவில் " நாட்டிய சூரத் " விருதும் பெற்றுள்ளார். ஆற்றுகைக் கலைஞர் ஜெகநாதன் சஞ்ஜீவன் வழங்கும் பரதநாட்டியக் கச்சேரி நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அவர் அனைவரையும் அழைக்கிறார். இவர் அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் அங்கத்தவரும் ஆவார்.

## ஜனாதிபதி ரணிலுக்கு இந்தியாவில்...

தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட முக்கிய தரப்பினருடனான சந்திப்பின் போது, கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் ஊடகவியலாளர்கள் சிலருடனான கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

என்னுடைய இந்த குறுகிய கால பயணத்தில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர், வெளியுறவுச் செயலாளர் மற்றும் மேலும் சில முக்கிய அமைச்சர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதே எனது இவ்விஜயத்தின் நோக்கமாகும். அதற்கமைய நான் பங்கேற்ற சந்திப்புக்களில் இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயம் உண்மையில் இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் சாதகமான மாற்றத்துக்கான ஒரு புள்ளியாக இருப்பதை உறுதிப்படுத்தும் முயற்சி குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதியின் விஜயத்துக்கு முன்னதாக, நாம் முன்னேறக்கூடிய பங்காளித்துவத்தின் முக்கிய பகுதிகள், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதாரப் பங்காளித்துவத்தின் கூட்டாண்மையின் கூறுகள் தொடர்பிலும் இதன் போது அவதானம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தை வெற்றியடைச் செய்வதே எமது இலக்காகும். அவர் நன்கு அறியப்பட்ட தலைவர் என்பதோடு, இந்திய இலங்கை உறவின் மிகவும் வலுவான ஆதரவாளருமாவார். கடந்த 1416 மாதங்களில் இலங்கை கடந்து வந்த பல்வேறு சவால்களில், நாம் சிறப்பாக இணைந்து பணியாற்றியுள்ளோம். இந்தியாவில் அவருக்கு மிகவும் அன்பான வரவேற்பு காத்திருக்கிறது.இதை, நான் உறுதியளிக்கிறேன். ஜனாதிபதியின் இந்திய விஜயத்தை நாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ள அதேவேளை, அவரது விஜயத்தை வெற்றிகரமானதாகவும் ஆக்குவோம். அதேவேளை, எமது உறவின் வெற்றியையும் உறுதிப்படுத்த எதிர்பார்த்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

## 06 வருடங்களின் பின்னர்...

தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்று (12) இத்தீர்ப்பை வழங்கினார்.

கடந்த 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் (09) வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்துக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

இதனையடுத்து, வவுனியா பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் ராஜபக்ச தலைமையில் பொலிஸார், அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக, யாழிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பஸ்களை சோதனையிட்டனர்.

பஸ்ஸில் பயணித்த குடும்பஸ்தரின் பையிலிருந்து ஹெரோயின் போதைப்பொருள் கண்டெடுக்கப்பட்டது.

அவரிடமிருந்து ஒரு கிலோ ஹேரோயினை மீட்ட பொலிஸார், குடும்பஸ்தரையும் கைது செய்தனர்.

கைதானவருக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டு வந்த நிலையில் அவர் பிணையில் விடுதலையாகியிருந்தார்.

அரச சட்டத்தரணிகளான தர்ஷிக்கா திருக்குமாரன் மற்றும் ஆறுமுகம் தனுஜன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்தன

இவ்வழக்கு விசாரணைகளில் இந்நபர் ஒரு கிலோ 135 கிராம் தூய ஹெரோயினை உடமையில் வைத்திருந்தமை மற்றும் விற்பனைக்காக எடுத்துச் சென்றமை என்பன சந்தேகத்துக்குமிடமின்றி உறுதிப்படுத்தப்பட்டது . இதனால் அந்நபருக்கு வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மரண தண்டனை வழங்கி நேற்று தீர்ப்பளித்தார்.

யாழ். நாவற்குழியை சேர்ந்தவரும், தற்போது வவுனியாவில் வசித்து வருபவருமான கந்தையா தியாகராஜா என்ற 55 வயது குடும்பஸ்தருக்கே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

## யானை தாக்கி ஒரே நாளில்...

பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலன்னறுவை இலங்காபுரம் பிரதேசத்தில் அன்றைய தினம்மாலை காட்டு யானை தாக்கி, 27 வயதுடைய யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த யுவதி தாயாருடன் வயல் வெளிக்குச் சென்ற போது, காட்டு யானை தாக்கி சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார். இவருடன் ஒன்றாகச் சென்ற தாய், படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மொனராகலை புத்தல பிரதேசத்தில் நேற்று முன்தினம் காட்டு யானை தாக்கி 54 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரை வீதியைக் கடந்து சென்ற யானைகளில் ஒன்று தாக்கியதில், அவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார். அனுராதபுரம் கஹடகஸ்திகிலிய பிரதேசத்தில் நேற்று மதியம் காட்டு யானை தாக்கி 33 வயதுடைய ஆண் ஒருவர் பலியானார். இந்நபர் மாடு மேய்ப்பதற்காக அப்பகுதியிலுள்ள குளத்துக்குச் சென்ற போது, யானை இவரைத் தாக்கியது. இதில், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## சுவீடனில் புனித குர்ஆன்...

கட்டடத் தொகுதியை நேற்று (11) பிற்பகல் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

மதத்தைப் பின்பற்றும் உரிமை தொடர்பான முழு கருத்தியலும் தற்போது சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் சல்வான் மோமிகா (*Salwan Momika*) என்பவர் சுவீடனில் உள்ள துருக்கி தூதரகம் முன் குர்ஆனை எரிக்க அனுமதி கோரி நீதிமன்றத்தை நாடினார். பொலிஸார் அதற்கு அனுமதி மறுத்தாலும் அது, கருத்து தெரிவிக்கும் உரிமை என்று உயர்நீதிமன்றம் அறிவித்திருந்தது.

மதச் சுதந்திரத்தின் அடிப்படையிலே பொலிஸார் செயல்பட்டார்கள். அது கருத்து தெரிவிக்கும் உரிமை என்று உயர் நீதிமன்றம் அறிவித்தது. புனித குர்ஆன் எரிக்கப்பட்டதையடுத்து அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சுவீடனுக்கு அனைத்து நாடுகளாலும் அழுத்தம் விடுக்கப்பட்டது.

அனைவரும் கண்டனம் தெரிவித்தனர். இஸ்ரேல் கூட இதை செய்யப்படக்கூடாத ஒன்று என்று கூறியது. இது ஏபிரகாமின் கடவுள் பற்றிய புனித நூல் என்றும், இதை அவமதிக்கக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

புனித குர்ஆனை எரிப்பது அருவருக்கத்தக்க மற்றும் அவமரியாதைக்குரிய மற்றும் தூண்டிவிடும் செயல் என்றும் சுவீடன் தெரிவித்துள்ளது. ஆனால், கருத்துச் சுதந்திரம், எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமை ஆகியவை அரசியலமைப்பு சட்டத்துக்கு அமைய பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கூறியது.

இந்த பதிலைத் தொடர்ந்து ஒரு சில மேற்கத்தேய அரசாங்கங்கள் இது கருத்துச் சுதந்திரம் என்று கூறின. அவ்வாறு இதனை கருத்துச் சுதந்திரத்தின் கீழ் கொண்டு வந்தனர். இதன் காரணமாக பாகிஸ்தான் தற்போது ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக்கு சென்றுள்ளது.

இது சர்வதேச சட்டத்தை மீறும் செயலாகும் என பிரேரணை சமர்பிக்கப்பட்டுள்ளதோடு 13ஆம் திகதி வியாழக்கிழமை ஜெனீவாவில் இதுகுறித்து கவனம் செலுத்தப்பட உள்ளது. இப்போது எழும் கேள்வி இதுதான்.

இது மதச் சுதந்திரத்தை மீறுவதாக நாம் அனைவரும் கருதுகிறோம். ஆனால் இதை கருத்து சுதந்திரத்தின் கீழ் கொண்டுவர முயற்சி நடக்கிறது. எல்லாவற்றையும் கருத்துச் சுதந்திரத்தின் கீழ் கொண்டு வர முடியாது. அதற்கு ஒரு வரையறை இருக்க வேண்டும்.

இந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டால் அது மேற்குலக நாடுகளுக்கு பின்னடைவாக அமையும் என சில அரச சார்பற்ற சர்வதேச நிறுவனங்கள் கூறுகின்றன. இது மேற்கு அல்லது கிழக்கு அல்லது வடக்கு அல்லது தெற்கு பிரச்சினை அல்ல. இது மதத்தைப் பின்பற்றும் உரிமை பற்றிய கேள்வியாகும்.

நான் முஹம்மது நபியைப் பின்பற்றுபவன் அல்ல. ஆனால் திருக்குர்ஆன் மிகவும் மதிப்புமிக்க நூல் என்று நான் நினைக்கிறேன். பகவத் கீதை மற்றும் பைபிளையும் நாம் அதேபோன்று பயன்படுத்தலாம். இதேபோன்று, தம்மபதத்திலும் அல்லது திரிபிடகத்திலும் பயனுள்ள விடயங்களைக் கண்டறியும் பௌத்தர் அல்லாதவர்களும் இருக்கின்றனர்.

எனவே நாம் அனைவரும் இதை மதத்தின் மீதான தாக்குதலாகக் கருதுகிறோம். ஆனால் ஒரு சில மேற்கத்தேய நாடுகளின் கருத்துப்படி இது ஒரு கருத்துச் சுதந்திரமாகும்.

ஏனென்றால், அவர்கள் குழப்பத்தை மறைக்க கருத்துத் தெரிவிக்கும் எண்ணக்கருவை விரிவுபடுத்த முயற்சிக்கிறார்கள்.

அதனால் மேற்கத்தேய விழுமியங்களை பரப்புவதற்காக கருத்துச் சுதந்திரத்தை பயன்படுத்திக்கொள்கிறோம் என்பதே அவர்களது நிலைப்பாடாக உள்ளது. அதேபோல் அந்த விழுமியங்களை உலகம் முழுவதும் பரப்ப வேண்டும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர். நாம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஜனநாயகத்தை மதிப்பவர்கள். குறித்த விடயத்துடன் தொடர்புடையதாகவே மேற்படி விடயங்களை குறிப்பிடுகிறேன். இதன் போது இலங்கை தொடர்பில் நான் எதுவும் பேசப்போவதில்லை. ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளருக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் கைசாத்திடப்பட்ட ஒப்பந்தம் தொடர்பிலான விடயங்களை நாம் நிறைவேற்றவில்லை என்பதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்.

அதனால் எமது நிலைப்பாடு எதுவாக இருப்பினும் பொறுப்புகளை நிறைவேற்றிக்கொண்டு முன்னேறிச் செல்ல வேண்டும். அதனால் ஐக்கிய நாடுகள் சபை ஏன் அமைதி காக்கிறது என்பதே எமது கேள்வியாகும்.

அந்த சபையினால் இதுகுறித்த அறிக்கையொன்று வெளியிடப்படாமல் இருப்பதன் நோக்கம் என்ன? எதற்காக வாக்கெடுப்பொன்று வரும் வரையில் காத்திருக்க வேண்டும்? இது அனைவருக்கும் முக்கியமான விடயம் என்ற வகையில் நாம் எவ்வாறான விழுமியங்களை பின்பற்ற வேண்டும் என்பதை தெளிவுபடுத்த வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

## யாழ். கொழும்பு நேரடி ரயில் சேவை...

திரும்பவுள்ளதுடன் வழமையான நேர அட்டவணைக்கிணங்க அந்த சேவைகள் நடைபெறவுள்ளன.

ரயில்களுக்கான ஆசன முன்பதிவுகள் (15) ஆம் திகதிக்கு பின்னர் ஆரம்பிக்கப்படுமெனவும் ரயில்வே திணைக்கள பொது முகாமையாளர் ஏ.டி.உஸ். முனசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் ஓமந்தை வரையிலான ரயில் பாதை புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக கடந்த ஜனவரி மாதம் 05 ஆம் திகதி முதல் மூடப்பட்டது. 62 கிலோமீற்றர் நீளமான இந்த ரயில் பாதை இந்திய கடனுதவியின் கீழ் புனரமைக்கப்பட்டது. இதற்காக 33 பில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

மேற்படி ரயில் பாதையை புனரமைக்கும் நடவடிக்கைகள் இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்படுகின்றன. முதலாவது கட்டமான அநுராதத்திலிருந்து ஓமந்தை வரையிலான ரயில் பாதை புனரமைப்பு நடவடிக்கைகள் நிறைவுபெற்றுள்ளன.

இரண்டாம் கட்டமான மஹவ முதல் அநுராதபுரம் வரையிலான ரயில் பாதை புனரமைப்பு நடவடிக்கைகள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடைமுறைப்படுத்தப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. புனரமைக்கப்பட்டுள்ள இந்த ரயில் பாதையில் ரயில்கள் 100 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்க முடியும்.

அந்த வகையில் முன்னரை விட பெருமளவு நேரத்தை பயணிகள் மீதப்படுத்த முடியும் என்றும் ரயில்வே உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

## நல்லிணக்கத்தை உருவாக்கும்...

நிவர்த்திக்கப்படும் பட்சத்தில் வருடம் ஒரு முறை ஜெனீவாவில் சாட்சிக் கூண்டில் நிற்க வேண்டிய அவசியம் இருக்காதெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (11) நடைபெற்ற உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறை பற்றி சிவில் சமூகத்தை தெளிவூட்டும் கலந்துரையாடலின் போதே ஜனாதிபதியின் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையின் நோக்கத்தை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெளிவுபடுத்தியதோடு, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பணிகள் பற்றியும் வெகுவாக ஆராயப்பட்டது.

பின்னர் ஆணைக்குழுவின் நோக்கத்தை அடைவதற்கு சிவில் சமூகத்தின் நிலைப்பாடுகளை கேட்டறிந்த ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, நல்லிணக்கச் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுக்க சகலரதும் ஒத்துழைப்புக்களை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

ஒரு நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்வதற்கு அனைத்து பிரஜைகளினதும் பங்களிப்பு மிக அவசியமானதென ஜனாதிபதியின் செயலாளர் மேலும் சுட்டிக்காட்டியிருந்தார்.

## அரசின் நலன்புரி கொடுப்பனவுகளை...

முறையாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இச்சட்டத்தை முறைப்படி நடைமுறைப்படுத்துவதன் மூலம் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளும் போது தகவல்களை வழங்குவோர், தகவல்களை சேகரிப்போர் பொறுப்புக்களை பகிர்ந்துகொள்ள வேண்டும். இதன் போது அரசாங்க உத்தியோகத்தர்கள் இப்பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு சிலவேளை அதிருப்தி தெரிவிப்பதால் வேறு ஆளணியொன்றை பயன்படுத்தி தகவல்கள் திரட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், சமுர்த்தி வங்கிக் கட்டமைப்பை மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தலின் கீழ் கொண்டுவருவதற்காக தற்போது பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, அஸ்வெசும நலன்புரி வேலைத் திட்டங்களில் எந்த உள்நோக்கமும் கிடையாது. தகைமையுடையோருக்கு கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கம். சில காலங்களின் பின்னர் அவர்களுக்கு நிவாரணங்கள் அவசியமில்லை என்ற நிலைக்கு அவர்களைக் கொண்டு வருவதே அந்த வேலைத்திட்டத்தின் இலக்காகும்.

பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு முறையான வேலைத்திட்டமொன்றின் கீழ், அரசியல் இன, மத, பிரதேச பேதங்களுக்கு அப்பால் முறையாக நலன்புரிக் கொடுப்பனவுகளை இந்தத் திட்டத்தின் கீழ் வழங்குவதே அரசாங்கத்தின் பிரதான இலக்கு என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மாணவர்களுக்கான 'சுரக்ஷா'...

முயற்சியின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த காப்புறுதி முறை, கடந்த கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியின் போது இடைநிறுத்தப்பட்டது.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய இந்தக் காப்புறுதி முறை எதிர்வரும் வருடம் முதல் மீண்டும் அமுல்படுத்தப்படுமென கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## கண்டியில் ஏழு மரணங்களுக்கு...

பெரிட்டோனியல் டயாலிசிஸ் தீர்வுடன் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது, 2026 ஆம் ஆண்டு வரை தேசிய மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மருந்தாகும். எனினும், இந்த மரணங்கள் தொடர்பில் விரிவான விசாரணையை ஆரம்பித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பூஞ்சை தொற்று காரணமாக இந்த மரணங்கள் ஏற்பட்டதா? என்பது இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பெரிட்டோனியல் டயாலிசிஸ் என்பது இரத்தத்திலுள்ள கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கான ஒரு வழியாகும். அத்துடன் அது, சிறுநீரக செயலிழப்புக்கான சிகிச்சையாகுமென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

## காணி சுவீகரிப்புக்கு எதிராக...

ஏக்கருக்கும் அதிகமான தனியார் காணிகளை, வெலிசுமன கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் நோக்கில், நேற்று புதன்கிழமை அளவீட்டுப் பணிகளை ஆரம்பிக்கப் போவதாக நில அளவைத் திணைக்களத்தினரால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அளவீட்டுப் பணிகளை தடுத்து நிறுத்துவதற்காக, மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் மண்டைதீவு கிழக்கு முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு அருகில் ஒன்று கூடியவர்கள் நகர்ந்து சென்று வெலிசுமன கடற்படை முகாம் முன்பாக கூடி எதிர்ப்பை வெளியிட்டனர். அதனை அடுத்து அளவீட்டு பணிகள் கைவிடப்பட்டன.

## பிஸ்கட், குளிர்பானம் வழங்கிய...

திணைக்களம் நேற்று புதன்கிழமை நடவடிக்கை எடுத்தது. இதன்போது, கடற்படை முகாமுக்கு முன்பாக காணி உரிமையாளர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்டோர் ஒன்று கூடி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போதே, இம்மக்களுக்கு பிஸ்கட் மற்றும் குளிர்பானங்களை கடற்படையினர் வழங்கினார்.

எனினும், மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் அவற்றை வாங்க மறுத்துள்ளனர்.

## இலங்கை பல...

நல்லிணக்கம் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அரசாங்கத்தின் வேலைத்திட்டமாகுமென்பதையும் இலங்கை தூதுவர் அதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுவாக இலங்கை தொடர்பில் 294 பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அந்த அனைத்து பரிந்துரைகள் மீதும் அரசாங்கம் உன்னிப்பான கவனத்தை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள ஹிமாலி அருணதிலக, இலங்கையின் ஸ்திரத்தன்மை தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதுடன் தேசிய ரீதியாகவும் மற்றும் அரசியலமைப்பின் மூலமும் தேசிய கொள்கை ரீதியான நிலைப்பாடு தொடர்பில் சிந்திக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி அறிக்கை, சர்வதேச ரீதியில் இலங்கை சுயாதீனமாக இணைந்துள்ள பொறுப்பு வரைபுக்கு முரணாக இல்லையென்பதை சிந்திக்க வேண்டும் என்பதுடன் அதில் 173 பரிந்துரைகளுக்கு இலங்கை பாராட்டு தெரிவிப்பதாகவும் ஹிமாலி அருணதிலக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் 115 பரிந்துரைகள் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டியுள்ளதாக தெரிவித்துள்ள அவர், எனினும் மனித உரிமை கவுன்ஸிலில் யோசனையுடன் சம்பந்தப்பட்ட 06 பரிந்துரைகள் தொடர்பில் இலங்கை கவனம் செலுத்தாது என்றும் அரசாங்கத்தின் கொள்கைகளின் அடிப்படையில் அதனை நிராகரிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து பிரஜைகளினதும் அடிப்படை சுதந்திரத்தை அரசாங்கம் உறுதிப்படுத்துவதாகவும் இலங்கைக்கு பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பில் கிடைத்துள்ள அனைத்து பரிந்துரைகள் சம்பந்தமாக பாராட்டுக்களைத் தெரிவிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


இலங்கையிலிருந்து தொழுநோயை இல்லாதொழிக்கும் வழிமுறைகள்

LAKE HOUSE தினகரன் தினகரன் வாரமஞ்சரி

திறந்த கட்டுரைப் போட்டி

தொனிப் பொருள்

இலங்கையில் தொழுநோய்ப் பாதிப்பு முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது தொடக்கம், அந்நோயைக் கட்டுப்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான வரலாற்றுத் தகவல்கள் உங்களது கட்டுரையில் உள்ளடங்கியிருப்பது அவசியம்.

பரிசுத் தொகை

முதலாம் பரிசு: 50,000 ரூபா
இரண்டாம் பரிசு: 25,000 ரூபா
மூன்றாம் பரிசு : 15,000 ரூபா
10 பேருக்கு ஆறுதல் பரிசாக தலா 5,000 ரூபா வழங்கப்படும்

கட்டுரையின் வடிவம்

இலங்கை தொடர்பான தகவல்களை மையப்படுத்தியதாக கட்டுரைகள் அமைந்திருக்க வெண்டும். கட்டுரைப் போட்டியில் பங்குபற்றுவதற்கு வயதெல்லை கிடையாது. கட்டுரைகள் உங்களது சுய ஆக்கமாக இருப்பதுடன், கட்டுரைக்கான ஆக்கத்திறன் வரம்புக்குள் அமைந்ததாகவும் இருப்பது அவசியம். கற்பனைகளைத் தவிர்த்து, ஆய்வுரீ தியில் எழுதப்பட வேண்டும். பத்திரிகைகள் மற்றும் நூல்களில் முன்னர் வெளியான கட்டுரைகளைத் தழுவியதாக இருத்தல் கூடாது. அத்துடன் வலைதளத்தில் வெளியான ஆக்கங்களை பிரதிபண்ணுவதும் தவிர்க்கப்பட வேண்டும். உங்கள் ஆக்கத்தை கணனியில் தட்டெழுத்து செய்து அனுப்பினால் வாசிப்பதற்கு இலகுவாக இருக்கும். கையெழுத்துப் பிரதிகள் தெளிவற்றிருப்பின் அவை நிராகரிக்கப்படும்.

கட்டுரைகள் அனுப்பி வைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி
shrikanth.tkn@gmail.com
editor.tkn@lakehouse.lk
முகவரி :
Editor, Thinakaran Editorial
ANCL, Lake house,
NO.35.D.R.Wijewardene Mawatha,
Colombo – 10

மேலதிக விபரங்களுக்கு
0112429277, 0772409406

சுகாதார துறைசார்ந்தவர்கள் எழுதும் கட்டுரைகள் அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டுரைகள் பேராசிரியர்கள் கொண்ட மேற்பார்வை குழுவால் பரிசீலிக்கப்பட்டே தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

தேர்வாளர்களின் முடிவே இறுதி தீர்வாக இருப்பதோடு அதற்கு எதிரான காரணங்கள் ஏற்றுக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படும்.

கட்டுரைகள் அனைத்தும் ஜுலை 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூலுருவாக்கப்படுவதோடு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும்.



பௌத்த மற்றும் மத விவகார கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஈரான் கலாசார நிலையத்தின் கவுன்சிலர் கலாநிதி மௌசாமி கொடரசி இடையிலான சந்திப்பு (10) கொழும்பு ஈரான் கலாசார நிலையத்தில் நடைபெற்றது. இச் சந்திப்பின்போது இரு நாடுகளுக்கிடையிலான முக்கிய விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன. (படங்கள் அஷ்ரப் ஏ சமத்)

### இவ்வருடத்தின் 5 மாதங்களில்

# சீனி, இனிப்புப் பண்டங்கள் இறக்குமதிக்காக அரசாங்கம் 2020.5 மில்லியன் டொலர்கள் செலவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்த வருடத்தில் மே மாத இறுதிவரையில் நாட்டிற்கு சீனி மற்றும் இனிப்பு பண்டங்களை கொள்வனவு செய்வதற்காக 2020.5 மில்லியன் டொலர்களை அரசாங்கம் செலவிட்டுள்ளது.

கடந்த வருடத்தோடு அதனை ஒப்பிடுகையில் கடந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள சீனி மற்றும் இனிப்பு பண்டங்களுக்கு நூற்றுக்கு 123 வீதத்திற்கும் அதிகமாக செலவிட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் முதல் ஐந்து மாதங்களில் சீனி மற்றும் இனிப்புப் பண்டங்களை இறக்குமதிசெய்வதற்காக அரசாங்கம் 98.6 மில்லியன் டொலர்களை மாத்திரமே செலவிட்டுள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அந்த வகையில் இந்த வருடத்தின் மே மாதத்தில் மாத்திரம் நாட்டிற்கான சீனி மற்றும் இனிப்புப் பண்டங்களை இறக்குமதி செய்வதற்காக 59.8 மில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளதுடன் கடந்த வருடத்தின் மே மாதத்தில் அந்த செலவு 12.8 மில்லியன் டொலராக காணப்பட்டதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அந்த வகையில் கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் அந்த செலவு நூற்றுக்கு 367 வீத அதிகரிப்பை காட்டுவதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

மதவாச்சி பூனேவ பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போது எட்டு கிலோவிற்கும் அதிகமான கேரள கஞ்சாவினை பயணிகள் பஸ் வண்டியொன்றில் கடத்திச் சென்ற சந்தேக நபர்கள் இருவரை பூனேவ பொலிஸார் (11) கைது செய்துள்ளனர்.

பூனேவ நகரில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் வீதித்தடை சுற்றிவளைப்பின் போதே கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறிப்பிட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் 32,36 வயதுடைய விஷ்வமடு மற்றும் ஹினிதும பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பூனேவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### 2016ஆம் ஆண்டு பாலியல் சேஷ்டை;

## குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட பிரபல பாடசாலை அதிபர்

### மாணவிக்கு இழப்பீடு; குற்றவாளிக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனை

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



அநுராதபுரம் பிரதேச பாடசாலை ஒன்றில் 12 வயதுடைய மாணவி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய எத்தனித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு, குறித்த குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்ட பாடசாலையின் அதிபருக்கு அநுராதபுரம் பிரதான நீதவான் நாளக்க சஞ்ஜீவ ஐந்து ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட ஓராண்டு கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளதோடு

அதற்கு மேலதிகமாக முறைப்பாட்டாளரான சிறுவயது பாடசாலை மாணவிக்கு 50 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்குமாறும் நீதவான் (11) உத்தரவிட்டுள்ளார்.

2016 ம் ஆண்டு ஆகஸ்ட் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் தற்போது அந்த அதிபர் தம்புத்தேகம கல்வி வலய பாடசாலை ஒன்றில் கடமையாற்றி வருகின்றார். வழக்கின் சாட்சியை அழைப்பதற்கு முன்பே சந்தேக நபர் குறித்த குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டுள்ளார்.

தண்டனை விதிக்கப்பட்டுள்ள அதிபரின் மனைவி அநுராதபுரம் கல்வி வலய பாடசாலை ஒன்றில் பிரதி அதிபராக கடமையாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## மனம்பிட்டிய கொடலிய பாலத்தை விரைவாக புனரமைக்க பணிப்பு

### வட மத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் அதிகாரிகளுக்கு வேண்டுகோள்



**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

மனம்பிட்டிய கொடலிய பாலத்திலிருந்து ஆற்றில் விழுந்து 11 பேரை காவு கொண்ட பஸ் விபத்து தொடர்பில் வட மத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் கவனம் செலுத்தியுள்ளார்.

குறித்த பாலத்தை மிக விரைவில் புனரமைத்து பாதுகாப்பு வேலி மற்றும் பாதுகாப்பு சமிக்ஞை பலகை என்பனவைகளை நிர்மாணிக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

குறித்த பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் (11) கள விஜயமொன்றை ஆளுநர் மேற்கொண்டிருந்ததுடன் பாதைக்கு சமமாக பாலத்தை விஸ்தரிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்குமாறும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான பொறியியலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அது தொடர்பிலா சகல தகவல்களும் அடங்கிய அறிக்கை ஒன்றை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் போக்குவரத்து அமைச்சர் ஆகியோருக்கு வழங்குவதற்கு தயார் செய்யுமாறு ஆளுநர் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

விபத்திற்குள்ளான பஸ்ஸுக்கு வழங்கிய போக்குவரத்து அனுமதிப்பத்திரம் தொடர்பிலான அறிக்கை ஒன்றையும் சமர்பிக்குமாறு வீதி போக்குவரத்து அதிகார சபைக்கு ஆளுநர் தெரிவித்துள்ளார்.

குறித்த விஜயத்தின் போது பொலன்னறுவை மாவட்ட செயலாளர் டபிள்யு.ஏ. தர்மசிறி, ஆளுநரின் செயலாளர் சிந்தக்க ரணசிங்க, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான பொறியியலாளர் எச்.பீ.எல். சந்திரதிலக உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## கொழும்பில் 'இலங்கை காரிகள் சபை' அங்குரார்ப்பணம்

**(வெலிகம தினகரன் நிருபர்)**

கொழும்பு தெஹிவளை ஸைனப் பள்ளிவாசலில் 'ஜம்இய்யதுல் குர்ரா' எனும் பெயரில் இலங்கை காரிகள் சபை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜாமிஆ இப்னு உமர் கலாபீட உப அதிபர் அஷ்ஷெய்க் முப்தி ரியாழ் பாரூக் (ரஷாதி) கலந்து கொண்டார்.

இலங்கையில் அல்குர்ஆனிய துறையில் கிராஅத் , இஜாஸத், கற்கை நெறிகளை பூர்த்தி செய்து சிறப்புத் தேர்ச்சி பெற்று பல மட்டங்களிலும் பாரிய சேவைகளை ஆற்றிக் கொண்டிருக்கும் காரிகளை ஒன்று சேர்த்தல், அல்குர்ஆனிய சேவைகளை நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தல், மேலும் பல முன்னேற்றகரமான திட்டங்களை முன்னெடுத்துச் செல்லல் ஆகிய தூர நோக்கங்களுடன் இவ் 'ஜம்இய்யதுல் குர்ரா' இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் காரிகளை ஒன்று சேர்க்கும் முதலாவது முயற்சி இது என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சபையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களாக : தலைவர் அஷ்ஷெய்க் காரி எம்.ஆர்.எம் ரிபாஸ் (அல் அஸ்ஹரி) , உப தலைவர் அஷ்ஷேக் காரி எம்.எப்.பவாஸ் (ஹிழ்ரி), பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் காரி எம்.என் .ஏ பிர்னாஸ் (ஷாபிஈ), உப செயலாளர் அஷ்ஷெய்க் காரி எம்.இஸட்.எம் ஸுஹைர் (அல் அஸ்ஹரி), பொருளாளர் அஷ்ஷெய்க் காரி எம்.ஆர்.எம் பஸ்மீர் ( ஹாசிமி), ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷெய்க் காரி ஏ.ஏ.எம் அஸ்லம் (ரஷாதி), உப ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷெய்க் காரி எம்.எச்.எம் பஹ்மி (ஷாபிஈ) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 7 பேர் கொண்ட நிர்வாகக் குழுவினரும் தெரிவாகினர்.

## பொலிஸ் கண்காணிப்பு கூடம் புத்தளத்தில் திறந்து வைப்பு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**



வடமேற்கு வடக்கு பிரதேசத்துக்கான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நாலக டி. சில்வாவின் வேண்டுகோளுக்கிணங்க புத்தளம் ஐக்கிய வர்த்தக நலன்புரிச் சங்கத்தினரால் புதுப்பிக்கப்பட்ட பொலிஸ் கண்காணிப்புக் கூடம், புத்தளம் பொலிஸ் நிலையத்திடம் கையளிக்கும் எளிமையான நிகழ்வு அண்மையில் புத்தளம் நகர மத்தியில் நடைபெற்றது.

இக் கண்காணிப்புக் கூடத்தை டீ.ஐ.ஜீ. நாலக டி சில்வா மற்றும் புத்தளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குலதுங்க ஆகியோர் திறந்துவைத்தனர்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.எஸ்.கே. ரூபசிங்க மற்றும் பொலிஸ் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது வர்த்தக வணிக நடவடிக்கைகளுடன் சமூக ரீதியான நடவடிக்கைகளில் புத்தளம் ஐக்கிய வர்த்தக நலன்புரி சங்கம் வழங்கும் பங்களிப்பை பாராட்டிய டீ.ஐ.ஜீ. நாலக டி சில்வா, புத்தளம் நகரத்தின் காவல், பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் அதன் அழகை பராமரிப்பதிலும் வர்த்தக சமூகத்தின் பங்களிப்பை வலியுறுத்தினார்.

இந்நிகழ்வுக்கு புத்தளம் வர்த்தக நலன்புரி சங்கத்தின் தலைவர் வை.எம். நிஸ்தாத், செயலாளர் இஹ்ஸாஸ் இல்யாஸ் உட்பட நிருவாக உறுப்பினர்களும் அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர். புத்தளம் பொலிஸினால் வழமையான இரவு ரோந்து சேவைக்கு மேலதிகமாக விசேட இரவு பொலிஸ் ரோந்து சேவை அமுல்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## யுவதியின் திடீர் மரணம் தொடர்பில் பேராதனை பொலிஸார் விசாரணை

**(எம்.ஏ.அமீனுல்லா)**

வயிற்றில் ஏற்பட்ட கோளாறு காரணமாக பேராதனை போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (11)அனுமதிக்கப்பட்ட 21 வயதுடைய யுவதியொருவர் உயிரிழந்துள்ளார். ஊசி ஏற்றப்பட்டதை தொடர்ந்தே யுவதி உயிரிழந்ததாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டதை தொடர்ந்து பேராதனை வைத்தியசாலை மற்றும் பேராதனை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கண்டி பொத்தம்பிட்டிய அலகல்ல பகுதியைச் சேர்ந்த சாமோதி சந்தீபனி மதுஷிகா ஜயரத்ன என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்து காரணமாக கடந்த 10ஆம் திகதி கடப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட யுவதி மறுநாள் அம்புலன்ஸ் வண்டியில் தாயாருடன் பேராதனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

### கல்முனை பிராந்திய சுகாதார பிரிவில்

## போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் விற்பனை தடை

**(ஒலுவில் விசேட நிருபர்)**



கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குட்பட்ட உணவகங்கள், ஹோட்டல்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் போத்தலில் அடைக்கப்பட்ட குடி நீர் விற்பனையை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் ஆகியவற்றில் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இக் குடி நீரை அருந்துவது உடல் நலத்திற்கு உகந்தது அல்ல எனவும் தெரிவித்தார்.

ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு வரும் பொது மக்களும் கிணறுகள், குழாய்கள் மூலம் பெறப்படும் நீரை அருந்துமாறு கேட்டுள்ளார்.

அக்கரைப்பற்று, சம்மாந்துறை, பொத்துவில் மற்றும் கல்முனை ஆகிய நகர் பிரதேசங்களிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் உணவகங்கள் பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

போத்தலில் அடைக்கப்பட்ட குடி நீர் விற்பனை தொடர்பாக சுகாதார பரிசோதகர் குழுவினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பரிசோதனை குழுவின் அறிவுரைக்கமைய அதற்கெதிராக செயற்படுபவர்களுக் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

### சிகை அலங்கார தொழிலாளர்களுக்கு

## சுகாதார வழிகாட்டல் தொடர்பான கருத்தரங்கு



**இறக்காமம் தினகரன் நிருபர்**

இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள சிகை அலங்கார தொழிலாளர்களின் நன்மை கருதி சுகாதார வழிகாட்டல் கருத்தரங்கு இறக்காமம் அய்மன் கலை நிறுவனத்தின் ஏற்பாட்டில் இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் இடம் பெற்றது.

இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரி Dr.எம்.என்.எப்.றஸ்கா ஹாசிமி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வைத்திய அதிகாரி ஏ.எஸ்.எம்.பௌசாத் உட்பட பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கருத்துரைத்த சுகாதார வைத்திய அதிகாரி : இத்தொழில் தொடர்பான சுகாதார நடைமுறைகள் தொடர்பாகவும் ஒழுங்குகள் தொடர்பாகவும் பல்வேறு கருத்துக்களை வழங்கினார். மேலும் வெள்ளிக்கிழமைகளில் சிகை அலங்கார நிலையங்களை கிரமமாக மூடுவதற்கும் விலைப்பட்டியல்கள் முறையாக காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன் போது கருத்தரங்கில் கலந்து கொண்ட சிகை அலங்கார தொழிலாளர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### மலையக பிரதான நகரங்களில்

## இரவுநேர பொலிஸ் பாதுகாப்பை பலப்படுத்துமாறு கோரிக்கை

மலையக பிரதான நகர பிரதேசங்களில் இரவு ஒன்பது மணிமுதல் அதிகாலை வரை பொலிஸ் பாதுகாப்பை பலப்படுத்துமாறு நகர வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இரவுவேளைகளில் பொலிஸ் ரோந்து சேவையை பலப்படுத்தவும் நகர வர்த்தகர்கள் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தலவாக்கலை நகரில் ஆறு கடைகள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டிருந்தன. இதனையடுத்தே வர்த்தகர்கள் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

அத்துடன் கடந்த காலங்களில் நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களில் பிரதான நகரங்களில் கடைகள் உடைக்கப்பட்டு கொள்ளை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இருந்தபோதிலும் இந்த கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டவர்களில் எத்தனை பேர் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர் என்பது தெரியாது எனவும் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் தலவாக்கலை நகரில் இடம்பெற்றுள்ள கொள்ளை சம்பவம் கண்டிக்கத்தக்கது. இதுகுறித்து நுவரெலியா பொலிஸ் தலைமையகம் விசாரணைகளை நடத்த வேண்டும் எனவும் வர்த்தகர்கள் கோரியுள்ளனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

செவ்வாய்க்கிழமை 2023.07.11

உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 5172
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 20,273,396.00
ஆங்கில எழுத்து: S
வெற்றி இலக்கங்கள்: 8 7 9 2 3 7

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம்: 3414
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 68,999,614.80
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 01 19 24 80

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம்: 1202
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 99,303,933.60
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 35 40 63 73
விசேட எழுத்து: L

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 481
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 3,151,899.00
வெற்றி இலக்கினம்: ரிஷபம்
வெற்றி இலக்கங்கள்: 04 32 35 58
விசேட இலக்கினம்: ரிஷபம்

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம்: 1520
அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 400,678,488.00
ஆங்கில எழுத்து: X
சுப்பர் இலக்கம்: 02
வெற்றி இலக்கங்கள்: 10 25 37 44
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

# கிழக்கின் குரல்



### இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் தலைமையில்

## மட்டக்களப்பு – வவுணதீவு பிரதேச அபிவிருத்தி குழு கூட்டம்

**(கல்லடி குறுப், புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு குறூப் நிருபர்கள்)**

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டம் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டம் செவ்வாய்க் கிழமை (11) மண்முனை மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவர் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில், பிரதேச செயலாளர் எஸ்.சுதாகரின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.



மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும், இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களுக்கான, அனுமதியினை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் இப் பிரதேசத்தின் விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், சுற்றாடல், மீன்பிடி உட்பட்ட அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்களும் விரிவாக ஆராயப்பட்டதுடன், அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் சிவ.சந்திரகாந்தன் உடன் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளை பணித்துள்ளார்.

இக் குழு கூட்டத்தில் மண்முனை மேற்கு உதவிப் பிரதேச செயலாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், மண்முனை மேற்கு பிரதேச சபையின் செயலாளர், வவுணதீவு பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட ஏனைய திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் என பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

அத்தோடு பிரதேசத்தில் கால்நடைகளை விற்பனை செய்வதற்கென தனியானதொரு பொது சந்தையினை உருவாக்க வேண்டியதன் அவசியம் மற்றும் அதன் ஊடாக கால்நடை வளர்ப்பாளர்கள் அதிக இலாபத்தை அடைய வாய்ப்பாக அமையும் என இதன்போது இராஜாங்க அமைச்சர் தெளிவுபடுத்தியிருந்தார்.

## சட்டத்தரணிகள் பணிப் பகிஷ்கரிப்பு



**(கல்முனை விசேட, பெரியநீலாவணை விசேட, சாய்ந்தமருது விசேட நிருபர்கள்)**

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவின் உரையைக் கண்டித்து கல்முனை நீதிமன்றங்களில் பணியாற்றும் சட்டத்தரணிகள் செவ்வாய்க் கிழமை (11) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டதுடன், ஆர்ப்பாட்டமொன்றையும் முன்னெடுத்தனர். கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் அழைப்பின் பேரில், அதன் தலைவர் எம்.ஐ. றைசுல் ஹாதி தலைமையில் நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு, குருந்தூர் மலையில் தமிழ் பௌத்த வழிபாட்டு எச்சங்களின் மீது, சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள சிங்கள பௌத்த கட்டுமானங்களை பார்வையிட முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா சென்றிருந்த வேளை, தனது குழுவினருடன் அங்கு வந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர இடையூறு விளைவிக்க முற்பட்டதையடுத்து, நீதிபதியினால் அவர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்.

இதன் பின்னர் சரத் வீரசேகர எம்.பி. பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி, நீதித்துறையிலுள்ள தமிழர்களுக்கு மிரட்டல் விடுக்கும் வகையில் பாராளுமன்றத்தில் பேசியிருந்தார். இதனைக் கண்டித்தே கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தினால் பணிப் பகிஷ்கரிப்பும் ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நூல் அறிமுக விழா

**கிண்ணியா தினகரன் நிருபர்**

கிண்ணியா மஜ்லிஸுஷ் ஷூறா திருகோணமலை நளீமியா பழைய மாணவர் அமைப்பு மற்றும் Ambitious Institution for Moral Generation ஆகியன இணைந்து ஏற்பாடு செய்யும் மாபெரும் நூல் அறிமுக நிகழ்வு, கிண்ணியா பொது நூலக கேட்போர் கூடத்தில் எதிர்வரும் சனிக்கிழமை (15) நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் கலாநிதி றவூப் ஷெய்ன் எழுதிய இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு நூல் அறிமுகமும், நூலாசிரியரின் கிழக்கு மாகாண முஸ்லிம் வரலாற்று வரைவியலும் தேச நிர்மாணமும் (Historiography of East Muslims and Nation building) என்ற விசேட உரையும் இடம்பெறவுள்ளது.

## சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



நிந்தவூர் 17 ஐ சேர்ந்தவரும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் பத்வா பிரிவிவிலும், வெளியீட்டுப் பிரிவிலும் இணைப்பாளராக கடமையாற்றுபவருமான அப்துல் ஹாலித் முஹம்மத் மின்ஹாஜ் (முப்தி, அகில இலங்கை சமாதான நீதவானாக கல்முனை மேல் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

உமர் கத்தாப் அப்துல் ஹாலித் மற்றும் உதுமாலெவ்வை நூறுல் ஹிதாயா தம்பதிகளின் புதல்வரான இவர், நிந்தவூர் அல் மதீனா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்றதோடு, சாய்ந்தமருது மஹ்ஹதுத் தஹ்வதுல் இஸ்லாமிய்யா அரபுக் கல்லூரியில் அல் ஹாபிழ் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரியில் மௌலவிப் பட்டத்தையும், மாவடிப்பள்ளி மர்கஸ் அல் குல்லியத்துல் ஸஹதில் அறபியா இஸ்லாமிய கலாபீடத்தில் ஹதீஸ் கலையில் உயர் டிப்ளோமாவையும், கேரளாவின் மலைப்புறம் மாவட்டத்திலுள்ள ஜாமிய்யா இஸ்லாமிய்யா, நஜ்முல் ஹுதா கலாபீடத்தில் நான்கு மத்ஹபுகளினதும் குறிப்பாக ஷாபிஈ மத்ஹபிலும், பிக்ஹ், உஸூலுல் பிக்ஹ் சம்பந்தமான இஸ்லாமிய சட்டத்துறை பாடங்களில் விஷேட பட்டம் பெற்று முப்தியாக பட்டம் பெற்றுள்ளார்.



அம்பாறை மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள சிந்தக்க அபேவிக்ரம, செவ்வாய்க் கிழமை (11) நிந்தவூர் பிரதேசத்திற்கு விஜயம் செய்தார். நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ எம்.அப்துல் லத்தீபின் வேண்டுகோளுக்கிணங்க இங்கு விஜயம் செய்த இவர், இப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பு தொடர்பாக. உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுவதைக் காணலாம். (படம்: கல்முனை குறூப் நிருபர்)

## ஏறாவூர் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த துபாய் நாட்டின் உதவி

### அமைச்சர் நசீர் அஹமட்டினால் பல்வேறு திட்டங்கள் அமுல்

**(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)**

சுற்றாடல் அபிவிருத்தி அமைச்சர் நசீர் அஹமட் எடுத்துக் கொண்ட பெரு முயற்சியின் பயனாக, துபாய் நாட்டு உதவியில் ஏறாவூர் பிரதேச வறிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத் திட்டத்தின் மூலம் ஏறாவூர் பிரதேசத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கு, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல சுய தொழில் திட்டங்கள் அமைச்சரினால் முன்வைக்கப்பட்டுள்ளன.

இத் திட்டமிடுதலை மேற்கொள்ளும் பொருட்டு, அமைச்சர் நசீர் அஹமட்டின் வேண்டுகோளின் பேரில் துபாய் நாட்டுப் பிரதிநிதிகள் செவ்வாய்க்கிழமை (11) ஏறாவூர் பகுதிக்கு விசேட வருகைதந்தனர். ஏறாவூர் பிரதேசத்தின் எல்லைப்புற கிராம பிரதேசங்களுக்கு சென்று மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து மக்களுடன் கலந்துரையாடி தேவைகள் பற்றி கேட்டு அறிந்து கொண்டனர்.



இத் திட்டத்தின் ஊடாக பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, கோழி, ஆடு, மாடு வளர்ப்பு விவசாய செய்கைகள் மீன் வளர்ப்பு உட்பட பல்வேறு சுய தொழில் திட்டங்கள் பற்றி பிரதேச மக்களால் தனது கோரிக்கைகள் துபாய் நாட்டு பிரதிநிதிகளுக்கு முன் வைக்கப்பட்டன.

ஏற்கனவே அமைச்சரின் வேண்டுகோளில் மேற்கொள்ளப்பட்டு வந்த திட்டங்களின் முன்னேற்றங்கள் பற்றியும், துபாய் நாட்டுப் பிரதிநிதிகள் நேரில் கண்டறிந்ததுடன், அதன் வளர்ச்சி பற்றியும் விசேட கலந்துரையாடல்களை நடத்தினர்.

## பாடசாலை பைகள் விநியோகிக்கும் நிகழ்வு

**(ஏறாவூர் நிருபர்)**

சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட்டின் வேண்டுகோளுக்கிணங்க, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பகிர்ந்தளித்த நானூறு பாடசாலை பைகளை விநியோகிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (11) ஏறாவூரில் நடைபெற்றது. மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ்.எம்.எம். அமீர் தலைமையில் நகர சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

காத்தான்குடி, ஏறாவூர் மற்றும் கோறளைப்பற்று மேற்கு ஆகிய பிரதேசங்களிலுள்ள இருபத்தேழு பாடசாலைகளின் பொருளாதாரம் குறைந்த நானூறு மாணவர்களுக்கான இந்த பைகள் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான திருமதி றிப்கா ஜெயினுதீன், தாஜுன்னிசா, அஜ்மீர் மற்றும் ஏறாவூர் நகரசபையின் செயலாளர் எம்.எச்.எம். ஹமீம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## ஏறாவூரில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் முன்னெடுப்பு

**(ஏறாவூர் சுழற்சி நிருபர்)**




ஏறாவூர் பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பெருகுவதை கட்டுப்படுத்துவதோடு, பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்களை ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் முன்னெடுத்து வருகின்றது.

ஏறாவூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி திருமதி ஸாபிரா வஸீம் தலைமையில் இவ் வேலைத் திட்டம், கிராம சேவகர் பிரிவு ரீதியாக முன்னொடுக்கப்பட்டதோடு, இவ்வேலைத் திட்டத்தில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான சூழல் காணப்பட்ட இடங்கள் இனங்காணப்பட்டு, பொது மக்களின் ஒத்துழைப்புடன் துப்புரவு செய்யப்படுவதோடு, வீடு வீடாகவும் களப் பரிசோதனைகள் நடாத்தப்படுகின்றன.

இவ் விசேட வேலைத்திட்டத்தில் ஏறாவூர் நகர, பிரதேச செயலாளர் திருமதி நிஹாறா மௌஜுத், ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.எச்.பழீல், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், ஏறாவூர் பொலிஸார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நீர் தேங்கக் கூடிய பொருட்களான வெற்றுக் குவளைகள், சிரட்டைகள் மற்றும் டயர்கள் என்பவைகளை உடன் அகற்றுமாறும், கிணறு மற்றும் நீர்த்தாங்கிகள் என்பவற்றை நுளம்புவலை கொண்டு மூடுவதுடன், வீட்டின் கூரைப் பீலிகளை சுத்தப்படுத்துவதோடு, இவ் வேலைத் திட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குமாறு பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.



மருதமுனை சமுர்த்தி வலயத்தில் ஏப்ரல், மே ஆகிய இரண்டு மாதங்களில் இரண்டு சமுர்த்தி வீட்டு லொத்தர் வெற்றியாளர்களுக்கான தலா இரண்டு இலட்சம் பெறுமதியான காசோலைகள் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை (10) சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர். எம். சாலிஹ் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி கலந்து கொண்டு பயனாளிக்கு காசோலையை வழங்கி வைத்த போது. (படம்: மருதமுனை தினகரன் நிருபர்)

## அக்கரைப்பற்றில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

**(அக்கரைப்பற்று வடக்கு தினகரன், திராய்க்கேணி தினகரன் நிருபர்கள்)**

அக்கரைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லாவின் பங்கேற்புடன், செவ்வாய்க்கிழமை (11) அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம் அன்ஸாரின் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கு ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு காத்திரமான தீர்வுகள் எட்டப்பட்டன. அதனடிப்படையில், அக்கரைப்பற்று கல்விக் கோட்டத்தில் காணப்படும் பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகள் ஆராய்ந்து நிரந்தரமான தீர்வு ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துதல், வெள்ள அனர்த்தங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு வழிமுறைகள் இனங்காணப்படுவதுடன், ஆறுகள் வடிகால்கள் முறையாக பராமரிக்கபடுவதற்கு தேவையான முன்மொழிவுகளை நீர்ப்பாசனத் திணைக்களம் முன்வைக்கவேண்டுமென இணைப்புக் குழு தலைவர் அதாஉல்லா கேட்டுக்கொண்டார்.

விவசாய வீதிகளை புனரமைத்தல், நீர்ப்பாசன மற்றும் சுகாதார சேவைகளை மேம்படுத்துதல், சுத்தமான குடிநீர் வழங்குதல் போன்ற மக்களின் அத்தியாவசிய தேவைகளை விஸ்தரிப்பு செய்வது தொடர்பாகவும் கலந்து கொண்ட திணைக்களத் தலைவர்களினால் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டது.

## திருமலை பாடசாலைகளில் பசுமை வகுப்பறை திறப்பு விழா

**(ரொட்டவெவ குறூப் நிருபர்)**

திருகோணமலையில் உள்ள மூன்று பாடசாலைகளில் முன்மாதிரி பசுமை வகுப்பறை ஒழுங்கமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டது. இத் திட்டம் வன்னி ஹோப் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் நிதி பங்களிப்போடு Trinco Aid நிறுவனத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு செயற்படுத்தபட்டது. பசுமை வகுப்பறை என்பது நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக வடிவமைக்கப்பட்ட கற்றல் சூழலாகும். இது சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பிளாஸ்டிக் பாவனையை கட்டுப்படுத்தல் மற்றும் பாதுகாப்பை ஊக்குவிக்கும் ஒரு இடமாகும், மேலும் இது சுற்றுச்சூழலை மதிக்கும் வகையில் எவ்வாறு வாழ வேண்டும் மற்றும் கற்றுக்கொள்வது என்பது குறித்து மாணவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் வகுப்பறை ஒழுங்கமைக்கப்பட்டது. முதல் பசுமை வகுப்பறை கடந்த மாதம் திருகோணமலை தி/புனித மரியாள் கல்லூரியில் திறந்து வைக்கப்பட்டது. இன்று மூன்று பாடசாலைகளில் வகுப்பறைகள் பசுமை வகுப்பறைககளாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இத் திறப்பு விழா தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியிலும், தி/சாஹிரா கல்லூரியிலும், தி/சிங்கள மகா வித்தியாலயத்திலும் ஆரம்பிக்கப்பட்டது.

# யாழ். பல்கலை துணைவேந்தர் பதவிக்கு மூவர் பேரவையால் தெரிவு

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்த நால்வரில், திறமைப் புள்ளிகளின் அடிப்படையில் மூவர் பேரவையால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழகங்களில் துணை வேந்தரை நியமிப்பதற்கான சுற்று நிருபத்துக்கமைய, துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்தவர்களின் தகுதி, தராதரங்களின் அடிப்படையில் திறமைப் புள்ளியிடலுக்காக பல்கலைக்கழகப் பேரவை நேற்று (12) கூடியது.

இதன்போது துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்த தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் செ.கண்ண



தாசன், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபயும் சிரேஷ்ட பேராசிரியருமான தி.வேல்நம்பி, கிழக்கு பல்கலைக்கழக விலங்கியல்துறைப் பேராசிரியர் பி.வினோபாபா ஆகியோர் பேரவை உறுப்பினர்கள் முன்னிலையில் தமது அளிக்கைகளை முன்வைத்தனர்.

சுற்றறிக்கையில் வரையறுக்கப்பட்ட புள்ளித் திட்டத்துக்கமைய ஒவ்வொரு பேரவை உறுப்பினர்களும் தனித்தனியாக புள்ளிகளை வழங்கினர். புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்றிடங்களும் முறையே பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சிரேஷ்ட பேராசிரியர் ரி.வேல்நம்பி, பேராசிரியர் செ.கண்ணதாசன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

அதனடிப்படையில் பேரவையின் பரிந்துரை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சினூடாக ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பப்படவுள்ளது.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்துக்கமைய, ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின்படி, பல்கலைக்கழகப் பேரவையால் பரிந்துரைக்கப்பட்டுள்ள மூவரில் ஒருவரை துணைவேந்தராக ஜனாதிபதி அறிவிப்பார்.

தற்போதைய துணைவேந்தரின் பதவிக்காலம் எதிர்வரும் ஓகஸ்ட் 28ஆம் திகதியுடன் நிறைவடைவதால், விரைவில் அடுத்த துணை வேந்தர் அறிவிக்கப்படுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

# வடக்கின் உதயம்

## UNDP உயரதிகாரிகள் கிளிநொச்சிக்கு விஜயம்

**பரந்தன் குறூப் நிருபர்**



ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் (UNDP) உயர் அதிகாரிகள் சிலர், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (11) விஜயம் செய்து, அம்மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாக அம்மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனுடன் கலந்துரையாடினர்.

இதன்போது மீன்பிடி, விவசாயம், காணிப் பிரச்சினை, கண்ணிவெடி அகற்றுதல், வீட்டுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக UNDP அதிகாரிகளிடம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெளிவுபடுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட விவசாய பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## பொதுநலவாய பளு தூக்கும் போட்டி; வவுனியா மாணவி சாதனை

**ஓமந்தை விசேட நிருபர்**



பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான பளு தூக்கல் போட்டிக்கு முதன்முறையாக வவுனியா மாவட்டத்திலிருந்து தெரிவாகிய மாணவியொருவர், இந்தியாவின் புதுடில்லியில் நேற்று புதன்கிழமை (12) நடைபெற்ற போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளார்.

2023ஆம் ஆண்டுக்கான அகில உலக பளு தூக்கல் போட்டியில் பங்குபற்றுவதற்காக வவுனியா, இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வரும் 16 வயதுடைய மாணவி கோசியா திருமேனன் தெரிவாகியிருந்தார். 40 கிலோ எடைப் பிரிவில் 92 கிலோ பளு தூக்குதல் போட்டியிலேயே இம்மாணவி தெரிவாகியிருந்தார்.

இந்நிலையில், புதுடில்லியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (11) ஆரம்பமாகிய இதற்கான போட்டி, எதிர்வரும் 16ஆம் திகதிவரை நடைபெறும். இப்போட்டியில் பங்குபற்றிய இம்மாணவி மூன்றாம் இடத்தைப் பிடித்து வெண்கல பதக்கத்தை பெற்றுள்ளார்.இப்போட்டியில் இம்மாணவி வெற்றி பெற்று, வடக்கு மாகாணத்துக்கு பெருமை சேர்த்துள்ளார்.

அகில உலக பளு தூக்கல் போட்டியில் இம்மாணவி பங்குபற்றுவதற்கான நெறிப்படுத்தலை ஞானஜீவன் ஆசிரியர் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர் தரப்பு விடயம்; இலங்கைக்கு இந்தியா அழுத்தம் வழங்க வேண்டும்

### இந்திய துணைத் தூதுவரிடம் இன்று கடிதம் கையளிக்க ஏற்பாடு

**யாழ். விசேட நிருபர்**



இந்தியாவுக்கு விரைவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஜயம் செய்யும்போது, தமிழர் தரப்பு விடயம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கம் அழுத்தம் வழங்க வேண்டுமென்பதை வலியுறுத்தும் கடிதமொன்று இன்று (13) இந்திய துணைத் தூதுவர் ஸ்ரீ ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனிடம் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியும் தமிழ் மக்கள் கூட்டணியும் இணைந்து கையளிக்கவுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்புவதற்காக இக்கடிதத்தை தயாரித்ததுடன், இக்கடிதத்தில் 6 கட்சிகளினுடைய தலைவர்களின் கையொப்பம் இடம்பெறுகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் இல்லத்தில் 4 கட்சிகளின் தலைவர்கள் நேற்று (12) கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர். தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் சி.வி. விக்னேஸ்வரன் எம்.பி., புளொட் சார்பில் த.சித்தார்த்தன் எம்.பி., ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பில் முன்னாள் எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சி சார்பில் வேந்தனும் நேற்று கையொப்பமிட்டுள்ளனர்.

மேலும், ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பியும் தமிழ் தேசியக் கட்சி சார்பில் முன்னாள் எம்.பி. ஸ்ரீகாந்தாவும் கையொப்பமிட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்திய – இலங்கை ஒப்பந்தம் பிரகாரம் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன், வடக்கு, கிழக்கு மாகாணசபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளதாக, ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

## யானைகளுக்கு வீசிய வெடி குடும்பஸ்தரை பதம் பார்த்தது!

### வவுனியாவில் ஒருவர் படுகாயம்

**ஓமந்தை விசேட நிருபர்**

வவுனியா மாவட்டத்தின் கள்ளிக்குளம், சிதம்பரம் பிரதேசத்தினுள் நுழைந்த காட்டு யானைகளை விரட்டுவதற்காக யானை வெடி வீசிய ஒருவரின் கையில் அவ்வெடி வெடித்து இரண்டு விரல்கள் அகற்றப்பட்டுள்ளன.

கள்ளிக்குளம், சிதம்பரம் பிரதேசத்தில் கடந்த ஞாயிறு (09) நுழைந்த காட்டு யானைகள், தென்னை மற்றும் வாழை உள்ளிட்ட பயன்தரும் பயிர்களை சேதப்படுத்தியது. இதைத் தடுப்பதற்கு குடும்பத் தலைவரான இந்த நபர் யானை வெடியை கொளுத்தி வீசிய போது, அவரது கையில் அவ்வெடி வெடித்ததையடுத்து, அவர் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில், அவரது இரண்டு விரல்கள் அகற்றப்பட்டுள்ளதாக, அவ்வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வவுனியா பல்கலையில் ஊடகக்கற்கை; மாணவர்களை இணைய அழைப்பு



**தலைமன்னார் விசேட நிருபர்**

வவுனியா பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிமூலம் புதிதாக ஊடக மற்றும் இதழியல் கற்கைநெறி அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களாக இருப்பவர்கள், எதிர்காலத்தில் ஊடகத்துறையில் இணைய விருப்பமுடையவர்கள் இக்கற்கைநெறியில் இணையலாமென, அப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ரி.மங்களேஸ்வரன் நேற்று (12) தெரிவித்தார்.

உயர்தர சான்றிதழ் வழங்கும் நோக்குடன் இக்கற்கைநெறியை தயாரித்து ஊடகப்பேரவையின் அனுமதியுடன் முதன்முதலாக வவுனியா பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

6 மாதங்களேயான இக்கற்கைநெறி பிரதி சனிக்கிழமை தோறும் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை வவுனியா பல்கலைக்கழக பூங்கா வீதிக் கட்டடத்தில் நடைபெறுவதுடன், இதற்காக 10,000 ரூபாய் அறவிடப்படுகிறது.

உரியவாறு கற்று, ஊடகத்துறைக்கு சிறந்த பங்களிப்பை வழங்க இக்கற்கைநெறி உதவுமெனவும், அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இக்கற்கையை டிப்ளோமா கற்கையாக தரம் உயர்த்துவதற்கும் முயற்சிகள் நடைபெறுவதாகவும், அவர் தெரிவித்தார்.

## எரிபொருள் நிரப்புவதில் முரண்பாடு; காரைநகரில் வாள்வெட்டு; மூவர் காயம்!

**யாழ். விசேட நிருபர்**

எரிபொருள் தட்டுப்பாடு நிலவிய காலத்தில் எரிபொருள் நிரப்புவதில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு நீடித்து வந்த நிலையில் யாழ். காரைநகர், வலந்தலை பிரதேசத்தில் கடந்த திங்கள் (10) இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாட்டுக் காலத்தில் வலந்தலை பிரதேசத்தில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊழியரொருவருக்கும் இளைஞரொருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. இம்முரண்பாடு அப்போது சிலரால் தீர்த்து வைக்கப்பட்ட போதிலும், சுமார் ஒரு வருடமாக இருவருக்கும் இடையில் முரண்பாடு நீடித்து வந்தது.

இந்நிலையில், இவர்கள் இருவருக்கும் இடையில் மீண்டும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதை தொடர்ந்து, அவ்விடத்திலிருந்து சென்ற அந்த இளைஞர், கடந்த திங்கள் இரவு முகமூடி அணிந்த கும்பலுடன் வந்து, அந்த ஊழியர் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதை தடுக்கச் சென்ற ஊழியரின் சகோதரர்கள் இருவர் மீதும் வாள்வெட்டு தாக்குதலை நடத்தி விட்டு அக்கும்பலுடன் அந்த இளைஞர் தப்பிச் சென்றதாக தமது விசாரணையில் தெரியவந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது காயமடைந்த மூவரும் காரைநகர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸார் தொடர்ந்து விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

## முல்லை. மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கு திறன் விருத்தி பயிற்சி

**மாங்குளம் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றி வரும் உத்தியோகத்தர்களின் உள விருத்தி மற்றும் ஆளுமைகளை மேம்படுத்தும் முகமாக 'சுய மற்றும் சமூகநிலை ஆய்ந்து நோக்கலும் ஒன்றிணைத்தலும்' எனும் தலைப்பில் திறன் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் அம்மாவட்டச் செயலக பயிற்சிப் பிரிவால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (11) ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது, யோகா மற்றும் அரங்காற்றுகையுடன் இயைந்த பயிற்சி திட்டம், முல்லைத்தீவு மாவட்டச் செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டது.



இப்பயிற்சிநெறியின் வளவாளராக பிரபல நாடகம் மற்றும் அரங்காற்றுகை கலைஞரும் எழுத்தாளருமான பூபாலசிங்கம் பிரதீபன் கலந்துகொண்டார்.

இப்பயிற்சியின் ஆரம்ப நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். குணபாலன், முல்லைத்தீவு மாவட்ட தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர், நிர்வாக உத்தியோகத்தர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### யாழ்ப்பாணத்தில் ப.நோ.கூ. சங்கத்தின்

## மகத்துவத்தை வெளிப்படுத்திய கூட்டுறவாளருக்கு கௌரவிப்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**



யாழ்ப்பாணம், தனங்கிளப்பு பிரதேசத்தில் கூட்டுறவாளர் வை.கயிலைநாதன், சாவகச்சேரி மற்றும் தென்மராட்சி கிழக்கு பல்நோக்குகூட்டுறவுச்சங்கங்களால் நேற்று புதன்கிழமை (12) கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச கூட்டுறவு தினத்தின் 101ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கூட்டுறவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக 68 வயதுடைய ஓய்வு பெற்ற மாவட்ட கூட்டுறவுப் பரிசோதகர் வை.கயிலைநாதன், நாடு முழுவதுமான பயணத்தை சைக்கிளில் கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து ஆரம்பித்திருந்தார்.

இந்நிலையில், அவர் தனது பயணத்தை முடித்து நேற்று பூநகரியூடாக தென்மராட்சி பிரதேசத்துக்கு வந்த போதே, தனங்கிளப்பு பிரதேசத்தில் வைத்து அவர் கௌரவிக்கப்பட்டார்.

கூட்டுறவின் மகத்துவம், கொள்கை மற்றும் சேவையை மக்களுக்கு தெளிவுபடுத்தும் முகமாகவே இப்பயணத்தை அவர் மேற்கொண்டிருந்தார்.




# நகர்வலம்



# நிறுவனங்களில் முன்னேற்றம் காட்டாத அதிகாரிகள் தொடர்பில் விரைவில் நடவடிக்கை

## # தொழிற்சங்கங்களுடனான கலந்துரையாடலில் அமைச்சர் பிரசன்ன



தனது அமைச்சின் கீழுள்ள ஒவ்வொரு நிறுவனத் தலைவரும் தமது நிறுவனத்தின் வருடாந்த வருமானம் தொடர்பில் திட்டத்தைத் தயாரிக்க வேண்டுமென்றும் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்திய பின்னரும் நிறுவனங்களில் முன்னேற்றம் காட்டாத அதிகாரிகள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்க தான் ஒருபோதும் தயங்கப் போவதில்லை எனவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பத்தரமுல்லை அமைச்சின் கேட்போர் கூடத்தில் அரசாங்க தொழிற்சாலை தொழிற்சங்கங்களுடன் நேற்று (12) நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைத்தெரிவித்தார்.

அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் தற்போதைய நிலைமை மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் முன்வைக்கும் வகையில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

கொலன்னாவையில் அமைந்துள்ள அரச தொழிற்சாலைத் திணைக்களம் ஏறக்குறைய நூறு வருட வரலாற்றைக் கொண்டுள்ளது. பொலிஸ் அதிகாரிகளின் சீருடையில் பயன்படுத்தப்படும் உத்தியோகபூர்வ முத்திரைகள், ஏரிகளுக்கான வான் கதவுகள், வைத்தியசாலை உபகரணங்கள், கைவிலங்குகள், வாக்குப்பெட்டிகள் போன்றவை இத்திணைக்களத்தினால் தயாரிக்கப்படுகின்றன.

ஆனால், திணைக்களத்தில் பணியாற்றும் சில உயர் அதிகாரிகளின் மோசமான நிர்வாகத்தினாலும், முறையற்ற நிர்வாகத்தினாலும், திணைக்களம் தற்போது கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக தொழிற்சங்க ஒன்றியம் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியது.

இதனால் அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தை தொடர்ந்து பராமரிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய தொழிற்சங்க பிரதிநிதிகள், திணைக்களத்தை பாதுகாக்கும் வகையில் அதனை மறுசீரமைக்க வேண்டுமெனவும் சுட்டிக்காட்டினர்.

அவ்வாறானதொரு தீர்மானத்தை திடீரென எடுப்பதற்குப் பதிலாக, திணைக்களத்தைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தி ஒழுங்கமைப்புகளை மேற்கொள்ள வேண்டுமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அங்கு குறிப்பிட்டார்.

அந்த நோக்கத்திற்காக, நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்கள் மற்றும் அவர்கள் தயாரிக்கும் பொருட்கள் பற்றிய விரிவான அறிக்கையை வழங்குமாறும் அவர் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

கடந்த காலத்தில், நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்தது. இப்போது நாம் மெதுவாக தலையை உயர்த்துகிறோம். நாட்டுக்கு தேவையான வளங்களை அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம் உற்பத்தி செய்ய முடியும். மாகாண சபைகளும் உள்ளூராட்சி நிறுவனங்களும் கொஞ்சம் கொஞ்சமாக வேலைகளை ஆரம்பித்துள்ளன. அந்த நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டு இந்த நிறுவனத்தை எப்படியாவது மீட்க முயற்சிப்போம்.

அரசியல் செல்வாக்கினால் மட்டும் பல நிறுவனங்கள் அழிக்கப்படவில்லை. அதிகாரிகளின் வாக்குவாதத்தினாலும் அழிக்கப்படுகின்றன. லஞ்சம், ஊழல், வீண் விரயம் என்று பாராளுமன்றத்தில் உள்ள 225 பேரையும் ஒட்டு மொத்த நாட்டு மக்களும் குற்றம் சாட்டி வருகின்றனர். இந்த வீழ்ச்சியால் பாதிக்கப்படுவது அரசியல்வாதிகள் மட்டுமல்ல. அரச அதிகாரிகள் மற்றும் அரச ஊழியர்களும் பொறுப்புக் கூற வேண்டும் என்றார்.

# இந்திய வெளிவிவகார செயலாளர் அமைச்சர் அலி சப்ரியுடன் சந்திப்பு



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவத்ரா, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை (11) கொழும்பில் சந்தித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்திய விஜயம் தொடர்பாக வெளிவிவகாரச் செயலாளர் வினய் மோகன் குவத்ராவுடன் வெளிவிவகார அமைச்சர் கலந்துரையாடியதாக தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாகவும் மேற்படி கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவத்ரா இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு திங்கட்கிழமை (10) இரவு இலங்கை வந்தடைந்தார்.

இதேவேளை, இந்திய வெளிவிவகார செயலாளர், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே உள்ளிட்ட குழுவினர் இலங்கை வெளிவிவகார செயலாளரை சந்தித்து கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.



இந்தியா மற்றும் மாலைத்தீவில் உள்ள UNHCR இன் தலைமைத் தூதுவர் திரு. ஆஸ்கார் முனிடா தனது சேவைக்காலத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்புகிறார். அவர் தென்னிந்தியாவில் உள்ள இலங்கையின் துணைத் தூதுவர் டாக்டர் வெங்கடேஷ்வரனை அண்மையில் சந்தித்து தமிழ் நாட்டில் புனர்வாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கையர்களுக்கு உதவிகளை வழங்குவதில் இலங்கை அரசாங்கம் மற்றும் UNHCR ஆகிய இரண்டும் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து கலந்துரையாடினார்.

### அகில இலங்கை தமிழ் மொழித்தின

# தென் மாகாண வலய மட்ட போட்டிகள் 15ஆம் திகதி ஆரம்பம்

**(வெலிகம தினகரன் நிருபர்)**

அகில இலங்கை தமிழ் மொழித் தின தென் மாகாண வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான எழுத்தாக்கப் போட்டிகள் நாளை மறுதினம் (15) சனிக்கிழமை இடம் பெறவுள்ளன.

காலி, எல்பிட்டி, மாத்தறை, அகுரஸ்ஸ மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய ஐந்து வலயங்களாக பிரிக்கப்பட்டு இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

மாத்தறை வலய எழுத்தாக்க போட்டிகள் திக்குவல்லை மின்ஹாத், வெலிகம அறபா, மாத்தறை தாருல் உலூம், கொடபிட்டிய ஸாதாத் மற்றும் தெனியாய ஹேன் பேட் தமிழ் கல்லூரியிலும் இடம் பெறவுள்ளதோடு காலி வலய மட்டம் போட்டிகள் வெலிதர முஸ்லிம் மகாவித்தியாலயம் மற்றும் காலி முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் நடைபெறவுள்ளன.

ஹம்பாந்தோட்டை வலய மட்டப் போட்டிகள் ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையில் இடம் பெற்றுள்ளதாக தென் மாகாண தமிழ் மொழித் தின போட்டிகளின் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எம் எம். முன்திர் (நளீமி) தெரிவித்தார். ஏனைய போட்டிகள் யாவும் 26 மற்றும் 2, 9ஆம் திகதிகளில் இடம் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# 'தொரின் – தொரட்ட ரன்தியவர' புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கும் நிகழ்வு

**பேருவளை விசேட நிருபர்**



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையானது பாவனையாளர் சமூகத்திற்கு விசேட சலுகைகளை வழங்கி புதிய குடிநீர் இணைப்புகளை விரைவாக வழங்குவதற்காக 'தொரின் – தொரட்ட ரன்தியவர' எனும் செயற்திட்டத்தை நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் கட்டானை அலுவலக பொறுப்பாளர் பகுதியில் புதிய குடிநீர் இணைப்புகளை வழங்கும் நிகழ்வு (07) அன்று பல்லேகம சனசமூக மண்டபத்தில் நடைபெற்றது. சபையின் உபதலைவர் சஞ்சீவ விஜேகோன், மேல் மாகாண முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆனந்த ஹரிஷ்சந்திர கோவின்ன, பிரதேச சபை உறுப்பினர் ஹேமந்த, வணிக பிரதி பொதுமுகாமையாளர் பியால் பத்மநாத், கட்டணப்பட்டியல் உதவிப் பொது முகாமையாளர் உட்பட முக்கியஸ்தர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

## நீர்கொழும்பு சந்தைக்கு அருகில்

# குப்பை கூளங்களை கொட்டும் விசமிகள்? உரிய நடவடிக்கைக்கு பொதுமக்கள் கோரிக்கை

**(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)**



நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள டட்லி சேனாநாயக்க சந்தைக்கு அருகிலுள்ள சதுப்பு நிலங்களில் குப்பை கூளங்கள் கொட்டப்பட்டு வருவதனால் சந்தை வியாபாரிகள், அரச அதிகாரிகள் மற்றும் சந்தைக்கு வரும் பொதுமக்கள் பலத்த அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

நீர்கொழும்பு, கடற்றொழில் பிராந்திய அலுவலகத்திற்கு முன்னாலுள்ள குறுக்குத் தெருவின் மருங்கிலேயே மேற்படி குப்பை கூளங்கள் கொட்டப்பட்டு வருகின்றன. புதன் கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களின் நீர்கொழும்பு பகல் நேர சந்தை டட்லி சேனாநாயக்க பொதுச் சந்தைக்கு அருகாமையிலேயே நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சந்தைக்கு வரும் மரக்கறி வியாபாரிகள் வியாபாரம் முடிந்த கையோடு தமது கழிவான மரக்கறி வகைகளை அருகிலுள்ள சதுப்பு நிலங்களில் மிகவும் சூட்சுமமான முறையில் கொட்டி விட்டு செல்வதாகவும் தெரிய வந்துள்ளது.

நீர்கொழும்பு மாநகர சபையின் பொதுச் சுகாதார அதிகாரிகள் இது தொடர்பாக கவனம் செலுத்த தவறி வருவதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். நீர்கொழும்பு மாநகர சபையின் பொதுச் சுகாதார பிரிவின் உயர் அதிகாரிகள் கவனத்தில் கொண்டு குறித்த பகுதியிலுள்ள குப்பை கூளங்களை முற்றாக அகற்றுவதற்கான உரிய நடவடிக்கைகளை நீர்கொழும்பு மாநகர சபை மேற்கொள்ள வேண்டும் எனவும் பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றனர் .

# கண்டி மாவட்டத்தில் நீர் விநியோக தடை

**(பேருவளை விசேட நிருபர்)**



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பொல்கொல்ல நீர் வழங்கல் திட்டத்தின் நயாவல பாலத்திற்கு அருகில் அத்தியாவசிய விஸ்தரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் இன்று 13ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9 மணி முதல் பி.ப. 3 மணி வரையிலான 6 மணித்தியால நீர் விநியோகத்தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

உடதலவின்ன, பல்லெதலவின்ன, சரசவி மாவத்தை, பொல்கொல்ல, நவயாலதென்ன மற்றும் ஜம்புகஹபிட்டிய ஆகிய பகுதிகள் நீர் விநியோக தடையினால் பாதிக்கப்படும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

# கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள 8 உறுப்பினர்களுக்கு மத்திய குழு கூட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கட்சி அங்கத்துவத்திலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் 8 பேர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு சபைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

நாளைய தினம் (14) அந்த சபை கூடவுள்ளதுடன் அன்றைய தினம் அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன மத்திய குழுவில் பங்கேற்குமாறு அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். அவ்வாறு அழைக்கப்பட்டவர்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களான அமைச்சர்கள் நிமல் சிறிபால டி சில்வா, மகிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன, சுரேன் ராகவன், ஜகத் புஷ்பகுமார, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, சாமர சம்பத் தசநாயக்க மற்றும் துமிந்த திஸாநாயக்க எம்.பியும் உள்ளடங்குகின்றனர்.

# உடப்பில்; சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமான விசேட கூட்டம்



**உடப்பு குறூப் நிருபர்**

சூழல் சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமான விஷேட கூட்டம் ஒன்று உடப்பு இந்து கலாசார மண்டப மேல் மாடியில் செவ்வாய்க்கிழமை (11) நடைபெற்றது. புத்தளம் தெற்குக் கோட்ட சுற்றாடல் ஆணையாளர் ஆ. திருவரங்கநாதன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், புத்தளம் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் முந்தல் பிரதேச செயலகப் பொறுப்பதிகாரி திருமதி ரஞ்சனி, ஆராச்சிக்கட்டு பிரதேச சபை சுற்றாடல் பகுதிக்குப் பொறுப்பான நிஷாரா மற்றும் உடப்பு, ஆண்டிமுனை கிராம அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

உடப்பிலுள்ள மூன்று பிரஜா மண்டல அமைப்புகளும் கலந்து கொண்டதோடு, உடப்பு பொலிஸ், முந்தல் சுகாதார உத்தியோகத்தர், பொது நலன் விரும்பிகளும் பங்களிப்பு நல்கினர். இதன் போது உக்கும் பொருள், உக்காத பொருட்களை எவ்வாறு கையாள்வது, பெரும் பிரச்சினையாக உள்ள பிளாஸ்டிக் பொருட்களை சேகரித்து வழங்குவது போன்ற பலதரப்பட்ட விடயங்களும் இதன் போது பேசப்பட்டன.

உடப்பு பகுதியில் தற்போது டெங்கு பெருகும் அபாயம் உள்ளதாகவும் அதனை கருத்தில் கொண்டு சூழலை பாதுகாத்துக் கொள்ளும்படியும் மக்களுக்கு இதன்போது அறிவித்தல் வழங்கப்பட்டது.

# பண்ணையாளர்களுக்கு 3.4 மில். ரூபாய் இழப்பீடு வழங்கிவைப்பு

மட்டக்களப்பு விஷேட நிருபர்




ஜனாதிபதி செயலகத்தின் அனுசரணையுடன் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 107 பண்ணையாளர்களுக்கான 3.4 மில்லியன் ரூபாய் இழப்பீடு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (12) பயனியர் வீதியில் உள்ள மிருக வைத்தியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 08/09 ஆம் திகதிகளில் Mandous என்றழைக்கப்பட்ட குளிருடன் கூடிய சூறாவளி ஏற்பட்டு குறிப்பாக திறந்த வெளியில் வளர்க்கப்பட்ட கால்நடைகள் கிழக்கு மாகாணத்தில் அதிகளவில் மரணமடைந்தன.இவ்வாறு மரணமான காலநடை சொந்தகாரர்கள் மற்றும் பண்ணையாளர்களுக்கான இழப்பீடு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் வழங்கி வைக்கப்பட்டது.

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் எம். ஏ.எம்.பாசி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் பூ,பிரசாந்தன், திணைக்களம் சார் உயரதிகாரிகள், கால் நடை வைத்தியர்கள் உள்ளிட்ட பண்ணையாளர்கள் கலந்து கொண்டனர்.

# ஜப்பானிய உணவுப் பொருள் இறக்குமதிக்கு சீனா தடை

## புகுஷிமா கதிரியக்க நீரை கடலில் கலக்கும் ஜப்பானிய முடிவுக்கு சீனா எதிர்ப்பு

ஜப்பானின் பத்து பிரதேசங்களைச் சேர்ந்த உணவு உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு சீனா தடை விதித்துள்ளது.

2011 சுனாமியால் ஜப்பான் புகுஷிமா அணு உலை பாதிக்கப்பட்டு அணுக் கதிரியக்க வெளியேற்றம் காரணமாக அந்த அணுஉலை மூடப்பட்டது. அங்கே தேங்கிக் கிடக்கும் 1.33 கியூபிக் மீட்டர் தண்ணீரை கதிரியக்கத்தை நீரில் இருந்து அகற்றிய பின்னர் அந்நீரை கடலில் விடுவதற்கு ஜப்பான் எடுத்த தீர்மானத்துக்கு எதிராகவே உணவுப் பொருள் இறக்குமதித் தடையை சீனா ஜப்பான் மீது விதித்துள்ளது.

டிரிடியத்தைத் தவிர ஏனைய தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டு கடலில் விடப்படும் என்றும் டிரிடியம் மட்டும் கரைந்த பின்னர் கடலுடன் சங்கமமாகும் என்றும் ஜப்பான் தெரிவித்தமைக்கு புகுஜிமா பிராந்திய ஜப்பானிய மீனவர்களும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். தமது மீன் உணவுகளுக்கான வாடிக்கையாளர்கள் அற்றுப் போவார்கள் என்று அவர்கள் ஆட்சேபணை தெரிவித்துள்ளனர்.

நீர் சுத்திகரிப்புக்காக பயன்படுத்தப்படும் உபகரணங்களின் நம்பகத்தன்மை, சுத்திகரிப்பை மேற்பார்வை செய்யும் பணி முழுமையானதா என்ற கேள்வி மற்றும் கடலில் கழிவுகளைக் கொட்டுவது தொடர்பான சட்டங்களில் ஜப்பானுக்கு இருக்கும் தெளிவு என்பதில் தமக்கு பிரச்சினை இருப்பதாக சீனா கூறியுள்ளது. இனம் காணப்படாத ஆபத்துக்கள் மனிதரைத் தாக்கலாம் என அஞ்சுவதாகவும் தெரிவித்துள்ளது.

சீனாவின் தடைக்குள்ளான பகுதிகள் யாவை என்பதை சீனா தெரிவிக்கவில்லை. எனினும் ஜப்பானில் இருந்து இறக்குமதியாகும் சகல உணவுப் பொருட்கள் மீதும் சீனா தீவிர கதிரியக்க பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

# பரதநாட்டிய அரங்கேற்றம்



கலாநிதி நிர்மலா ஜோனின் மாணவிகளான திருமதி வினோதா ககனானந்தா மற்றும் செல்வி தனிஸ்கா ககனானந்தாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்பு, பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த அரங்கேற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்தின் பேராசிரியர் அ. சர்வேஸ்வரன், சிறப்பு அதிதியாக பேராதனை பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். பிரசாந்தன், விசேட அதிதிகளாக எஸ். ரங்கநாதன், திருமதி ராதிகா சுதாகரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.





தர்கா நகர் இப்றாஹீமிய்யா ஷாதுலிய்யா ஸாவியாவில் வருடாந்த ஷாதுலிய்யா மனாகிப் தமாம் கந்தூரி மஜ்லிஸ் மௌலவி முகத்தமுஷ் ஷாதுலி மபாஸ் ஹுஸைன் தலைமையில் நடைபெற்றது. கொழும்பு பெரிய பள்ளிவாசல் கதீப் மௌலவி அப்துஸ் ஸலாம் (பலாஹி) விசேட பேச்சாளராக கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். கலீபதுஷ் ஷாதுலி மௌலவி முஹம்மத் பைரூஸ் (பஹ்ஜி) தலைமையில் ஹழரா மஜ்லிஸ் நடைபெற்றதோடு கந்தூரி கமிட்டி உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.எம் அஸ்லம் ர் நன்றியுரை நிகழ்த்தினார்.

படங்கள் பேருவளை விசேட நிருபர்

# இந்தியாவில் செமி கண்டக்டர் உற்பத்தி வேதாந்தா நிறுவனத்தின் கூட்டு முயற்சியில் இருந்து பொக்ஸ்கொன் விலகியது

இந்தியாவின் வேதாந்தா நிறுவனமும் தைவானின் பொக்ஸ்கொன் நிறுவனமும் இந்தியாவில் செமி கண்டக்டர்களை கூட்டாக உற்பத்தி செய்யும் வகையில் மேற்கொண்ட முயற்சிகளை பொகஸ்கொன் கைவிட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

19.5 பில்லியன் டொலர் பெறுமதியான இக்கூட்டுத் தயாரிப்பு திட்டத்தில் இருந்து தாம் விலகிக் கொண்டிருப்பதாக பொக்ஸ்கொன் நிறுவனம் அறிவித்துள்ளது.

பல்வேறு நவீன தொழில்நுட்ப பயன்பாடுகளுக்கு மிக அவசியமான செமிகண்டக்டர்களை இந்தியாவிலேயே உற்பத்தி செய்து செமிகண்டக்டர் ஏற்றுமதி நாடாக விளங்க வேண்டும் என்ற இலக்குடன் 2021ஆம் ஆண்டில் 76 ஆயிரம் கோடி பெறுமதியான செமிகண்டக்டர் திட்டத்தை இந்திய அரசு ஆரம்பித்தது. இதன் அடிப்படையிலேயே இவ்விரு நிறுவனங்களும் கூட்டாக குஜராத்தில் தொழிற்சாலையை நிறுவத் தொடங்கின.

எனினும் வெவ்வேறான அபிவிருத்தி வாய்ப்புகளில் ஈடுபடுவதற்கு ஏதுவாக வேதாந்தாவுடன் மேற்கொள்ளப்பட்ட கூட்டு முயற்சியில் இருந்து தாம் விலகிக் கொள்வதாக பொக்ஸ்கொன் கடந்த திங்களன்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்தது.

இதேசமயம், செமிகண்டக்டர் உற்பத்தியில் வேதாந்தா நிறுவனம் தொடர்ந்தும் புதிய பங்குதாரர்களுடன் இணைந்து ஈடுபடும் என்றும் பிரதமரின் கனவை நனவாக்க இருமடங்கு செயலாற்றலுடன் ஈடுபடும் என்றும் வேதாந்தா நிறுவனம் தெரிவித்துள்ளது.

செமிகண்டக்டர் உற்பத்தித் திட்டத்தில் இருந்து பொக்ஸ்கொன் விலகிக் கொண்டிருப்பதால் இந்தியாவின் செமிகண்டக்டர் இலக்குக்கு எந்த பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்று எலக்ட்ரானிக் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துக்கான மத்திய துணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் தன் ட்விட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விரு நிறுவனங்களும் இந்தியாவில் குறிப்பிடத்தக்க முதலீடுகளை செய்திருப்பதாகவும் ஏராளமானோருக்கு வேலை வாய்ப்புகளை வழங்கியிருப்பதாகவும் தெரிவித்துள்ள அவர், இவ்விரு நிறுவனங்களும் செமிகண்டக்டர் உற்பத்தியில் ஒன்றிணைந்திருந்த போதிலும் இத்தொழில்நுட்பத்தில் அவற்றுக்கு முன் அனுபவம் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

# ஈஸ்டன் எக்ஸ்போ' கல்வி கண்காட்சி

மாளிகைக்காடு குறூப் நிருபர்

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினதும், வலய கல்வி அலுவலகங்களினதும் அனுசரணையில் மட்டக்களப்பு, கல்லடி,சண்ஸைன் உல்லாச விடுதியில் 22,23 ஆம் திகதிகளில் Education Srilanka2023, Eastern expo நடைபெறவுள்ளது.

இந்த உயர்கல்வி கண்காட்சிக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள உயர் கல்வியினை தொடரவுள்ள மாணவர்களையும் அவர்களது பெற்றோரையும் கலந்து பயன்பெறுமாறு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வி.ஏ.கனகசூரியம் தெரிவித்துள்ளார்.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாத, சித்தியடைந்த, உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பித்த மற்றும் உயர்கல்வியினை தொடரவுள்ள சகல மாணவர்களுக்கும் தமது கல்வி தரத்தினை அதிகரிப்பதற்கான வழிகாட்டல் ஆலோசனைகள் இக் கண்காட்சியின் போது வழங்கப்படவுள்ளதாக கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# கல்முனை யங் பேர்ட்ஸ் ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு வாகன கொள்வனவுக்கு நிதி



கல்முனை மத்திய தினகரன் நிருபர்

கல்முனையங்பேர்ட்ஸ்ஜனாஸா நலன்புரி அமைப்பின் தேவையாக இருந்த வாகனம் ஒன்றை கொள்வனவு செய்வதற்கான ஆரம்பகட்ட நிதியினை கல்ப் பெடெறேசன் கல்முனை அமைப்பின் ஊடாக அதன் பிரதிநிதி எஸ்.எல்.பைறூஸினால் யங் பேர்ட்ஸ் ஜனாஸா நலன்புரி அமைப்பிற்கு உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டது. அமைப்பின் தலைவர் முஹம்மட் மர்சூக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு கௌரவ அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி கலந்து கொண்டார்.

இவரது பங்குபற்றுதலுடன் இந்நிகழ்வு கல்முனை யங் பேர்ட்ஸ் ஜனாஸா நலன்புரி அமைப்பின் காரியாலயத்தில் நடைபெற்றது.

# ஒட்டிப்பிறந்த சிசுக்களை 57 ஆவது தடவையாகவும் இலவசமாக பிரித்தெடுத்த சவூதி அரேபியா

மாவத்தகம தினகரன் நிருபர்



ஒட்டிப்பிறந்த சிசுக்களைப் பிரித்தெடுப்பதென்பது ஒரு சாதாரண விடயமல்ல. அதுவும் அதற்கான நீண்டநேர சத்திர சிகிச்சைகளை இலவசமாக மேற்கொள்வதென்பது; மனிதநேயமுள்ளவர்களால் மாத்திரமே முடியும்.

ஒட்டிப்பிறக்கும் இரு மனித சிசுக்களின் உடல்களை வெவ்வேறாகப் பிரித்தெடுக்கும் பொழுது அங்கே மனித உடல் சம்பந்தப்பட்ட அனைத்து துறைசார் வைத்திய நிபுணர்களும் சத்திரசிகிச்சையின் பொழுது பிரசன்னமாகியிருக்க வேண்டும்.

பற்பல வைத்திய நிபுணர்கள் ஒன்றாக எட்டு பத்து மணித்தியாலங்கள் போராடி இரு உயிர்களையும் மீட்டெடுப்பதென்பது சிலாகித்துக் கூறவேண்டிய விடயமாகும்.

அவ்வாறு ஒட்டிப்பிறந்த குழந்தைகளை இலவசமாகப் பிரித்து வாழ்வளிக்கும் ஒரே மனிதநேய நாடாக சவூதி அரேபியா திகழ்கிறது. ஸிரிய நாட்டைச் சேர்ந்த 'பஸ்ஸாம்' 'இஹ்ஸான்' எனும் ஒட்டிப்பிறந்த இரு குழந்தைகளையும் பிரித்தெடுக்கும் ஏழரை மணிநேர சத்திரசிகிச்சை (6) ஆம் திகதி வெற்றிகரமாக சவூதி அரேபிய ரியாத் நகரில் மேற்கொள்ளப்பட்டது.

சத்திரசிகிச்சைக்கு வழமை போன்று பேராசிரியர் அப்துல்லாஹ் தலைமை தாங்கினார். அதனை அருகில் உள்ள தியேட்டரில் இருந்து பெற்றோர் நேரடியாக வீடியோ மூலம் பார்த்துக் கொண்டிருந்தனர். சத்திரசிகிச்சையின் பின்னர் தற்பொழுது இரு குழந்தைகளும் நலமாக உள்ளனர் என பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

சுமார் 33 முப்பத்திமூன்று வருடகாலமாக இச் சேவையினை சவூதி அரேபியா மேற்கொள்கிறது. இதுவரை 23 நாடுகளைச் சேர்ந்த 131 ஒட்டிப்பிறந்த ஜோடிகளை சவூதி அரேபிய இலவசமாகப் பராமரிக்கின்றது. அவற்றில் 57 ஆவது வெற்றிகரமாக பிரிக்கப்பட்ட ஜோடிகளாக 'பஸ்ஸாம்' 'இஹ்ஸான்' எனும் குழந்தைகள் பதிவாகியுள்ளன.

### வங்கதேச - இந்திய வர்த்தகத்தில்

# டொலருக்கு மாற்றாக இனி இந்திய ரூபா பயன்பாடு

இந்தியாவுக்கும் வங்கதேசத்துக்கும் இடையேயான வர்த்தகத்தில் டொலருக்கு பதிலாக இந்திய ரூபாவை பயன்படுத்துவதற்கு வங்கதேச மத்திய வங்கி அனுமதி அளித்துள்ளது. கடந்த செவ்வாயன்று டாக்கா மெரிடியன் ஹோட்டலில் நடைபெற்ற வைபவத்தில் வங்க மத்திய வங்கியும் இந்திய தூதரகமும் இதற்கான அறிவிப்பை விடுத்தன.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தில் இனி டொலருக்கு பதிலாக இந்திய ரூபா பயன்படுத்தப்பட முடியும். வங்க மத்திய வங்கி, சொனாலி வங்கி, கிழக்கு வங்கி, இந்திய வங்கி ஆகிய மூன்று வங்கிகளுக்கு இந்திய ரூபா பண பரிவர்த்தனைக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் வங்க தேசத்திலும், இந்தியாவிலும் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் பேரில் இந்திய ரூபாவை பயன்படுத்த முடியும். இதன் மூலம் டொலர் பாவனையை குறைத்துக் கொள்ள முடியும் என்று குறிப்பிட்டுள்ள டெய்லி ஸ்டார் பத்திரிகை, கடந்த ஆண்டு வங்க தேசத்தின் டொலர் கையிருப்பு 30 சதவீதத்தால் குறைந்ததாகவும், இந்திய ரூபா பயன்பாட்டினால் டொலர் பயன்பாடு குறைவதற்கு வழி ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இப் புதிய ஏற்பாட்டின் பிரகாரம் இந்தியாவுடனான வங்கதேசத்தின் வெளிநாட்டு வர்த்தகம் இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியானதாக இருக்கும் என்றும், சட்ட பூர்வமற்ற வழிகளில் மேற்கொள்ளப்படும் வர்த்தகத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தின் பெறுமதி 27 பில்லியன் டொலர்களாக இருக்குமென்றும் வங்கதேச வங்கி ஆளுநர் அப்துர் ரவூப் தலுக்தர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உலக அளவில் 90 சதவீதமான சர்வதேச வர்த்தக கொடுக்கல் வாங்கலில் டொலரே பயன்பாட்டில் இருந்து வந்தாலும் கடந்த தசாப்தங்களில் அதன் பாவனை குறைந்து வருகிறது. கடந்த மார்ச்சில் இந்தோனீசியாவில் கூடிய ஆசியான் நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கிகளின் கூட்டத்தில் இந் நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தில் டொலர் மற்றும் யென் பாவனைக்கு மாற்றாக உள்ளூர் நாணயங்களை பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### பேருவளை மககொடை ஸாவியாவில்

# 139ஆவது வருட சாதுலிய்யா மனாகிப் தமாம் மஜ்லிஸ்

பேருவளை விசேட நிருபர்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பேருவளை மககொடை ஸாவியாவில் ஷாதுலிய்யாத் தரீக்காவின் ஸ்தாபகர் அல் குத்புல் அக்பர் இமாம் அபுல்ஹசன் அலியுஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் 850ஆவது ஜனனதினத்தை முன்னிட்டும் ஆத்மீகஞானி அல் குத்பு அல் முஹம்மதிப்னு முஹம்மத் அல்பாஸி அஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் ஜனனதினத்தை முன்னிட்டும் மற்றும் இலங்கையில் ஷாதுலிய்யா தரீக்காவை அறிமுகம் செய்த ஆத்மீக ஞானி ஸெய்யிதினா முஹம்மத் ஸாலிஹ் (ரஹ்) பெரிய மௌலானா அவர்களினதும் மனாகிப் மஜ்லிஸின் தமாம் நிகழ்வும் எதிர்வரும் 16ஆம் திகதி (16.07.2023) ஞாயிற்றுக்கிழமை மாலை அஸர் தொழுகையின் பின்னர் கலீபத்துஷ் ஷாதுலி மௌலவி எம்.ஐ.எம். ரபீக் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறவுள்ளது.

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

122

### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்

விற்பனைக்கு

QE-5401 Bajaj 2006, Threewheel அதி யுயர் விலைக்கு வலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 071121081 0 . 042780

Repeat Your Ad For Better Offers

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி சுவீகரிப்புச் சட்டம் (அத்தியாயம் 460) பிரிவு 39அ(1) இன் கீழான அறிவித்தல்

கீழ் வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை 39 அ (1)ஆம் பிரிவின் கீழ் உரித்து நீக்கப்படுகின்றது. மேலதிக தகவல்களுக்காக இலக்கம் 2289/18 கொண்ட 2022.07.19ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை பார்க்கவும்.

**அட்டவணை**

- மாவட்டம் : மாத்தளை
- பிரதேச செயலாளர் பிரிவு : தம்புள்ளை
- கிராம சேவகர் பிரிவு : இல. E445, தம்புள்ளை நகரம்
- கிராமத்தின் பெயர் : பிரிவு இலக்கம் 5. மிரிஸ்கோனியாவ
- காணியின் பெயர் : மரதமனயாய
- திட்ட இலக்கம் : திருத்தப்பட்ட மு.பி. மா 842
- துண்டு இலக்கம் : 50

**பியல் ஜயசூரிய**
**பிரதேச செயலாளர்/ தம்புள்ளை**
**சுவீகரிப்பு அதிகாரி**

**விலாசம்: பிரதேச செயலாளர் காரியாலயம் தம்புள்ளை**
**திகதி: 2023.07.05**

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்
### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| கச்சைகொடி தீவிலிருந்து கல்லரிப்பு வீதி வரையிலுமான மேம்படுத்தல் (2+640-3+315 கிமீ) |
| கச்சைகொடி தீவிலிருந்து கல்லரிப்பு வீதி வரையிலுமான மேம்படுத்தல் (3+315-4+025 கிமீ) |
| கச்சைகொடி தீவிலிருந்து கல்லரிப்பு வீதி வரையிலுமான மேம்படுத்தல் (4+025-6+355 கிமீ) |
| பாலதோப்பூர்-சேருவில வீதியின் பகுதிக்கான மேம்படுத்தல் (5+580 இலிருந்து 6+735 கிமீ வரையும் |
| தோப்பூர் உள்ளக வீதி 1 இற்கான மேம்படுத்தல் |
| இறக்கண்டி பெரிய ஜும்மா பள்ளி வரையுமான மேம்படுத்தல் |
| ரத்துக்குருச கம்மான பாதைக்கான மேம்படுத்தல் |
| திருகோணமலையின் திரு பியாலின் வீட்டிற்கருகாமையிலுள்ள பாதை மற்றும் திரு தயானந்த வீட்டுப் பாதைகளுக்கான chip sealing. |
| அல்லை-கந்தளாய் வீதிக்கான மேம்படுத்தல் (B010)(27+000-28+000 கிமீ) |
| அல்லை-கந்தளாய் வீதிக்கான மேம்படுத்தல் (B010)(28+000-29+000 கிமீ) |
| அல்லை-கந்தளாய் வீதிக்கான மேம்படுத்தல் (B010)(29+000-30+000 கிமீ) |
| லஸ்ஸனகம பாதை-பாடசாலை மாவத்தை வெவ வரையுமானது (0+000-0+300) |
| லஸ்ஸனகம பாதை-பாடசாலை மாவத்தை வெவ வரையுமானது (0+300-0+600) |

தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைகளுக்கான விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கத்தை 2023.07.13 ஆம் திகதியிலிருந்து 2023.07.20 ஆம் திகதியன்று வரையும் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளரின் அலுவலகம்,**
**வீஅஅ, திருகோணமலை.**

## பத்திரிகை அறிவித்தல்

கொத்மலை பிரதேச செயலக பிரிவில் 2024 ஆண்டுக்கான கள்ளு தவறணைகளுக்கான ஏல விற்பனை 2023.08.17ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு, வெளிநாட்டு மதுபான சாலைகளுக்கான ஏல விற்பனை 2023.08.17 மு.ப. 10.30 மணிக்கும் இப் பிரதேச செயலகத்தில் என்னால் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கிறேன். மேலதிக விபரங்களுக்கு இல. 2337, 2023 ஜூன் 16ஆம் திகதியின் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானியை பார்க்கவும்.

**ஆர்.ஏ.நதீர லக்மால்,**
**பிரதேச செயலாளர்,**
**கொத்மலை.**

## பொல்பித்திகம நகரத்திலுள்ள டிஜிட்டல் கடிகாரத்தை பழுதுபார்த்தல்
## பொல்பித்திகம பிரதேச சபை

பொல்பித்திகம பிரதேச சபைக்குரித்தான பொல்பித்திகம நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள டிஜிட்டல் கடிகாரத்தை பழுதுபார்ப்பதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. இதன்பொருட்டு சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை 2023-08-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பதிவுத் தபாலில் அல்லது கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு செயலாளர், பிரதேச சபை, பொல்பித்திகம எனும் முகவரிக்கு கிடைக்கச் செய்யுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

03. மேலதிக விபரங்களை 037-2273135 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு அல்லது **polpithigamaps@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**பொல்பித்திகம.**

**2023-07-12ஆம் திகதி பொல்பித்திகம பிரதேச சபை அலுவலகத்தில்.**

## மாகாண நிலையான அபிவிருத்தி பிரதான செயற்றிட்டத்தின் கீழ் விவசாய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனு கோரல்
## வடமேல் மாகாண விவசாயத் திணைக்களம் – குருநாகல்

வடமேல் மாகாண விவசாயத் திணைக்களத்திற்கு பின்வரும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து வடமேல் மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2023-08-04ஆம் திகதி பி.ப. 12.30 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இயைபுடைய விலைமனுக்களை 2023-08-04ஆம் திகதி பி.ப. 12.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் ''தலைவர், பெறுகைக் குழு, மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், தம்புள்ளை வீதி, குருநாகல்'' எனும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து 3ஆம் மாடியிலுள்ள பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். சகல விலைமனுக்களையும் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''விவசாய உபகரணங்களுக்காக விலைமனு கோரல் 2023'' எனவும் மற்றும் இயைபுடைய அலுவலக உபகரணத்தின் பெயர் மற்றும் தொடரிலக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

| S/N | Item Description | Total | Bid bond |
|---|---|---|---|
| 1 | Parachute Tray | 40,000 | 40,000.00 |
| 2 | Insect poorf net | 200 | 104,800.00 |
| 3 | Trelis net | 150 | 10,000.00 |
| 4 | Crop shield | 120 | 10,000.00 |
| 5 | Mulch film | 50 | 10,000.00 |
| 6 | Single Wheel Manual Hoe | 120 | 54,000.00 |
| 7 | Roller type seeder | 80 | 36,000.00 |
| 8 | Shade net | 80 | 24,000.00 |
| 9 | Solar Fence Energizer | 50 | 31,200.00 |
| 10 | Grow bags | 29,000 | 10,000.00 |
| 11 | Vacuum sealer | 50 | 10,000.00 |
| 12 | Solar Power water pump System | 15 | 135,000.00 |
| 13 | Office Chairs | 250 | 35,000.00 |

1) ஒவ்வொரு உருப்படிக்காகவும் விலைமனுக்களை வெவ்வேறாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் ஒரு உருப்படிக்காக மட்டுமே விலைமனுவைச் சமர்ப்பிக்கலாம். ஒரு உருப்படிக்கான விலைமனு மாதிரிப் படிவக் கட்டணம் 3,000.00 ரூபாவாகும் என்பதுடன் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு உருப்படிக்காக ஒன்றுக்கும் மேற்பட்ட விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதானால் அதற்காக வேறான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஒரு விண்ணப்பப் படிவத்தின் பல உருப்படிகளுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பித்தால் அந்த விலைமனு நிராகரிக்கப்படும்.
2) விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் ஒவ்வொரு உருப்படிக்காகவும் வெவ்வேறான வகையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறியை ரொக்கப் பணமாக அல்லது இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் அல்லது காப்புறுதி முகவர் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட 2023-12-31ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வங்கிப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். 2023-07-13ஆம் திகதி முதல் 2023-08-03ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைக்கோரல் மாதிரிப் படிவங்களை வடமேல் மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
3) விலைக்கோரல் மாதிரிப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு அமைய விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4) இதன் பொருட்டான மேலதிக தகவல்கள் தேவையாயின் 037-2222325/037-2221235 எனும் தொலைபேசி இலக்கங்களில் கணக்காளரைத் தொடர்புகொண்டு அல்லது pdoanwpacc@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு வேண்டுகோள் ஒன்றை அனுப்புவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.
5) இந்த விலைக்கோரல் தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**மாகாண விவசாயப் பணிப்பாளர்,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**மாகாண விவசாயத் திணைக்களம் (வடமேல்),**
**தம்புள்ளை வீதி,**
**குருநாகல்.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)
### திம்புலாகல பிரதேச சபை
### மன்னம்பிட்டிய

1. நீர் மீற்றர்களை வழங்கி விநியோகிப்பதற்காக தகைமையும், தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் திம்புலாகல பிரதேச சபையின் சார்பாக திம்புலாகல பிரதேச சபை, பெறுகைக் குழுவின் தலைவரால் இப்போது அழைக்கப்படுகின்றன.
2. விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனுக்கோரல் ஊடாக நடத்தப்படும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மன்னம்பிட்டிய, திம்புலாகல பிரதேச சபை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. 027-2057512 பெக்ஸ் 027-2051002 மின்னஞ்சல் psdimbulagala@gmail.com) அத்துடன் விலைமனு ஆவணங்களைப் பரிசீலித்தல் 2023.07.17 முதல் 2023.08.04 வரை வேலை நாட்களில் மேலே தரப்பட்டுள்ள முகவரியில் மேற்கொள்ளலாம்.
4. 2023.07.17 முதல் 2023.08.04 வரை மன்னம்பிட்டிய, திம்புலாகல பிரதேச சபை செயலாளருக்கு ரூபா 3500.00 மீளளிக்கப்படாத ஓர் கட்டணத்தை செலுத்துவதன் பேரில் மற்றும் ஓர் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம். காசு செலுத்தும் முறை காசாக இருக்கும்.
5. விலைமனுக்கள், 2023.08.07ம் திகதி 10.00 மணியிற்கு அல்லது அதற்கு முன் மன்னம்பிட்டிய, திம்புலாகல பிரதேச சபை, பெறுகைக் குழுத் தலைவருக்கு விநியோகிக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் மூடப்பட்ட பின்பு உடனடியாகத் திறக்கப்படும்.
6. நகல்களுடனான விலைமனுக்கள் மூலப் பிரதி அல்லது நகல் பிரதிகள் கடித உறைகளில் இடப்பட்டு இரண்டு கடித உறைகளும் ஒரு உறையில் மீள பொறியிடப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
7. இந்த விடயம் சம்பந்தமாக பிரதேச சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக இருக்கும்.
8. விலைமனுக்கள் 77 நாட்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்களுடன் 2023.11.21 வரை செல்லுபடியாகும் ரூபா. 100,000.00 விலைமனுப் பிணை இணைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு**
**திம்புலாகல பிரதே சபை**
**மன்னம்பிட்டிய**
**11.07.2023**

## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.**

**2023.05.22**ஆம் திகதியன்று இடம்பெற்ற கூட்டத்தில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை பிரத்தியேகமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:

1. பிரசித்த நொத்தாரிசு டி.யு. மனோதர அத்தாட்சிப்படுத்திய 2016.03.23ஆம் திகதியிடப்பட்ட 1866 இலக்க ஈட்டு முறியின் பேரில் திரு. ஹூன் அப்புகே தர்மதாஸ மற்றும் காலஞ்சென்ற திருமதி. கிரிஹாமிகே திலோஹாமி ஆகியோர் பெற்றுக்கொண்ட **மேலதிகப்பற்று வசதி மீது** 2023.03.21ஆம் திகதி வரையான வட்டியும் முதலுமாக 8,344,456.46 ரூபாயும் (எட்டு மில்லியன் முந்நூற்று நாற்பத்து நான்காயிரத்து நானூற்று ஐம்பத்தாறாயிரத்து நாற்பத்தாறு சதம்) அத்துடன் 2023.03.22ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரையில் 5,000,000/- ரூபாய் (ஐந்து மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்தொன்பது தசம் இரண்டு ஐந்து (29.25%) என்ற வீதத்திலான மேலதிக வட்டியும் வங்கிக்கு வருமதியாகவுள்ளது.
2. பிரசித்த நொத்தாரிசு டி.யு. மனோதர அத்தாட்சிப்படுத்திய 2016.03.23ஆம் திகதியிடப்பட்ட 1866 இலக்க ஈட்டு முறியின் பேரில் நிலுவையாகவுள்ள 8,344,456.46 ரூபாயும் (எட்டு மில்லியன் முந்நூற்று நாற்பத்து நான்காயிரத்து நானூற்று ஐம்பத்தாறாயிரத்து நாற்பத்தாறு சதம்) அத்துடன் 2023.03.22ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரையில் மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய இங்கு கீழேயுள்ள அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த **ரீ அன்ட் எச் ஒக்சன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு.எம்.எச். துசித்த கருணாரத்னவுக்கும்** இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 21ஆம் பிரிவிற்கேற்ப இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கெக்கிராவை கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணையானது**

"ரஜயே இடம் கொட இடம" என்ற காணியின் நில அளவையாளர் நாயகம் அங்கீகரித்த F.V.P 1586ஆம் இலக்க வரைபடத்தில் விவரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு 47 ஆனது வட மத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், கெக்கிராவை பிரதேச செயலகப் பிரிவில், கெக்கிராவை பிரதேச சபை எல்லைகளுள் இல - 605, நவக்குளம கிராம அலுவலர் பிரிவில், தம்புள்ளேகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டானது **வடக்கில்** 11 மற்றும் 46 ஆம் இலக்க காணித்துண்டுகளையும், **கிழக்கில்** 46 மற்றும் 55ஆம் இலக்க காணித்துண்டுகளையும், **தெற்கில்** 55 மற்றும் 48ஆம் இலக்க காணித்துண்டுகளையும் **மேற்கில்** 48 மற்றும் 11 ஆம் இலக்க காணித்துண்டுகளையும் எல்லைகளாகக் கொண்டு பூச்சியம் தசம் மூன்று ஏழு ஒன்பது ஹெக்டேயர் (0.379 ஹெக்டேயர்) பரப்பளவுடன் அக்காணியிலுள்ள மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கி LDO R 08/75 எனும் இலக்கத்தின் கீழ் அநுராதபுரம் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**குறித்த காணியானது உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜீ.எம்.கே தென்னகோன் தயாரித்த 2009.12.29ஆம் திகதியிட்ட 2009/470ஆம் இலக்க வரைபடத்தில் அண்மைய நில அளவையின்படி பின்வருமாறு விபரிக்கப்படுகிறது.**

"கொட இடம" என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜீ.எம்.கே தென்னகோன் தயாரித்த 2009.12.29ஆம் திகதியிட்ட 2009/470ஆம் இலக்க வரைபடத்தில் விவரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு 1ஆனது மேற்குறிப்பிட்டபடி தம்புள்ளேகமவில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டானது **வடக்கில்** 11ஆம் இலக்க காணித்துண்டு (பாதை (வீ.அ.அ.ச.) மற்றும் F.V.P 1586ஆம் இலக்க வரைபடத்தில் 46 ஆம் இலக்க காணித்துண்டையும், **கிழக்கில்** F.V.P 1586ஆம் இலக்க வரைபடத்தில் 46 மற்றும் 55 ஆம் இலக்க காணித்துண்டுகளையும், **தெற்கில்** F.V.P 1586 ஆம் இலக்க வரைபடத்தில் 55 மற்றும் 48 ஆம் இலக்க காணித்துண்டுகளையும் **மேற்கில்** F.V.P 1586ஆம் இலக்க வரைபடத்தில் 48 மற்றும் 11ஆம் இலக்க காணித்துக்ணடுகளையும் (பாதை (வீ.அ.அ.ச)) எல்லைகளாகக் கொண்டு மூன்று ரூட்ஸ் மற்றும் இருபத்தொன்பது தசம் எட்டு பேர்ச்சுகள் (A0.R3.P29.8) அல்லது பூச்சியம் தசம் மூன்று ஏழு ஒன்பது ஹெக்டேயர்கள் (0.379 ஹெக்டேயர்கள்) பரப்பளவுடனும் அக்காணியிலுள்ள மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது.

**ஒதுக்கங்கள்**

1. இக்காணியில் அல்லது அதற்கு மேலுள்ள கனிமங்கள் (இவ்வனுமதியில் விலைமதிப்பற்ற கல் எனக் குறிப்பிடப்படும்) அனைத்தினதும் உரிமையும் அத்தகையவற்றை தோண்டுவதற்கும், தேடுவதற்கும், அங்கு பணியாற்றுவதற்கும் மற்றும் எடுத்துச் செல்வதற்குமான உரிமையும் அரசுக்கே உரியதாகும்.
2. காணி உரிமையாளருக்கு காணிமீதுள்ள உரிமையானது இவ்வனுமதித் திகதியில் தற்போதுள்ள எந்தவொரு வழியுரிமைக்கும் அல்லது பிற சேவக உரிமைக்கும் உட்பட்டதாகும்.

**நிபந்தனைகள்:**

1) இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றினை உரிமையாளர் விற்பனை செய்யலாகாது.
2) இக்காணியின் பிரிக்கப்படாத பங்கொன்றினை உரிமையாளர் விற்பனை செய்யலாகாது.
3) இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றிற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக முடியாது.
4) இக்காணியின் பிரிக்கப்படாத பங்கொன்றிற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக முடியாது.
5) இக்காணியோ அல்லது அதன் எந்தவொரு பகுதியோ நீர்ப்பாய்ச்சத்தகு பிதேசமாகவிருப்பின் அல்லது ஏற்கனவே கட்டுமானத்தின்போது கட்டப்பட்ட அல்லது இனிமேல் கட்டப்படவிருக்கும் நீர்ப்பாசனப் பணியின்போது நீர்ப்பாசனத்திற்கு உட்படுமாயின், உரிமையாளர் நீர்ப்பாசனப் பகுதியைப் பொறுத்து நீர்ப்பாசனக் கட்டளை (அத்தியாயம் 453) ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கும் இணங்க வேண்டும்.
6) அரச முகவரின் எழுத்துப்பூர்வமான அனுமதியையும் உரிய அதிகார சபையிடம் உரிமத்தினையும் பெற்றாலே ஒழிய உரிமையாளர் இக்காணியில் அல்லது அதன் உள்ளிருக்கும் கனிமங்களைத் தோண்டவோ, தேடவோ, எடுக்கவோ, உபயோகப்படுத்தவோ, விற்கவோ இல்லையெனில் அப்புறப்படுத்தவோ கூடாது.
7) பிரதேச செயலாளரின் எழுத்துமூலமான முன் அனுமதியின்றி காணியினது அல்லது அதன் எந்தவொருப் பகுதியினதும் இயல்பினையும் மாற்றக்கூடாது.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**

**திருமதி. எச்.எஸ்.டபிள்யு. சிறிவர்தன**
**முகாமையாளர்**
**இலங்கை வங்கி**
**கெக்கிராவை**
22.06.2023

The largest Job Market in Sri Lanka

www.observerjobs.lk




Widest reach for your employment advertisement
Email : info@observerjobs.lk Hotline: 1949
For more information
0777270012 / 0777270000 / 0112429314

To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,
YOU NAME IT, WE HAVE IT
Sunday Observer adz Auto Focus



Sunday Observer adz it's what you want



- Vehicle Rent / Wanted
- Auto Focus
adz Magazine Issued with Sunday Observer
- Photo Classifieds

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!

Hot Line - 011 2 429 369/ 011 2 429 368
E-mail - adzsuo@gmail.com

# பகிரங்க அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242ஆம் பிரிவிற்கு அமைவான ஒருங்கிணைப்பு

**ஹேலீஸ் கன்சியூமர் புரொடக்ட்ஸ் லிமிட்டட்**
**(கம்பனி இல. PB 627)**
மற்றும்
**ஹேலீஸ் இலெக்ட்ரொனிக்ஸ் லைட்டிங் (பிரைவட்) லிமிட்டட்**
**(கம்பனி இல PV 690 PB)**

ஹேலீஸ் கன்சியூமர் புரொடக்ட்ஸ் லிமிட்டட் (கம்பனி இல. PB 627) மற்றும் **ஹேலீஸ் இலெக்ட்ரொனிக்ஸ் லைட்டிங் (பிரைவட்) லிமிட்டட்** (கம்பனி இல PV 690 PB) ஆகிய இரு நிறுவனங்களும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் ("சட்டம்") 242ஆம் பிரிவிற்கு இணங்க **ஹேலீஸ் கன்சியூமர் புரொடக்ட்ஸ் லிமிட்டட்** என்ற பெயரில் ஒரே நிறுவனமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது என்பது மேற்படிச் சட்டத்தின் 244 (3) பிரிவிற்க்கு அமைவாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஒருங்கிணைப்பு நடைமுறையானது மேற்குறிப்பிட்ட சட்டத்தின் தேவைப்படுத்தல்களுக்கு அமைவாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைப்புத் திகதி - 2023 மே 01.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.
2023 ஜுலை 13

சபைகளின் கட்டளைப்படி
ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்கள

# பொது அறிவித்தல்

## பிரிட்டிஷ் கொலனி சிலோன் பவுண்டேஷன்

**நோக்கங்கள்:**

நீண்ட காலத்திற்கு தனிப்பட்ட குடும்பங்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட பராமரிப்புப் பொதிகள் மற்றும் ஏனைய பணப் பொதிகளுக்கான நம்பிக்கையுடன் மற்றும் அல்லது பொருளாதார நெருக்கடியினால் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு உதவி வழங்குதல்.
சிறுவர்களின் கல்வியைத் தொடரவும், பாடசாலைப் புத்தகங்கள், சீருடைகள் மற்றும் அவசியமாகக் கருதப்படும் பிற அத்தியாவசியப் பொருட்களை வாங்கவும் கற்றல் உதவிகளை வழங்குதல்.

இளம் சிறார்களின் ஆரோக்கியம், பாதுகாப்பு, ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வை வழங்குதல் மற்றும் சிறுவர்களின் வயது தொடர்பான வளர்ச்சி எல்லைகளை அடைய உதவும் வகையில் நிலைமைகளை உருவாக்குதல் ஆகியவற்றை ECCE உள்ளடக்கியுள்ளது.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

# அபேக்ஷா வைத்தியசாலை - மஹரகம

## பெறுகை அறிவித்தல்

01. எமது வைத்தியசாலைக்குத் தேவையான உருப்படிகளை கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**வளிச்சீராக்கி இயந்திரம்**

| கேள்வி மாதிரிப்பத்திர இலக்கம் | உபகரணத்தின் பெயர் | அளவு | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|
| 1 | Slip Type Air Conditioner | 14 | ரூ. 2,000/- |

02. இலங்கை சந்தை சார்பாக மேற்படி உருப்படிகளை வழங்குகின்ற எந்தச் கேள்விதாரருக்கும், பிரதிநிதிக்கும் அல்லது பெயர் குறிப்பிடப்படும் நபருக்கு மாத்திரம் மேற்படி கேள்விக்காக பங்குபற்றுவதற்குத் தகைமை உண்டு.

**கேள்வி மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் வேளையில்**

i. மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு அனுப்பப்படும் வேண்டுதல் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
ii. சகல கேள்வி மாதிரிப் பத்திரத்திற்கும் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் கணக்காளருக்கு மீளளிக்கப்படாத காசாக ரூ 2,000.00 கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.
iii. வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதி செய்த பிரதியொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
iv. 2023.07.13 முதல் 2023.08.03 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் நிதிப் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் வேளையில்**

i. இலங்கைக்குள் மேற்படி ஒப்பந்தங்கள் வழங்குதல் சம்பந்தமாக செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்பித்தல் வேண்டும்.
ii. சகல கேள்விகள் 2% கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். (காசோலைகள் ஏற்கப்படமாட்டாது)
iii. சகல கேள்விகளும் இரு பிரதிகளுடன் (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியொன) வேறு வேறாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும் அத்துடன் கேள்விகள் உள்ளிடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த உருப்படியின் பெயர் மற்றும் இலக்கத்தை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.
iv. சகல கேள்விகளும் விநியோகிக்கப்படும் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்படும் மாதிரிப் பத்திரங்களில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
v. 2023.08.03 மு.ப.10.00 அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு, பொறியிடப்பட்ட கேள்விகளை மஹரகம அபேக்ஷா வைத்தியாலை பிரதேச பெறுகைக் குழுவின் தலைவருக்கு பதிவுத் தபாலில் அல்லது மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். பூர்த்தியற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
vi. கேள்விகள் திறக்கப்படும் வேளையில் விண்ணப்பதாரிக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு மாத்திரம் சமுகமளிக்கலாம்.

03. விலைமனுக்களுடன் கேள்விப் பத்திரங்ளை 2023.08.03 மு.ப. 10.30 இற்கு மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் நிதிப் பிரிவில் திறக்கப்படும் மேலதிக விபரங்களை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் கணக்காளரிடம் பெற்றுக் கொள்ளலாம். பிரதேச பெறுகைக் குழுவின் தீர்மானம இறுதித் தீர்மானமாகும்.

தொலைபேசி இலக்கம், 0112839589/ 0112850252/ 0112850253

**தலைவர்**
**பிரதேச பெறுகைக் குழு**
**அபேக்ஷா வைத்தியசாலை, மஹரகம.**

## காணி எடுத்தற் சட்டத்தின் (அத்.460)
## 39 அ (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி எடுத்துக் கொள்ளல் சட்டத்தின் 38 (ஆ) துணை விதியின் கீழ் விளம்பரப்படுத்தப்பட்டதும் இலக்கம் 1892/22 மற்றும் 2014 டிசம்பர் 09ஆம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் விளம்பரப்படுத்தப்பட்டதும். 2017 இலக்கம் 366 ஆம் கட்டளையில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த காணி முற்று முழுதாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசுடைமையாக்கப்பட்டிருந்ததோடு. கட்டளைச் சட்டத்தின் 40ஆம் பிரிவின் (அ) அத்தியாயத்தின் கீழ் காணித்துண்டுகளின் உரிமை எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் அச்சரத்தின் (1979 இலக்கம் 8ஆம் சரத்தில் உட்பட்ட) 39 (அ) 1ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜுடி ஹரீன் பிரனான்து ஆகிய நான் குறித்த காணித்துண்டுகளில் கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டை மாத்திரம் இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் இரத்துச்செய்கின்றேன்.

**ஹரீன் பிரனான்து**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.**

எனது குறிப்பு இலக்கம்:- 4-3/15/2013/VE/418
பிரதேச செயலகத்தின் குறிப்பு இலக்கம் PAS/LND/ACQVI/07/F1/249C/66

2022 நவம்பர் மாதம் 30ஆம் திகதி.
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு**
**மிஹிகத்த மெதுர காணி செயலகம்**
**1200/6 ரத்மல்வத்த பத்தரமுல்ல.**

**அட்டவணை 1**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் பஸ்கொட பிரதேச செயலகப் பிரிவின் மொரவக்கோறளை கிழக்கு சிறு பிரிவிற்குறிய, ஊருபொக்க கிராமத்தில் அமைந்துள்ளதும் (மு.பி.ப இ.23) 2014.10.15ஆம் திகதி நில அளவை அதிபர் அவர்களினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் MR/PAS/2013/703 படத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டிற்கான பெயர்கள் விஸ்தீரணம் மற்றும் எல்லைகள் பின்வருமாறாகும். (மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2311/35 மற்றும் 2022.12.22 ஆம் திகதிய வர்த்தமானியைப் பார்க்கவும்)

காணியின் பெயர் - அத்தனேகும்புர. தம்பிலியேகும்புர. அல்லது தம்பிலியேவெல்யாய துண்டு குறியீடுகள் A.B.C.D.E.F.G

# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| GD -1XXX | PEUGEOT | 406 | 1998 |
| CAD -1XXX | SUZUKI | ALTO LXI 800 | 2014 |
| **கெப்** | | | |
| LA -8XXX | TATA | 207 DI | 2005 |
| DAA -3XXX | MAHINDRA | BOLERO MAXI TRUCK | 2015 |
| **வேன்** | | | |
| 250 -7XXX | TOYOTA | LH119 | 1992 |
| **லொறி** | | | |
| LK -9XXX | ISUZU | BKG-NPR85AN-ELF | 2010 |
| PP -0XXX | TATA | ACE | 2010 |
| PP -4XXX | TATA | ACE | 2010 |
| PR -3XXX | TATA | ACE | 2011 |
| PS -9XXX | TATA | SUPER ACE | 2012 |
| PX -4XXX | MAHINDRA | MAXXIMO PLUS | 2014 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| GM -0XXX | BAJAJ | BAJAJ AUTO | 2001 |
| GX -4XXX | BAJAJ | BAJAJ AUTO | 2002 |
| HP -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| HQ -1XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| JD -8XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| JG -8XXX | BAJAJ | RE | 2004 |
| JN -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| JT -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| JX -1XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| JX -2XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| QA -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QD -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QD -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QG -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QI -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QS -6XXX | BAJAJ | BAJAJ 4 S | 2009 |
| QU -0XXX | BAJAJ | BAJAJ 4 S | 2009 |
| QW -1XXX | BAJAJ | AR4S-UG | 2009 |
| QX -8XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| YC -1XXX | BAJAJ | AR4S UG | 2010 |
| YP -3XXX | BAJAJ | RE 205 | 2011 |
| YZ -8XXX | BAJAJ | RE205 | 2012 |
| AAB -8XXX | BAJAJ | RE205 | 2012 |
| AAF -3XXX | BAJAJ | RE 205 | 2012 |
| ABB -9XXX | BAJAJ | RE | 2015 |
| ABD -6XXX | BAJAJ | RE | 2015 |
| ABG -4XXX | BAJAJ | RE | 2015 |
| **துவிச்சக்கர வண்டிகள்** | | | |
| BIE -5XXX | YAMAHA | YC 125-5 | 2019 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2023 ஜுலை 13ஆம், 14ஆம், 17ஆம் மற்றும் 18ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2023 ஜுலை 18ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

Mercantile Investments and Finance PLC

**தலைமை அலுவலகம்**
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
**ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350**

www.skillsads.com

## வாழ்க்கைதொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்

கல்வி அமைச்சு

# விலைமனுக் கோரல்

## சுத்தப்படுத்தல் சேவை - 2023/2024

01. வாழ்க்கைதொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் கொள்முதல் குழுவின் தலைவரினால் மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்திற்காக தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மனு பாதுகாப்பு (ரூ.) | மீளச்செலுத்தப்படும் வைப்புத்தொகை (ரு) |
|---|---|---|---|
| UoUT/SUP/NCB/07/01/2023 | சுத்தப்படுத்தல் சேவைகளை வழங்குதல் | 150,000.00 | 2,500.00 |

02. மனுகோரல் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய செயற்படுத்தப்படும்.

03. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்வதற்காக **2023 ஜுலை மாதம் 13 ஆம் திகதியிலிருந்து 2023 ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதிவரை மு.ப.9.00 மணிமுதல் பி.ப.2.00 மணிவரை** கிழமையின் வேலை நாட்களில தொலைபேசி இலக்கம் : **011-2630733** மூலம் உதவி நிதி அலுவலர் (வழங்கல்) வாழ்க்கைதொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம், இலக்கம் 100, கந்தவல, இரத்மலானைக்கு தொடர்புகொள்ளல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

04. தகுதியான மனுதாரர்கள் மனு ஆவணங்களை **2023 ஜுலை மாதம் 13 ஆம் திகதி முதல் 2023 ஆகஸ்ட் 11 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணி முதல் பி.ப.02.00** மணிவரை மீள் செலுத்தப்படாத கட்டணத்தை (ஏதேனும் இலங்கை வங்கி கிளையில் வாழ்க்கைதொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம், கணக்கு இலக்கம் 0070308457, இலங்கை வங்கி, இரத்மலானை கிளை) செலுத்துவதன் மூலம் மற்றும் வாழ்க்கைதொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம், இரத்மலானை, உதவி நிதி அலுவலருக்கு கோரிக்கை ஒன்றினை முன்வைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும்.

05. மனு தொடர்பான கூட்டம் **2023 ஜுலை மாதம் 21 ஆம் திகதி** வாழ்க்கைதொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்திலுள்ள வழங்கல் பிரிவில் **மு.ப.11.00** மணிக்கு இடம்பெறும்.

06. மனு ஆவணங்களை அசல் பிரதிகளுடன் **2023 ஆகஸ்ட் 03 ஆம்** திகதி **பி.ப.2.00** மணிக்கு முன்னர் தலைவர், வழங்கல் குழு, வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம், இல-100, கந்தவல, இரத்மலானை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது பல்கலைக்கழகத்தின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள மனு பெட்டியில் இட முடியும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஒப்பந்தத்தின் இலக்கம், ஒப்பந்தத்தின் விபரம், மனுக்கள் திறக்கப்படும் திகதி" என்பவற்றை குறிப்பிடுதல் வேண்டும். காலதாமதமாக கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

07 மனுக்கோரலானது **2023 ஆகஸ்ட் மாதம் 03** ஆம் திகதி **பி.ப 2.00** மணியுடன் நிறைவுபெறும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் (உரிமம் வழங்கப்பட்ட கடிதத்துடன்) கலந்து கொள்ள முடியும்.

08. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விலை மனுவையோ, விலை மனுக்களையோ அல்லது மனுக்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் பல்கலைக்கழக வழங்கல் குழுவின் பொறுப்பாகும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் வழங்கல் குழு,**
**வாழ்க்கைதொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்,**
**இல.100, கந்தவல,**
**இரத்மலானை.**

தொலைபேசி **: 011 2630733**
தொலைநகல் **: 0112630738**
இணையம் **: www.uovt.ac.lk**
**2023.07.13**

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

## பெறுகை அறிவித்தல்

**LENOVO 36551K1, HP COMPAQ ELITE 8300MT, DELL OPTIPLEX 990 மற்றும் DELL OPTIPLEX 5040 மேசைக் கணனிகள் மற்றும் அது சார்ந்த சகல பொருட்களுக்கான விரிவான பராமரிப்பு**

**செயற்றிட்டத்தின் பெயர்** : LENOVO 36551K1, HP COMPAQ ELITE 8300MT, DELL OPTIPLEX 990 மற்றும் DELL OPTIPLEX 5040 மேசைக் கணனிகள் மற்றும் அது சார்ந்த சகல பொருட்களுக்கான விரிவான பராமரிப்பு 2023/2024

**செயற்றிட்ட இலக்கம்** : IR/PAM/20/28-Com/96/2023

**தேவையான விலைமனுப் பிணை** : 1. விலைமனு பிணைத் தொகை 85,920.00 ரூபா
2. செல்லுபடியாகும் காலம் 2023-12-03ஆம் திகதி வரை

1. ''2023/2024ஆம் வருடங்களில் LENOVO 36551K1 (210 எண்ணிக்கை), HP COMPAQ ELITE 8300MT (34 எண்ணிக்கை), DELL OPTIPLEX 990 (33 எண்ணிக்கை), DELL OPTIPLEX 5040 (500 எண்ணிக்கை) மேசைக் கணனிகள் மற்றும் அது சார்ந்த சகல பொருட்களுக்கான விரிவான பராமரிப்பு'' எனும் பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் (மேல்நிலை) பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

2. இதில் உள்ளடங்கும் பராமரிப்பு சேவைக் காலமானது பின்வரும் திகதியில் ஆரம்பித்து 2024-09-14ஆம் திகதியில் நிறைவடையும்.

| கணனிகளின் எண்ணிக்கை | ஆரம்பிக்கப்படும் திகதி | நிறைவடையும் திகதி |
|---|---|---|
| 777 | 2023-09-15 | 2024-09-14 |

3. தேசிய போட்டி ரீதியிலான செயற்பாடுகளுக்கமைய விலைகோரல் நடைமுறைகள் இடம்பெறும்.

4. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெறுவதற்கு பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   i. விலைக்கோரும் நேரத்தில் மற்றும் ஒப்பந்தத்தைக் கையளிக்கும் நேரத்தில் ஒப்பந்தக்காரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இது தொடர்பில் சத்தியக் கடதாசி ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
   ii. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வியாபார நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.
   iii. இலங்கையின் அரசாங்கத் திணைக்களங்கள்/ அரச பொறுப்பேற்றல்கள் / தன்னாட்சி அமைப்பு / கூட்டு நிறுவனங்களுடன் குறைந்தபட்சம் 3 வருடங்கள் முன்னைய பராமரிப்பு சேவை ஒப்பந்தக்காரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   iv. விலைமனுதாரர் கொழும்பு மற்றும் ஏனைய பிராந்திய கிளைகளில் பரீட்சிதல் / திருத்தவேலை நிலையத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   v. விலைமனுதாரர்கள் LAN கீழ் Windows சூழலைக் கொண்ட 100 எண்ணிக்கைக்கும் மேற்பட்ட கணனிகள் சார்புடையவற்றை பராமரிப்பதை குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் திருப்திகரமாக நிறைவேற்றியிருத்தல் வேண்டும் என்பதுடன் அதில் இரண்டு வகை LENOVO, HP அல்லது DELL கணனிகளுக்காகவிருத்தல் வேண்டும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 7ஆம் மாடியிலுள்ள தகவல் தொழில்நுட்ப நிர்வாக சேவைக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி: 011-2134708) மற்றும் 2023-07-13ஆம் திகதி முதல் 2023-08-02ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பின்வரும் முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

6. ஆர்வம் கொண்ட விலைமனுதாரர்கள் கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்துருவிலான விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2023-07-13ஆம் திகதி முதல் 2023-08-02ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

7. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை 2023-08-03ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை), பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவப் பிரிவு, 15ஆம் மாடி, உள்நாட்டு இறைவரி திணைக்களம், ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாடித்தை, கொழும்பு-02 எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக்கோரல்கள் முடிவுற்ற உடனடுத்து அவைகள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது விலைக்கோரலின் கலந்துகொள்ள தெரிவுசெய்யப்பட்ட அவரது பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

8. விலைமனுக்கள் 2023-11-03ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

9. சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்ட விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வங்கி உத்தரவாதமாக மட்டும் ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா (120,000.00 ரூபா) பெறுமதியான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணை முறியானது 2023-12-03ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),**
**உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கொழும்பு 02.**

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

**மாகாணங்களுக்கிடையேயான பயணிகள் போக்குவரத்திற்குரிய சேவை அனுமதிப்பத்திரங்களை வெளியிடுவதற்கான கேள்விக்கோரல்**

### பிழைகளை திருத்தம் செய்தல்

மாகாணங்களுக்கிடையேயான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவற்காக **2023.07.11ம்** திகதி தினகரன் பத்திக்கையில் வெளியிடப்பட்ட கேள்விக்கோரல் விளம்பரத்தில் ஒப்பந்த இல 28,29,30 மற்றும் 31 தொடர்பாக.

கேள்விக்கோரல் ஒப்பந்த இல 30 கீழ் வெளியிடப்பட்ட விளம்பரத்தில் உள்ள அச்சுப்பிழைகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

இத்திருத்தங்களை தவிர **2023.07.11ம்** திகதி தினகரன் பத்திக்கையில் வெளியிடப்பட்ட கேள்விக்கோரல் விளம்பரத்தில் குறிப்பிட்ட ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றங்களும் ஏற்படாது. அவ்விடயங்கள் அவ்வாறே காணப்படும்.

| உள். இலக்கம் | வீதி இலக்கம் | பயண தொடக்கம் | வீதி | | வழங்கவிருக்கும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | சேவை | நாளொன்றுக்குரிய பயணங்களின் எண்ணிக்கை | பேருந்து கட்டணம் | குறைந்த கேள்விக் கட்டணம் | திருத்தப்பட்ட குறைந்த கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஊடாக | பயண முடிவு | | | | | | |
| 1 | 87 | கொழும்பு (வெள்ளவத்தை) | புத்தளம், அநுராதபுரம், வவுனியா | யாழ்ப்பாணம் | 4 | சொகுசு | 1 | 2,440.00 | 1,100.00 | 1,100,000.00 |
| 2 | 87 | யாழ்ப்பாணம் | வவுனியா, அநுராதபுரம், புத்தளம் | கொழும்பு (வெள்ளவத்தை) | 4 | சொகுசு | 1 | 2,440.00 | 1,100.00 | 1,100,000.00 |

**தலைவர்,**
**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, இல-241, பூங்கா வீதி, கொழும்பு 05.**

சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சகம்

## போதனா வைத்தியசாலை — பேராதெனிய

## கொள்முதல் அறிவிப்பு

### மருத்துவ உபகரணங்கள் வழங்கல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல் – 2023

போதனா வைத்தியசாலை - பேராதெனிய பிராந்திய கொள்முதல் குழு 2023 ஜுலை 13 முதல் 2023 ஜுலை 28 திகதி மதியம் 1.30 மணி வரை பின்வரும் மருத்துவ உபகரணங்களை வாங்குவதற்கான மற்றும் மருத்துவமனை சேவைகள் ஏலங்களை அழைக்கிறது.

| | மருத்துவ உபகரணங்கள் | அளவு |
|---|---|---|
| 01 | Battery Operated Trauma Orthopedic Drill System | 01 |
| 02 | Pneumatic Trauma Orthopedic Drill System | 01 |

மேலதிக தகவல்களை போதனா வைத்தியகாலை - பேராதெனிய அதிகாரபூர்வ வலைத்தளமான **www.peradeniya-hospital.health.gov.lk** இலிருந்து பெறலாம்.

**எச்,எம்,ஏ, திலகரத்ன,**
**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**பேராதெனிய.**

# INVITATION FOR BIDS (IFB)

## KARACHCHI PRADESHIYA SABHA KILINOCHCHI DISTRICT

01. The Chairman, Local Authority, Procurement Committee (LAPC) on behalf of the Karachchi Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for Construction of Sivasuntharam Road Pravipanchan, Karachchi Pradeshiya Sabha, Kilinochchi Region as described below.

| No | Contract No | Contract Name | Tentative Estimated Cost (Without VAT) (Rs. Mn) | Required Minimum CIDA Grade | Contract Period |
|---|---|---|---|---|---|
| 01 | NP/KN/KPS/2023/PSDG-1 | **Construction of Sivasuntharam Road, Pravipanchan, Karachchi Pradeshiya, Sabha Kilinochchi Region** | 8.695 | C8,C7& C6 (Highways) | 98 Days |

02. Bidding will be conducted through **National Competitive Bidding** (NCB) procedure. And Public Finance Circulars No. 03/2020 (i) and 04/2016 dated 11.01.2021 and 18.02.2021 respectively will be adopted.
03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Highway Construction** for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).
04. Qualification requirements are indicated in Section 5 (Bidding Data , Schedule and Contract Data) of the Bidding document.
05. Interested bidders may obtain further information from **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi**, (T.P No: 0212285761, Fax No: 021285690) and inspect the bidding documents at the address given below from **13th July 2023** to **27th July 2023** between **09:00 Hrs** and **14:00 Hrs** on normal working days.
06. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi** from **13th July 2023** to **27th July 2023** between **09:00 Hrs and 14:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Two Thousand Rupees (Rs.2,000.00)**. The method of payment will be by cash.
07. Bids shall be delivered in duplicate to the address of: **Chairman, Procurement Committee, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi** at or before **14.00 Hrs on 27th July 2023**. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
08. Bids shall be valid up to **(77 days) 12th October, 2023**. All bids shall be accompanied by a Bid Security of Rs.87,000.00. Bid Security shall be valid up to **09th November, 2023.**
09. A pre-bid meeting will be held at 11.00 Hrs on **20th July 2023** at **Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi.**

**Chairman,**
**Procurement Committee,**
**Karachchi Pradeshiya Sabha,**
**A9 Road,**
**Kilinochchi.**
13.07.2023

# பெறுகை அறிவித்தல்

## போதனா வைத்தியசாலை - குருநாகல்

குருநாகல் போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழுவினால் கீழ்க்காணும் ஆய்வுகூட உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | விபரம் | அளவு | கேள்விப் பிணை பெறுமதி | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | Binocular Microscope | 08 | 125,000.00 | 5,000.00 |

02. தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்துள்ள NMRA சான்றிதழைப் பெற்றுள்ள நிறுவனங்கள் மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை இவ் வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை சமர்ப்பித்த பின்னர் குறித்த கேள்வி ஆவணங்கள் மற்றும் தொழில்நுட்ப மாதிரிகளை கணக்குப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் விநியோகித்தல் 2023.08.03 பி.ப. 3.00 வரை மட்டுமே.

03. ரூ. 5,000,000.00 இற்கு மேற்பட்ட பெறுமதியுடைய கேள்விக்காக PCA3 சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. 06 மாதத்திற்கு செல்லுபடியாகுமாறு எந்த வங்கி அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் வங்கியொன்றில் கேள்விப் பிணைத் தொகையை வைப்புச் செய்து கேள்விப் பிணைச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

05. சகல விண்ணப்பங்களும் 2023.08.04 மு.ப. 10.00 இற்கு முன்பு தலைவர், பிரதேச பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, குருநாகல் என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அவ்வாறு இல்லையெனில் இவ் வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த உபகரணத்தின் பெயரைக் குறிப்பிட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வேறுவேறாக சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

06. இது பற்றிய கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023.07.25ம் திகதி மு.ப. 10.00 இற்கு பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

07. விலைமனுக்கள் திறத்தல் 2023.08.04 மு.ப. 10.00 இற்கு பணிப்பாளர் பணிமனையில் இடம்பெறுவதுடன் அவ் வேளையில் உங்களுக்கு அல்லது உங்களது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

08. இப் பெறுகை சம்பந்தமாக இறுதி முடிவு எடுத்தல் குருநாகல் போதனா வைத்தியாசலையின் பெறுகைக் குழுவைச் சாரும்.

09. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் தொ.பே. இலக்கம் 037-2222261- நீடிப்பு இல. 2261 ஐ அழைத்து கணக்குப் பிரிவில் விசாரித்து அறியலாம். இவ் அறிவித்தல் www.kurunegalahospital.health.gov.lk என்ற வைத்தியசாலையின் இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை**
**குருநாகல்.**

# விலை மனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனு கோரல் முடிவுத் திகதி | விலை மனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| **சேவைகள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/23/095** வாடகைக்கு வான் - மின் அத்தியட்சகர் - I (திட்டமிடல்) - பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை (இரண்டு வருட காலம்) | 26-07-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச மின் பொறியியலாளர் அலுவலகம், வாழைச்சேனை 065-2258882 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/23/048** திருகோணமலை கப்பல்துறை VIP சுற்றுலா விடுதிக்கான சுத்திகரிப்புச் சேவை கோரல் (இரண்டு வருட காலம்) | 26-07-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666, 026-2221030 | 2250.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித் தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவுத் திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்து மூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி.சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை. பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவுத் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

# பெறுகை அறிவித்தல்

## சுகாதார அமைச்சு

## பொது வைத்தியசாலை - கேகாலை

01. கேகாலை பொது வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2023-08-03ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் படிவங்கள் அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்கு திறக்கப்படும்.

| தொ. இல. | I வேலை விபரம் | II பொறியியல் மதிப்பீட்டுத் தொகை | III ஆகக் குறைந்த பதிவு | IV கேள்விப் பிணை முறியின் பெறுமதி ரூபா | V கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | VI ஒப்பந்தக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | கழிவுப்பொருள் முகாமைத்துவ பிரதேசத்தில் பாதுகாப்பு பக்கச் சுவரை நிர்மாணித்தல் | ரூ. 4.8 மில்லியன் | CIDA C8 | 50,000.00 | 1,500.00 | 91 நாட்கள் |
| 02 | பொது சுகாதார பிரிவிற்கு அலகொன்றை நிர்மாணித்தல் (கொள்கலன் பெட்டியொன்றை நவீனமயப்படுத்தி வழங்கி பொருத்துதல்) | ரூ. 2.7 மில்லியன் | CIDA C8 | 26,000.00 | 1,500.00 | 60 நாட்கள் |

02. மேற்படி வேலைகளுக்காக நிர்மாண அபிவிருத்தி அதிகார சபை (CIDA C7) அல்லது தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் சங்கத்தின் அங்கத்துவத்தைக் கொண்ட அல்லது அதற்குச் சமமான தகைமைகளைக் கொண்ட நிறுவனங்கள் மேற்படி அட்டவணையில் (II) நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அல்லது அதற்கு மேற்பட்ட பதிவைக் கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் கேள்விகளைச் சமர்ப்பிக்கத் தகுதியுள்ளவர்களாவர்.

03. 2023-07-14ஆம் திகதி முதல் 2023-08-02ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான காலத்தில் மேற்படி அட்டவணையில் (V) நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியைச் செலுத்தி, கேகாலை பொது வைத்தியசாலையின் நிறுவனப் பிரிவில் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களுடன் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட கேள்விப் பிணை முறியுடன் 2023-08-23ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கேகாலை பொது வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடல் வேண்டும் அல்லது தலைவர், பெறுகைக் குழு, பொது வைத்தியசாலை, கேகாலை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். உங்கள் கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் …………………. (அட்டவணையில் 1ன் பிரகாரம் வேலை விபரங்கள்) எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

05. மேற்படி வேலை விடயங்கள் தொடர்பில் கேள்விப் படிவங்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னரான கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2023-07-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறும்.

06. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் கேகாலை பொது வைத்தியசாலையின் நிறுவனப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 035-2222261 (நீடிப்பு 330)

07. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமென்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பொது வைத்தியசாலை,**
**கேகாலை.**

# கேள்விக்கான அழைப்பு

## விவசாய அமைச்சு

## விவசாயத் திணைக்களம்

பேராதனை விவசாயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் கீழ்க்காணும் நிர்மாணங்களுக்காக அறிவித்தலில் தரப்பட்டுள்ள சீடா (CIDA) பதிவுள்ள கேள்விதாரர்களிடமிருந்து இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன.

2023.07.13 முதல் 2023.08.02 பி.ப. 2.00 வரை அலுவலக நேரங்களில் இத் திணைக்களத்தின் பொறியியல் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்த்து அறிவித்தலில் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை செலுத்திய பின்பு பெற்றுக் கொள்ள முடிவதுடன் 2023.08.03 மு.ப. 10.30 இற்கு முன்பு இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணத்தில் குறிப்பிட்டு அங்கு வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அல்லது பதிவுத் தபாலில் அனுப்புவதன் மூலம் கேள்விகளை ஒப்படைக்கலாம். அன்றே மு. ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும். அதற்காக கேள்விதாருக்கு அல்லது அவரது எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். மேற்படி வேலை பற்றிய மேலதிக தேவையான தகவல்கள் இருப்பின் விவசாயத் திணைக்களத்தின் பொறியியல் பிரிவிற்கு வருகைதந்து அல்லது கீழ்க்காணும் தொலைபேசி இலக்கம் மூலம் விசாரித்து அறியலாம்.

கேள்வி ஆவணங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதி, நேரம் குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

| வேலையின் தன்மை | பதிவு வகுதி (CIDA) (கட்டிட நிர்மாணம்) | கேள்வி வைப்பு (விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில்) | | |
|---|---|---|---|---|
| | | மீளளிக்கப்படாத (ரூ.) | மீளளிக்கப்படும் | |
| | | | காசாக எனில் (ரூ.) | வங்கிப் பிணை மூலமாயின் (ரூ.) |
| 1. பதலகொட விதை உறுதி செய்யும் சேவைக்கு உரித்தான அலுவலக கட்டிடத்தை நிர்மாணித்தல் கட்டம் - 03 (ரூ. 10,577,031.38) | C - 05<br>C - 06<br>C - 07 | 5000.00 | 105,000.00 | 211,000.00 |
| 2. பட்டஅத்த விதை உறுதி செய்யும் சேவைக்கு உரித்தான அலுவலக கட்டிடத்தை புதுப்பித்தல் (ரூ. 3,822,933.64) | C - 07<br>C - 08<br>C - 09 | 2500.00 | 38,000.00 | 76000.00 |
| 3. சரசவி மாவத்த இல. 03 அரச வீடமைப்பின் வலை வேலி மற்றும் வாயிற்கதவைப் பழுது பார்த்தல் - கட்டம் 02 (ரூ. 3,473,664.00) | C - 07<br>C - 08<br>C - 09 | 2500.00 | 34,700.00 | 69,400.00 |
| 4. நிதிப் பிரிவில் புதிய கட்டிடத்தின் மேல் மாடியில் மலசல கூட அமைப்பை நிர்மாணித்தல் (ரூ. 6,110,083.00) | C - 06<br>C - 07<br>C - 08 | 3000.00 | 61,100.00 | 122,200.00 |
| 5. அக்குனுகொலபெலெஸ்ஸ பிரதேச பொறியியல் சேவை வட்டாரத்தை பழுது பார்த்தல் (ரூ. 5,571,256.20) | C - 06<br>C - 07<br>C - 08 | 3000.00 | 55,500.00 | 111,400.00 |

**பிரதம பொறியியலாளர்,**
**பெறுகைக் குழுத் தலைவர்,**
**பொறியியல் பிரிவு,**
**விவசாயத் திணைக்களம், பேராதனை.**
**தொலைபேசி இலக்கம்: 081-2388006/081-2388126**
**பெக்ஸ்: 081-2384308**

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/05/PT/6477(MP) | 12 Nos. Boom Hoist Wire Rope | 216,000.00 | 3,500.00 | 2023.08.10 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/LP/23/PT/14/031 | 500 Nos. 300W Warm White LED Flood Lights | 500,000.00 | 12,500.00 | 2023.08.03 ஆம் திகதியன்று பி.ப.1.30 மணிக்கு |
| CES/LP/23/PT/08/054 | 1080 KGS. Grease EP 02 | 24,000.00 | 1,000.00 | 2023.08.03 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/PT/17/059 | 04 Set Motor Tyres 1400X24 24PR (with Tubes and FLAPS) | 19,000.00 | 1,000.00 | 2023.08.03 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/PT/01/058 | 75 Nos. of Flood Lamp 300W LED | 150,000.00 | 3,500.00 | 2023.08.04 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொதுஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

5. 2023 ஜூலை 14 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம் பணக் கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலேகுறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 011-2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**


Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

Gayani - 077 7 278 948 / 011 2 429 342/ 343 / Piyumi - 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361


# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## பொலன்னறுவ மாவட்ட செயலகம்

## Procurement of Services for development of Web Base Citizen Care System for District Secretariat

**POL/DST/FRM/09/CDLG**

1. **Web Based Citizen Care System** ஐ வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொலன்னறுவ மாவட்ட செயலக மாவட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

2. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் உரித்தான துறையில் வியாபாரப் பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.

3. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 027-2222061 என்ற தொலைபேசி / தொலைநகல் இலக்கங்களினூடாகவும் **accpolon@gmail.com** என்ற மின்னஞ்சலூடாகவும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும் பொலன்னறுவ, புதிய நகரம், பொலன்னறுவ மாவட்ட செயலக பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

5. 2023 ஜூலை 13 ஆம் திகதியிலிருந்து 2023 ஒகஸ்ட் 02 ஆம் திகதியன்று வரையும் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் பொலன்னறுவ மாவட்ட செயலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

6. கேள்வி ஆவணத்தைப் பெறுவதற்கு முன்னராக மீளளிக்கப்படாத கட்டணமாக 2,500 இலங்கை ரூபாவை பொலன்னறுவ மாவட்ட செயலக சிறாப்பரிடம் வரவு வைக்கப்படல் வேண்டும்.

7. 2023 ஒகஸ்ட் 3 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் தலைவர், மாவட்ட பெறுகைக் குழு, பொலன்னறுவ மாவட்ட செயலகம், புதிய நகரம், பொலன்னறுவ என்று முகவரியிடப்பட்டு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

8. 2023 ஜூலை 20 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு பொலன்னறுவ மாவட்ட செயலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறுமென்பதுடன் ஆர்வமுள்ள விலைமனுதராரர்கள் விலைமனு முன்னோடிக் கூட்டத்தில் பங்கு பங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

9. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 63 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

10. அனைத்து விலைமனுக்களும் 60,000 இலங்கை ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது விலைமனுவின் செல்லுபடியாகும் தன்மைக்கப்பால் 28 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். (இந்த உத்தரவாதமானது பொலன்னறுவ மாவட்ட செயலக சிறாப்பரின் பிரிவிலிருந்து அல்லது பொலன்னறுவ மாவட்ட செயலாளரின் பெயரில் மத்திய வங்கியுடன் பதிவு பெற்ற வர்த்தக வங்கியொன்றிலிருந்து விலைமனுக்கோரல்களை திறக்கும் திகதியிலிருந்து 3 மாதங்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வங்கி உத்தரவாதமொன்றாக பெறப்பட்டிருத்தல் வேண்டும்)

11. பொலன்னறுவ மாவட்ட செயலக மற்றும் மாவட்ட செயலகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வேறேதாவது நிறுவனத்தின் ஊழியரொருவருடன் நெருங்கிய குடும்ப உறவைக் கொண்டிருக்கம் ஊழியரொருவர் அல்லது கம்பனியொன்று அல்லது தனிநபரொருவர் ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதியை கொண்டிருக்க மாட்டார்.

12. பொலன்னறுவ மாவட்ட செயலக மாவட்ட பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும். மேலும், பொலன்னறுவ மாவட்ட செயலக பெறுகைக் குழுவானது எந்தவொரு காரணரங்களையும் முன்வைக்காமல் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டிருப்பதுடன் பொலன்னறுவ மாவட்ட செயலக பெறுகைக் குழுவானது விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக வளமுள்ள விலைமனுதாரர்களுக்கேற்படும் எவ்வித ஆகுசெலவுகள் அல்லது எவ்வித செலவினங்களுக்கும் பொறுப்பேற்க மாட்டாது.

**W.A. Dharmasiri,**
**மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,**
**பொலன்னறுவ.**
**தொலைபேசி: 027-2222061**
**தொலைநகல் இலக்கம்: 027-2222061**

# ஒருநாள் போட்டிக்கு 2027இல் கட்டுப்பாடு



2027 உலகக் கிண்ண போட்டிக்கு பின்னர் ஒருநாள் சர்வதேச போட்டிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு மரில்போன் கிரிக்கெட் கழகம் (எம்.சி.சி) பரிந்துரைத்துள்ளது.

போட்டியின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் போட்டி அட்டவணையில் போதிய கால இடைவெளியை பெறுவதற்காகவும், வளர்ந்து வரும் நாடுகளில் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு நிதி ஒன்றை உருவாக்குவதற்காகவுமே இந்த பரிந்துரையை செய்துள்ளது.

லோடஸில் அண்மையில் நடந்த ஆஷஸ் டெஸ்டின்போதே கிரிக்கெட் விதிகளின் காவலராக உள்ள எம்.சி.சி ஒன்று கூடி தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. இதில் குறிப்பாக ஆடவர் இரு தரப்பு ஒருநாள் சர்வதேச போட்டிகளை மட்டுப்படுத்த பரிந்துரை செய்துள்ளது. கிரிக்கெட்டின் 2023–27 பருவத்திற்கு பின்னரே இதனை நடைமுறைப்படுத்த கோரப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னாள் அணித் தலைவர் குமார் சங்கக்காரவும் இடம்பெற்றுள்ள 13 அங்கத்தவர்களைக் கொண்ட எம்.சி.சி, கிரிக்கெட் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து விவாதிக்க வருடத்திற்கு இரு முறை கூடுகிறது. இங்கிலாந்து முன்னாள் அணித் தலைவரான மைக் கெட்டின் தலைமையிலான இந்தக் குழு, சர்வதேச அளவில் இந்த விளையாட்டை மீளமைக்க வேண்டிய நேரம் வந்திப்பதாக தெரிவித்துள்ளது.

“ஒவ்வொரு உலகக் கிண்ணத்திற்கும் முந்தைய ஒரு வருடத்தைத் தவிர, இருதரப்பு ஒருநாள் சர்வதேச போட்டிகளை நீக்குவதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட்டின் தரத்தை அதிகரிக்க முடியும்” என்று எம்.சி.சி. வெளியிட்ட அறிவிப்பில் பரிந்துரைத்துள்ளது.

இது சர்வதேச கிரிக்கெட் நாட்காட்டியில் கால இடைவெளியை ஏற்படுத்த உதவும் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

# சாமரி, ஹர்ஷிதாவின் சாதனை இணைப்புடன் இலங்கை வெற்றி



சாமரி அத்தபத்து மற்றும் ஹர்ஷிதா சமரவிக்ரமவின் சாதனை இணைப்பாட்டத்தின் மூலம் நியூசிலாந்து மகளிர் அணிக்கு எதிரான மூன்றாவது டி20 போட்டியில் இலங்கை மகளிர் அணி 10 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

நியூசிலாந்து மகளிர் அணி ஏற்கனவே டி20 தொடரை 2–0 என கைப்பற்றிய நிலையிலேயே இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி கொழும்பு, பீ சரா ஓவல் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட நியூசிலாந்து மகளிர் அணி 20 ஓவர்களுக்கும் 9 விக்கெட்டுகளை இழந்து 140 ஓட்டங்களை பெற்றது. மத்திய வரிசையில் வந்த அணித் தலைவி சோபி டிவை 25 பந்துகளில் 2 பௌண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்களுடன் 46 ஓட்டங்களை பெற்றார்.

பந்துவீச்சில் இனோகா ரனவீர 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு சுகந்திகா குமாரி 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.




இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த இலங்கை அணியை ஆரம்ப வீராங்கனைகளாக சாமரி மற்றும் ஹர்ஷிதா இருவரும் வெற்றி வரை அழைத்துச் சென்றனர். இதன்படி இலங்கை அணி விக்கெட் இழப்பின்றி 14.3 ஓவர்களில் 143 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

சாமரி அத்தபத்து 47 பந்துகளில் 13 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 80 ஓட்டங்களை பெற்றதோடு ஹர்ஷிதா சமரவிக்ரம 40 பந்துகளில் 7 பௌண்டரிகளுடன் ஆட்டமிழக்காது 49 ஓட்டங்களை பெற்றார்.

இதன்போது டி20 சர்வதேச போட்டிகளில் இலங்கை மகளிர் அணியின் அதிகூடிய இணைப்பாட்ட ஓட்டங்களாக இது சாதனை படைத்தது. இதற்கு முன்னர் கடந்த பெப்ரவரியில் நடந்த பங்களாதேஷுக்கு எதிரான டி20 போட்டியில் ஹர்ஷிதா சமரவிக்ரம மற்றும் நிலக்ஷி டி சில்வா 4 ஆவது விக்கெட்டுக்காக பெற்ற 104 ஓட்ட இணைப்பாட்டமுமே சாதனையாக இருந்தது.

# தினகரன் ஏற்பாட்டில் பேருவளையில் உதைபந்து, கிரிக்கெட் போட்டிகள்

தர்கா நகர் வை.எம்.எஸ்.சி விளையாட்டுக் கழகத்திற்கும் பேருவளை பர்பரின் விளையாட்டு கழத்திற்கும் இடையிலான 45 வயதுக்கு மேற்பட்டோருக்கானஉதைப்பந்தாட்ட போட்டி எதிர்வரும் ஜூலை 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தினகரன் பத்திரிகையின் 91ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் இந்தப் போட்டி பேருவளை மாளிகாஹேன ஸெம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் தர்கா நகர் தாஹிர் பாஸி தலைமையிலான அணிக்கும் மாளிகாஹேன ஸன் ரோஸ் அணிக்கும் இடையிலான 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டி ஒன்றும் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டுக் குழு தலைவர் எம். பாஸி ஸுபைர் தெரிவித்தார்.

# அமெரிக்க டி20 லீக்கில் ஆட தசுன் ஷானக்கவுக்கு அனுமதி

அமெரிக்காவில் இன்று (13) ஆரம்பமாகவுள்ள மேஜர் லீக் டி20 தொடரில் ஆடுவதற்கு இலங்கை ஒருநாள் மற்றும் டி20 அணித் தலைவர் தசுன் ஷானக்கவுக்கு இலங்கை கிரிக்கெட் சபை அனுமதி அளித்துள்ளது.

இந்தத் தொடரில் சியாட்டல் ஓர்காஸ் அணிக்காக தசுன் ஷானக்க விளையாடவுள்ளார்.

இலங்கை வீரர்கள் வருடத்திற்கு இரண்டு வெளிநாட்டு லீக் போட்டிகளில் மாத்திரம் ஆட கட்டுப்பாடு விதிக்கப்பட்டதை அடுத்து முன்னதாக இந்த மேஜர் லீக் தொடரில் பங்கேற்பதற்கு தசுன் ஷானக்கவுடன் சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்கவுக்கு இலங்கை கிரிக்கெட் சபை அனுமதி மறுத்திருந்தது.



எனினும் அமெரிக்கா செல்ல அனுமதி கிடைத்ததை அடுத்து தசுன் ஷானக்க சிம்பாப்வேயில் இருந்து நேரடியாக சியாட்டல் ஓர்காஸ் அணியுடன் இணைந்துள்ளார். எனினும் வனிந்து ஹசரங்க இந்தத் தொடரில் ஆடாத நிலையில் இலங்கை திரும்பியுள்ளார்.

# ரொக் சலஞ்சர்ஸ் வெற்றி



பாலமுனை விசேட நிருபர்

பொத்துவில் அல்–இஸ்ஸத் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட மின்னொளி மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பொத்துவில் ரொக் சலஞ்சர்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

களப்புக்கட்டு இறால்பாம் பொது மைதானத்தில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பவர்போய்ஸ் அணியை எதிர்கொண்ட ரொக் சலஞ்சர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 57 ஓட்ட வெற்றி இலக்கை 5 விக்கெட்டுகளை இழந்து எட்டியது.

ஆட்ட நாயகன் விருதை சஜீர் வென்றதோடு தொடர் நாயகனாக அக்ரம் தெரிவானார்.

# றிகாஸுக்கு தங்கம்



இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட கிழக்கு மாகாண வருடாந்த கராத்தே போட்டியில் எம்.எம். றிகாஸ் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியின் சொடகன் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்ற அவர் காடே போட்டியில் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

# பயிற்சி போட்டியில் பாகிஸ்தான் ஆதிக்கம்



இலங்கை கிரிக்கெட் சபை தலைவர் அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையில் நடைபெற்ற இரண்டு நாள் பயிற்சிப் போட்டி வெற்றி தோல்வி இன்றி சமநிலையில் முடிந்தபோதும் இந்தப் போட்டியில் பாகிஸ்தான் முழு ஆதிக்கம் செலுத்தியது.

ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற இந்தப் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று (12) தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த பாகிஸ்தான் அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 342 ஓட்டங்களை பெற்றது. ஷான் மசூத் 83 ஓட்டங்களை பெற்றதோடு பாபர் அஸாம், சவுத் ஷகீல் இருவரும் முறையே 79 மற்றும் 61 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டர்.

இதன்போது இலங்கை கிரிக்கெட் சபை தலைவர் அணிக்காக லக்ஷித மானசிங்க 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு பிரவீன் ஜயவிக்ரம 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இலங்கை கிரிக்கெட் சபை தலைவர் அணி முதல் இன்னிங்ஸில் 196 ஓட்டங்களையே பெற்ற நிலையில் இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 146 ஓட்டங்களை பெற வேண்டிய நெருக்கடியுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. கடைசி நாள் ஆட்டநேர முடிவின்போது அந்த அணி 88 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி வரும் ஜூலை 16ஆம் திகதி காலியில் ஆரம்பமாகவுள்ளது.

# நீண்ட தூர ஏவுகணையை சோதித்தது வட கொரியா



வட கொரியா தனது கிழக்கு கடற்கரைக்கு அப்பால் நீண்ட தூர பலிஸ்டிக் ஏவுகணையை சோதித்திருப்பதாக அண்டை நாடுகளான தென் கொரியா மற்றும் ஜப்பான் தெரிவித்துள்ளன.

ஒரு மணி நேரத்திற்கு மேல் பறந்திருக்கும் இந்த ஏவுகணை ஜப்பான் கடலுக்கு நெருக்கமாக நேற்று (12) காலை விழுந்துள்ளது.

இது நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணை என்றும் இந்த ஏவுகணை குறித்து ஆய்வு செய்து வருவதாகவும் தென் கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது. இது மாதிரியான ஏவுகணை சோதனைகள் வட கொரியாவின் இராணுவத்தை நவீனமயமாக்கும் கிம் ஜொங் உன்னின் திட்டத்தின் ஒரு பகுதி எனக் கூறப்படுகிறது.

அமெரிக்க உளவு விமானம் ஒன்று தமது ஆட்புலத்திற்குள் ஊடுருவியதற்கு பதிலடி கொடுக்கப்படும் என்று வட கொரியா அண்மையில் எச்சரிக்கை விடுத்த நிலையிலேயே இந்த ஏவுகணை சோதனை நடத்தப்பட்டுள்ளது.

எனினும் இந்த குற்றச்சாட்டை அமெரிக்கா மறுத்திருந்தது.

வட கொரிய புதிய ஆயுத சோதனைகளை தீவிரப்படுத்திய நிலையில் கொரிய தீபகற்பத்தில் பாதுகாப்பு தொடர்பான கவலை அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டிலும் வட கொரிய அமெரிக்கா வரை செல்லக் கூடிய திறன் கொண்ட ஏவுகணை உட்பட பெரும் எண்ணிக்கையான ஏவுகணை சோதனைகளை நடத்தியது.

அமெரிக்கா மற்றும் தென் கொரியாவின் கூட்டு இராணுவப் பயிற்சிக்கு பதிலடியாக கடைசியாக கடந்த ஜூன் நடுப்பகுதியில் வட கொரியா இரு குறுகிய தூர ஏவுகணைகளை சோதித்தது. கடந்த பெப்ரவரியில் அது கண்டம் விட்டு கண்டம் பாகும் ஏவுகணையை கடைசியாக ஏவியமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# உக்ரைன் நேட்டோவில் இணைய கெடு வழங்க தவறியது நேட்டோ

நேட்டோ இராணுவ கூட்டமைப்பில் உக்ரைன் இணைவதற்கான காலக்கெடு ஒன்றை அந்த அமைப்பின் தலைவர்கள் வழங்காததற்கு உக்ரைனிய ஜனாதிபதி விலோடிமிர் செலன்ஸ்கி அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

31 நாடுகளைக் கொண்ட நேட்டோ அமைப்பின் தலைவர்களின் இரண்டு நாள் மாநாடு கடந்த இரு நாட்கள் லிதுவேனிய தலைநகர் வில்னியஸில் நடைபெற்றது. இதில் எதிர்காலத்தில் நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு உறுதி அளிக்கப்பட்டபோதும் அதற்கான காலக்கெடு ஒன்று நிர்ணயிக்கப்படவில்லை.

தனது நாட்டின் மீது படையெடுத்திருக்கு ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைன் பதில் தாக்குதல் நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்தபோதும் அதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் எட்டப்படவில்லை. இந்நிலையிலேயே உக்ரைன் நேட்டோவில் இணையும் முயற்சியை தீவிரப்படுத்தியுள்ளது.




“கூட்டணியினர் ஒப்புக்கொண்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்படும்போது கூட்டணியில் சேர உக்ரைனுக்கு அழைப்பு விடுக்கும் நிலையில் நாம் உள்ளோம்” என்று நேட்டோ வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டபோதும் அதற்கான காலக்கெடு ஒன்று கூறப்படவில்லை.

“உக்ரைனிய அங்கத்துவத்திற்கான அழைப்பு விடுக்கப்படாதது மற்றும் காலக்கெடு நிர்ணயிக்கப்படாதது முன்னெப்போதும் நிகழாத ஒன்றாகவும் அபத்தமானதாகவும் உள்ளது” என்று செலன்ஸ்கி ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார். 2008ஆம் ஆண்டே நேட்டோவில் உக்ரைன் இணையும் என்று நேட்டோ அமைப்பு கூறியது. ஆனால், எப்போது என்று அது குறிப்பிடவில்லை.

ரஷ்யாவுடன் போர் இடம்பெற்று வரும் நிலையில் அதனால் நேட்டோவில் இணைய முடியாது என்பதை உக்ரைன் ஒப்புக்கொண்டபோதும் போர் முடிந்த பின் முடியுமான விரைவில் நேட்டோவில் இணைவதற்கான காலக்கெடுவையே அது எதிர்பார்க்கிறது.

எனினும் உக்ரைனுக்கு பரந்த அளவில் இராணுவ உதவிகளை வழங்க மேற்கத்தேய தலைவர்கள் இந்த மாநாட்டின்போது உறுதி அளித்துள்ளனர். இதில் ஜி7 உறுப்பு நாடுகள் உக்ரைனுடன் நீண்ட கால பாதுகாப்பு ஏற்பாடு ஒன்றை செய்ய திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேட்டோ அங்கத்துவ நாடுகள் உக்ரைனுக்கு உதவிகளை அதிகரிப்பது மூன்றாவது உலகப் போர் ஒன்றையே நெருங்கச் செய்யும் என்று ரஷ்யாவின் பலம்மிக்க பாதுகாப்பு கவுன்ஸிலின் பிரதிச் செயலாளர் டிமிட்ரி மெட்வெடெவ் எச்சரித்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூலை மாதம் 13ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.